SPMC

ශ්‍රී ලංකා රාජ්‍ය ඖෂධ නිෂ්පාදන සංස්ථාව

இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

STATE PHARMACEUTICALS MANUFACTURING CORPORATION OF SRI LANKA

2024

# වාර්ෂික වාර්තාව

# ஆண்டறிக்கை

# ANNUAL REPORT

# 2024
# ஆண்டறிக்கை

SPMC

SCAN HERE

# நாம் யார்

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமானது (SPMC), ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவகத்தின் மூலம் ஜப்பானிய அரசாங்கத்திடமிருந்து மானிய உதவியாக அமைந்த இலங்கை பொதுமக்களுக்கு மலிவு விலையில் தரமான, பயனுள்ள மற்றும் பாதுகாப்பான மருந்துகளை உற்பத்தி செய்வதற்கான உறுதிப்பாட்டுடன் 1957 ஆம் ஆண்டின் 49 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் ஜூன் 1987 இல் இணைக்கப்பட்டது.




நிறுவப்பட்டது
**1987**

வெளியீடு
**3172மி+**
குளிகைகள் மற்றும் கூட்டுக்குளிகைகள்

**342**
ஊழியர்கள்

**01**
அரசுக்குச் சொந்தமான ஒரேயொரு மருந்து உற்பத்தி தொழிற்சாலை

SPMC
இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

# உள்ளடக்கம்

01 அ.ம.கூ. ஸ்தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும்



02 எமது நோக்கும் பணியும




03 எமது பயணம்



04 நிதி மற்றும் செயற்பாட்டு சிறப்பம்சங்கள்



06 தலைவரின் மீளாய்வு



09 பொது முகாமையாளரின் செய்தி




10 பணிப்பாளர்கள்



20 நிறுவன கட்டமைப்பு



# உள்ளடக்கம்


**22**

பணிப்பாளர்களின் அறிக்கை



**24**

கணக்காய்வுக்குழுவின் அறிக்கை



**28**

கூட்டிணை நிறுவன ஆளுகை அறிக்கை



**30**

பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று



**31**

அபாய முகாமைத்துவ அறிக்கை



**33**

நிலையான அபிவிருத்தி இலக்குகள்



**35**

SPMC இனால் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள்



**36**

கூட்டுமுயற்சி உற்பத்தி பொருட்கள்



# உள்ளடக்கம்

40 முழுமையான வருமானக் கூற்று



41 நிதியியல் நிலைமை பற்றிய கூற்று



42 உரிமை முதல்கூற்றில் மாற்றங்கள்



43 காசுப்பாய்ச்சல் கூற்று



45 கூட்டிணைவுத் தகவல்களும், விசேட கணக்கீட்டுக் கொள்கைகளும்



62 கணக்குகளுக்கான குறிப்பு



84 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



97 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை பற்றிய தலைவரின் கருத்துக்கள



# உள்ளடக்கம்

116 பெறுமதி சேர் கூற்று



117 வரைபட மீள்நோக்கு




118 கடந்த 10 ஆண்டுகளின் நிதி தொடர்பான முக்கிய தகவல்கள்



119 கூட்டிணை தகவல்கள்



# அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் தாபிக்கப்பட்டமையும் அதன் பிரதான குறிக்கோள்களும்

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்கக் கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டத்தின் கீழ் 1987ஆம் ஆண்டு தாபிக்கப்பட்டது.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 2024ஆம் ஆண்டில் இலங்கை மக்களின் சுகாதார நலன்களுக்குத் தேவையான முக்கியமான மருந்து வகைகளை வர்த்தக ரீதியில் உற்பத்தி செய்வதில் 37 வருடங்களைப் பூர்த்தி செய்கின்றது. அ.ம. கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகள் 97 குளிகைகள் மற்றும் கூட்டுக் குளிகைகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இந்த உற்பத்திகளில் 49 உற்பத்திகள் இவ்வாண்டில் முனைப்பாக மேற்கொள்ளப்பட்டன. இலங்கையில் மருந்துப்பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு அரச கூட்டுத்தாபனம் அ.ம.கூ. ஆகும்.

அதன் பிரதான நடவடிக்கைகள்:

1)ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கையைச் செய்துகொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல்.
(2) துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல்.
(3) முதலீட்டாளர்களாக வரவுள்ளோருடன் சர்வதேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்.
(4) மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
(5) வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல்.
(6) கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

சந்தைக்கு விடப்படும் எல்லா உற்பத்திகளும் எமது உள்ளக (SPMC) தரக்கட்டுப்பாடுகளுக்கு அமைவாக உள்ளதுடன் பிரித்தானிய பார்மகோபியா (BP) செய்தல ஐக்கிய அமெரிக்க பார்மகோபியா (USP) தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்கின்றன.

தற்போதைய சிறந்த உற்பத்தி நடவடிக்கைகளின் (CGMP) ஒழுங்கு விதிகளையும் நடவடிக்கை முறைகளையும் நடைமுறைப்படுத்தல், ஒழுங்கான உள்ளக தரக்கட்டுப்பாட்டு ஆய்வின் மூலமும் தொழிற்சாலை மேற்பார்வை மூலமும் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றன.

HIGH QUALITY PHARMACEUTICALS
LEADING MEDICINE TO KEEP YOU WELL





## எமது நோக்கு

தெற்காசியாவில் மருந்து மற்றும் சுகாதார பொருட்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் சர்வதேச அங்கீகாரம் பெற்ற மாதிரி நிறுவனமாகத் திகழ்தல்

## எமது பணி

சர்வதேச தரத்திலான உயர்ந்த ரக பாதுகாப்பானதும் பயனுறுதியானதும் விலை குறைவானதுமாக மருந்துப் பொருட்களை உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்காக உற்பத்தி செய்தல்

# எமது பயணம்

கடந்த 37 வருட காலத்தில் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் அதிசிறப்புநிலையை நோக்கி அர்ப்பணிப்புடன் பணியாற்றி பல்வேறு மைல்கற்களை கடந்துள்ளது.













**1987**
500 மில்லியன் உற்பத்தி இயலளவைக்கொண்ட அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தை ஆரம்பித்தல் - 8 மில்லியன்.

**1992**
ஆரம்ப உற்பத்தி இயலளவைத் தாண்டுதல் - 600 மில்லியன்.

**2007**
புதிய வேலை முறைமாற்றொன்றை அறிமுகப்படுத்தல் 1025 மில்லியன

**2009**
உற்பத்தி அளவு இரு மடங்கினால் அதிகரித்தல் - 1194 மில்லியன்.

**2013**
உற்பத்தி அளவு 2000 மில்லியனைத் தாண்டுதல் - 2003 மில்லியன்

**2020**
ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மையின் (ஜைக்கா) உதவியுடன் உற்பத்தி இயலளவை முன்னேற்றுதல் - 3015 மில்லியன்.

**2021**
லெவோதைரொக்சின் குளிகை உற்பத்திக்கென ஒதுக்கப்பட்ட வலையம் ஆரம்பித்தல்.

**2022**
புதிய 09 உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம்செய்தல்

**2023**
புதிய 09 உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகம்செய்தல்

**2024**
ஒரு தர மேலாண்மை அமைப்பை நிறுவுதல்

# நிதி மற்றும் செயல்பாட்டு சிறப்பம்சங்கள்

| | 2024<br>ரூபா. | 2023<br>ரூபா. |
|---|---|---|
| **இயக்க முடிவுகள்** | | |
| வருமானம் | 28,202,081,820 | 29,331,718,691 |
| மொத்த இலாபம் | 2,982,333,530 | 2,949,749,462 |
| தொழிற்பாட்டு இலாபம் | 2,501,841,136 | 1,608,247,748 |
| நிதி வருமானம் | 606,178,870 | 622,548,970 |
| வரிக்கு முந்தைய இலாபம் | 3,083,004,066 | 2,173,308,106 |
| வரிச்செலவுகள் | 926,973,991 | 654,752,799 |
| வருடத்திற்கான இலாபம் | 2,156,030,075 | 1,518,555,307 |
| மொத்த முழுமையான வருமானம் | 2,140,700,000 | 1,532,049,139 |
| | | |
| **நிதி நிலை** | | |
| இருப்புகள் | 4,112,406,987 | 3,911,381,606 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 782,355 | 468,896,309 |
| நடைமுறைச் சொத்துகள் | 14,490,117,937 | 12,020,335,476 |
| மொத்த சொத்துகள் | 18,872,311,823 | 16,517,179,747 |
| மொத்த உரிமை முதல் | 13,293,131,956 | 11,478,973,962 |
| நடைமுறை அல்லாத பொறுப்புகள் | 349,040,919 | 374,934,338 |
| நடைமுறைப் பொறுப்புகள் | 5,230,138,948 | 4,663,271,446 |



**வருமானம்**

ரூ. 28202 மில்லியன்கள்



**நிகர இலாபம் (வரிக்கு முந்திய)**

**ரூ.3083 மில்லியன்கள்**



**உற்பத்தி**

**3,172 மில்லியன்கள்**

# நிதி மற்றும் செயல்பாட்டு சிறப்பம்சங்கள்















# தலைவரின் மீளாய்வு





பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார

# தலைவரின் மீளாய்வு

2024 டிசெம்பர் மாதம் 31ம் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகூற்றினையும் பணிப்பாளர்சபையின் சார்பாக சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமானது உயர்-தரமுள்ள, மலிவான மருந்துகளை நம்பிக்கையாகவும் வினைத்திறனாகவும் தொடர்ச்சியாகவும் வழங்குவது என்னும் சிறப்பான செயற்பாட்டை எங்களுடைய அசைக்கமுடியாத கவனமாகக் கொண்டுள்ளமை எங்களது ஒவ்வொரு தீர்மானத்தையும் வழிகாட்டியது.

## உற்பத்தி செயற்பாடு: நம்பகத்தன்மையும் நிலைபேறான தன்மையும்

2024 இல், அ.ம.கூட்டுத்தாபனமானது, 3172.036 மில்லியன் அலகு மருந்தளவுகளை-2680.25 மில்லியன் குளிகைகள் மற்றும் 491.79 மில்லியன் கூட்டுக்குளிகைகள் -முழுவதுமாக 49 மருந்து வகைகளில் இருந்து உற்பத்தி செய்துள்ளது. GMP இற்கு இறுக்கமான அமைந்தொழுகும் மற்றும் மூன்று உற்பத்தி வேலைநேர முறைமைகளில் உகந்த திட்டமிடலுடன், தேசிய தேவைக்கான நிலையான வழங்கலை நாம் மேற்கொண்டோம்.

## தரமும் உடன்பாடும்: ஒவ்வொரு செயல்முறையையும் வலுப்படுத்தல்

தரமென்பது எமது மூலைக்கல்லாகும். இந்த வருடத்தில் நாம் தே.ம.ஒ.ஆ. இன் இரண்டு கண்காணிப்புகளையும் (பெப்ரவரி 8 மற்றும் 29ம் திகதி), ஆறு கூட்டிணைவு கணக்காய்வுகளையும் எதிர்கொண்டிருந்ததோடு அவை யாவுமே பெரியளவு திருத்தங்களின்றி முடிவடைந்திருந்தன. எமது தர முகாமைத்துவ பொறிமுறை ஆலோசகர், சிறந்த ஆவணப்படுத்தல் செயன்முறைகள் மற்றும் நேர்மையான தரவுகள் என்பவற்றுக்கு அர்ப்பணிக்கப்பட்ட மூன்று அமர்வுகள் உள்ளடங்கலாக 34 பயிற்சி அமர்வுகளையும் நடத்தியிருந்தார். அதனுடன் தர முகாமைத்துவ பொறிமுறையை தரமுயர்த்தப்பட்டதாக்கியதுடன் தர உறுதிப்படுத்தல் திணைக்களமும் விஸ்தரிக்கப்பட்டு வருகிறது. இந்த முன்னெடுப்புக்கள் நடைமுறை பரிசோதனைகளில் இறுக்கமான கட்டுப்பாட்டையும், விலகல்களின் விகிதங்களில் குறைவையும் கொண்டுவந்ததுடன் உ.சு.நி.-சிறந்த உற்பத்தி நடைமுறைகள், பிரித்தானி பார்மகோபியா, ஐக்கிய அமெரிக்க பார்மகோபியா தர நிர்ணயங்களுக்கு அமைவான முழுமையான உறுதிப்படுத்திய உடன்பாட்டினை உறுதிசெய்தது.

## சந்தைக்குரிய தலைமைத்துவமும் நிதிப்பொறுப்பும்

அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனம் 26 பில்லியன் ரூபா பெறுமதியான மருந்துகளை மருந்து வழங்கல் பிரிவிற்கும் 2 பில்லியன் பெறுமதியான தனியார் துறை விநியோகஸ்தர்களுக்கும் வழங்கி, அரச துறையில் 86% பங்கினையும் தனியார்துறை விற்பனை வழிகளில் 14% இனையும் பேணியுள்ளது. 2024ம் ஆண்டுக்கான மொத்த வருவாய் 28.20 பில்லியன் ரூபாய்களை எட்டியுள்ளது. சந்தை தளம்பல் இருந்த போதிலும், ஒழுங்குபடுத்தப்பட்ட செலவு முகாமைத்துவம், மற்றும் இலக்கு வைக்கப்பட்ட உற்பத்தி திட்டமிடல் மற்றும் நிலைபேறான ஆரோக்கியமான நடவடிக்கை இலாபம் என்பன பொதுத்திறைசேரியின் ஆதாரத்தை பெறாமல் எமக்குரிய ஆணையை நிறைவேற்ற உதவியது.

## எமது மனித வளத்தில் முதலிடுதல்: மேன்மைக்கான திறன்கள்

எங்களுடைய செயல்திறனை எமது மனித வளமே இயக்குகிறது. 2024ம் ஆண்டில், ஐ.எஸ்.ஓ. 9001 உள்ளக கணக்காய்வு மற்றும் எச்.பி.எல்.சி./யுவி ஸ்பெக்ரோபோட்டோமெற்றி போன்ற விடயப்பரப்புகளில் 27 வெளியக பயிற்சி பட்டறைகளையும், தர முகாமைத்துவ பொறிமுறையுடன் தொடர்புடைய 34 அமர்வுகளையும் உள்ளடக்கி-நாம் 61 பயிற்சி வழங்கல் நிகழ்வுகளை நடத்தி- 120 இற்கும் மேற்பட்ட ஊழியர்களுக்கு திறன் மேம்பாட்டை வழங்கியிருந்தோம். அத்தோடு, 15 பல்கலைக்கழகங்களை சேர்ந்த உள்ளக பயிலுநர்கள் மற்றும் பட்டப்பின்படிப்பு ஆய்வாளர்களுக்கு வாய்ப்பளித்து நவீன மருந்து உற்பத்தியில் செய்முறை பயிற்சிகளை வழங்கியிருந்தோம். இந்த முயற்சிகள் 87% தக்கவைப்பு வீதத்திற்கும் வலுவூட்டப்பட்ட தொடர்ச்சியான கற்றல் கலாசாரத்திற்கும் பங்களித்திருந்தது.

## மூலோபாய கூட்டிணைவு: ஒன்றிணைந்த வளர்ச்சி

கூட்டுப்பங்காண்மை எங்களுடைய திறன்களை விஸ்தரிக்கிறது. SIMPEX (சிம்பெக்ஸ்) பார்மா இந்தியா உடனான எங்களுடைய தொழிநுட்பம்-பரிமாற்று ஒப்பந்தம், பல கள விஜயங்களையும் மருந்தாக்க உள்ளீடு மூலக்கூறு (API) தொகுப்பிற்கான கூட்டு உற்பத்திக்கான நெறிமுறைகளையும் உள்ளடக்கியுள்ளது. 6 கூட்டு உற்பத்தி பரிசோதனைகள், எமது பகிரப்படும் தர இலக்குகளை உறுதி செய்துள்ளதுடன் எதிர்காலத்தில் ஒப்பந்த அடிப்படையிலான உற்பத்திகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளையும் ஏற்படுத்தியுள்ளது. அத்தகைய ஒன்றிணைவுகள் எமது செயல்முறைகளில் முதிர்ச்சியை துரிதப்படுத்துவதுடன் பிராந்திய மருந்தாக்கல் தொழிற்துறையில் இலங்கையின் நிலையை வலுப்படுத்தவும் செய்கின்றன

# தலைவரின் மீளாய்வு

### உட்பதிக்கப்படும் நிலைபேறான தன்மை: பசுமையான நடவடிக்கை

நடவடிக்கைகளின் மேன்மையான நிலையானது சுற்றுச்சூழல் பொறுப்புணர்வு வரைக்கும் விரிவாக்கப்பட்டது. நாம் எமது 30-வருடங்கள் பழமை வாய்ந்த குளிர்விக்கும் இயந்திரத்தை சக்தி-வினைத்திறன் பொறிமுறையுடைய புதிய இயந்திரத்தினால் மாற்றீடு செய்ய ஆரம்பித்துள்ளோம். எமது பகுப்பாய்வு. எமது பகுப்பாய்வு அணி, முடிவுப்பொருட்கள், உள்ளீட்டு பொருட்கள், பொதியிடல் பொருட்கள், ஸ்திரத்தன்மை ஆய்வுகள், மற்றும் சுற்றுச்சூழல் கண்காணிப்பு என்பவற்றை உள்ளடக்கிய-5547 மாதிரிகளை-பரிசோதித்து இறுக்கமான தரக்கட்டுப்பாடு நடவடிக்கைகள் வினைத்திறனான வளப்பங்கீட்டுடன் நடைபெறுவதை உறுதிப்படுத்தியுள்ளன.

### எதிர்கால கவனம்: மேம்படுத்தப்பட்ட உன்னதத்திற்கான வழிப்படம்

2024 இன் திடமான அடித்தளத்தில் நாம் கட்டியெழுப்ப உத்தேசிப்பது

- எல்லா முக்கியமான உபகரணங்களுக்கும் முன்கூட்டிய பராமரிப்பை செய்தல்
- நவீன வரிசையாக்கம் மற்றும் பிளாக் செயின் முன்னோடி ஆகியவற்றை பயன்படுத்தி வழங்கல் சங்கிலியின் கண்டுபிடிக்கக்கூடிய தன்மையை விஸ்தரித்தல்
- செயன்முறை -பகுப்பாய்வு தொழிநுட்பங்களுக்கிடையில் ஒருங்கிணைப்பை ஏற்படுத்தி தொகுதிகள் விடுவிக்கப்படும் சுழற்சி நேரங்களை சுருக்குதல் மூலம் வேலைத்தள பாதுகாப்பை உயர்த்துதல்
- ஐ.எஸ்.ஓ. 45000 சான்றுப்படுத்தலை தொடர்வதன் மூலம் வேலைத்தள பாதுகாப்பை உயர்த்துதல்
- லீன் செயன்முறை முன்னேற்றும் ஊடாக சுழற்சி நேரத்தில் 10 வீத குறைவை அடைதல்
- தரவுகளை அடிப்படையாகக்கொண்ட தீர்மானம் எடுத்தல் மூலம் மற்றும் இயங்கும் அணிகளை உற்சாகமூட்டல். அ.ம.கூட்டுத்தாபனமானது நம்பகத்தன்மை, தரம் மற்றும் செலவு-வினைத்திறன் என்பவற்றில் புதிய திறனளவுகளை அறிமுகம் செய்யும்.

### ஏற்புரை

இலங்கை மருந்தாக்க தொழிற்துறையின் முன்னேற்றத்திற்கு அவர்கள் வழங்கிவரும் தொடர்ச்சியான அர்ப்பணிப்பிற்காக, இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் மேன்மைதங்கிய சனாதிபதி அனுர குமார திசாநாயக்க அவர்களுக்கு பணிப்பாளர்சபையின் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுகாதாரம் மற்றும் வெகுஜன ஊடக கௌரவ அமைச்சர். டாக்டர். நலிந்த ஜயதிஸ்ஸ மற்றும் பிரதி அமைச்சர் டாக்டர். ஹன்சக விஜேமுனி ஆகியோருக்கும் அவர்களுடைய பெறுமதியான வழிகாட்டல்களுக்காகவும் ஆதரவிற்காகவும் எனது நன்றியை தெரிவிக்கிறேன். சுகாதார அமைச்சின் செயலாளரான டாக்டர். அனில் ஜயசிங்க, டாக்டர். பி.ஜீ.மஹிபால மற்றும் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் ஏனைய அலுவலர்களுக்கும் நன்றியை தெரிவிக்கின்றோம். நிதியமைச்சின் செயலாளரான திரு.மஹிந்த சிறிவர்த்தன மற்றும் அரச பொதுத்திணைக்களங்களுக்கு பொறுப்பான பணிப்பாளர் திரு. பி.ஏ.எஸ். அதுல குமார அவர்களுக்கும் பொதுத்திறைசேரியின் பல்வேறு திணைக்களங்களை சேர்ந்த அதிகாரிகளுக்கும் அவர்களுடைய பங்களிப்பிற்காக நன்றி தெரிவிக்கின்றோம்.

அரச மருந்துக் கூட்டுத்தாபனம் (அ.ம.கூ), மருந்து வழங்கல் பிரிவு, தனியார் மருந்தகங்கள் மற்றும் மருத்துவ தொழில்வாண்மையாளர்கள் ஆகியோருடன் நாங்கள் மேன்மையான உறவுகளை வைத்திருந்தோம். அதனை நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். அவர்கள் எமது கூட்டுத்தாபனத்தின் வெற்றிக்காக அதிகமாக பங்களித்திருந்தார்கள்.
பொது முகாமையாளர், பிரதி பொது முகாமையாளர்கள், முகாமையாளர்கள், நிறைவேற்றுதர அலுவலர்கள் மற்றும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபத்தின் சகல நிலை ஊழியர்களுக்கும், 2024ஆம் ஆண்டில் நேர்நிலை முடிவுகளை அடைவதில் அவர்களின் அர்ப்பணிப்பு பெரிதும் பாராட்டப்படத்தக்கது.

இறுதியாக கூட்டுத்தாபனத்தினை வெற்றியை நோக்கி செலுத்திச் செல்வதில் தமது பெறுமதியான பங்களிப்பையும் வழிகாட்டலையும் வழங்கிவரும் பணிப்பாளர்சபைக்கும் எனது நன்றிகள்.

பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார
தலைவர்
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
2025 ஜூலை 23ம் திகதி

# பொது முகாமையாளரின் செய்தி



அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமானது உ.சு.நி. இனது சிறந்த உற்பத்தி நடைமுறைகள் நிர்ணயங்களுக்கு அமைவாக உயர் தர மருந்து வகைகளை உற்பத்தி செய்வதில் 37 வருடங்கள் துண்டிக்கப்படாத சேவையின் இலக்கை பெருமையுடன் குறித்துக்கொள்கிறது. தசாப்தங்களுக்கு மேலாக அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமானது சீரான வளர்ச்சி மற்றும் புத்தாக்கங்களை நிரூபித்து தனது நிலையை இலங்கை மருந்தாக்கவியல் தொழிற்துறையில் முதன்மையாளராக திடப்படுத்தியுள்ளது. மருந்தாக்கற்துறையில் ஈடுபட்டுள்ள ஒரேயொரு அரச நிறுவனமாக விளங்கும் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், நாட்டிற்கு தேவையான உயர் தரமான மருந்துகளை மலிவாக கிடைக்கச் செய்வதை உறுதி செய்வதில் முக்கிய பங்காற்றியிருக்கிறது. தற்போது கூட்டுத்தாபனமானது இலங்கை மக்களின் பலதரப்பட்ட சுகாதார பராமரிப்பு தேவைகளை பூர்த்தி செய்யும் விதத்தில் வேறுபட்ட மருந்தியல் வகைகளில் பரந்துபட்ட மருந்துகளை பொதுப்பெயரின் கீழ் உற்பத்தி செய்கிறது.

2024ம் வருடத்தில் கூட்டுத்தாபனமானது நிதி ரீதியாகவும் நடவடிக்கை ரீதியாகவும் மைல்கற்களை அடைந்து சாதனை படைத்துள்ளது. அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமானது வரிக்கு முந்திய நிகர இலாபமாக ரூபா. 3083 மில்லியனை அடைந்து காத்திரமான நிதியியல் செயற்பாட்டையும் வினைத்திறனான முகாமைத்துவத்தினையும் பிரதிபலித்து நிற்கிறது. 3172 மில்லியன் அலகு குளிகைகள் மற்றும் கூட்டுக்குளிகைகள் என்னும் உற்பத்தி வெளியீட்டை கொண்டிருந்து கூட்டுத்தாபனமானது தரத்தை பராமரித்த வண்ணம் நடவடிக்கைகளை அதிகரிக்க கொண்டுள்ள திறனை காண்பித்து நிற்கிறது. மேலதிகமாக, அ.ம.கூ. ரூபா. 28,202 மில்லியன் எனும் விற்றுமுதலை அடைந்து மருந்தாக்கற் தொழிற்துறையில் தன்னை முக்கிய பங்காளராக உறுதிப்படுத்தியுள்ளது.

எஸ்.பி.எம்.சி யானது பல இயலளவு அதிகரிப்பு மற்றும் நவீனமயமாக்கல் திட்டங்களில் இறங்கியுள்ளது. அவ்வாறான திட்டங்களில் அத்தியாவசியமான நுண்ணுயிர்கொல்லி மருந்துகளின் உற்பத்தியை அதிகரிப்பதை இலக்காகக்கொண்ட பெனிசிலின் விரிவாக்கல் திட்டம் முக்கியமான முன்னெடுப்பு ஆகும். முன்னோக்கிய பார்வையில் அ.ம.கூ. ஆனது விரிவாக்கத்திற்காகவும் மேலதிக அபிவிருத்திக்காகவும் பேரார்வமான திட்டங்களை கொண்டுள்ளது. கூட்டுத்தாபனத்தின் தர நிர்ணய மற்றும் ஆய்வு வலுவை உயர்த்தும் விதமான புதிய அதி நவீன ஆய்வுகூட வசதி அடுத்து செய்யப்பட உள்ளது.

இந்த வசதியானது, முன்னேற்றகரமான பரிசோதனைகளை மேற்கொள்வதற்கும், சர்வதேச தரநிர்ணயங்களிற்கு இணங்குவதை உறுதி செய்வதற்கும் புதிய போர்முலாக்களை விருத்தி செய்வதை துரிதப்படுத்துவதற்கும் அ.ம.கூ. இனை இயலச்செய்கிறது. மேலதிகமாக, செயற்பாடுகளை நெறிமுறைப்படுத்தவும், வினைத்திறனை முன்னேற்றவும், மருந்தாக்கற்துறையின் உயர் தராதரங்களை நிலைநிறுத்தவும் தர முகாமைத்துவ பொறிமுறை ஒன்றிலும் கூட்டுத்தாபனம் முதலிடுகிறது.

அசந்தி அத்துரலிய
பொது முகாமையாளர்

# புதிய பணிப்பாளர் சபை



பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார
தலைவர்/பணிப்பாளர்



திரு. ஆர். ஏ. சுசந்த குமார ரணசிங்க
பணிப்பாளர்



திரு. ஏ. மில்ரன் அமரசிங்ஹ
பணிப்பாளர்



திரு. ஆர் எம். உபுல் சந்ரநாத்
பணிப்பாளர்

# புதிய பணிப்பாளர் சபை



திரு. டி.டி. வன்னியாராச்சி
பணிப்பாளர்



மருத்துவர். என்.ஆர்.கே. விதானகே
பணிப்பாளர்



திரு. ஜே.டி.கே.ஜி. கொடுவேகெதர
பணிப்பாளர்

# முன்னைய பணிப்பாளர் சபை



டாக்டர். பி. பி. ஜி. பி. யு. இந்ரவன்ச
தலைவர்/பணிப்பாளர்
2024 செப்டெம்பர் வரை



டாக்டர். பந்துல சந்திரநாத் விஜயசிறிவர்த்தன
பணிப்பாளர்
2024 டிசெம்பர் வரை



திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க
பணிப்பாளர்
2024 டிசெம்பர் வரை



செல்வி யூ.எஸ்.கே. தெனவத்த
பணிப்பாளர்
2024 டிசெம்பர் வரை

# முன்னைய பணிப்பாளர் சபை



திரு. வீ. ஜீ. சமிந்த விக்கிரமரத்ன
பணிப்பாளர்
2024 டிசெம்பர் வரை

# புதிய பணிப்பாளர் சபை

## பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார

### இலங்கையின் முன்னணி மருந்தாக்கவியல் புத்தாக்குனர் மற்றும் கல்வியியலாளர்

பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார, மேன்மை தங்கிய கல்விப்புல தலைமைத்துவத்துடன், மாறுபடும் தொழிற்துறை அனுபவத்தையும் கொண்டிருந்து இலங்கை மருந்தாக்கவியல் தொழிற்துறையின் முன்னணியில் இருக்கிறார். இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவராகவும் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மருந்தக மற்றும் வாகடவியல் விஞ்ஞானங்கள் துறையின் பேராசிரியராகவும் இருப்பதன் மூலம் வாகடவியல் ஆய்வு, கல்வி மற்றும் சுகாதார பராமரிப்பின் நடைமுறை பயன்பாட்டிற்கும் இடையில் உள்ள முக்கியமான இடைவெளியில் ஒரு பாலமாக அமைகிறார்.

### கல்வி சார் சிறப்பும் சர்வதேச அங்கீகாரமும்

பேராசிரியர் விஜயபண்டாரவின் கல்விசார் சான்றுகள் ஆழத்தையும் சர்வதேச நோக்கத்தையும் பிரதிபலிக்கின்றன. 1986 இல் இரசாயனவியலில் விஞ்ஞான இளமாணி (விசேட) பட்டத்தை சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து பெற்றுக்கொண்ட அவர், 1994 இல் நெதர்லாந்தின் உற்றெக்ட் அரச பல்கலைக்கழகத்தின் வாகடவியல் திணைக்களத்துடனான மதிப்புவாய்ந்த கூட்டு ஆய்வு நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக மருத்துவ இரசாயனவியலில் கலாநிதி பட்டத்தையும் நிறைவு செய்தார். இந்த ஆரம்பகால சர்வதேச வெளிக்காட்டப்படுகையானது வாகடவியல் கல்வி மற்றும் ஆய்வு நடவடிக்கைகளில் உலகின் உன்னத நடவடிக்கைகளை பயன்படுத்துவதற்குரிய அவருடைய அர்ப்பணிப்பை மெருகூட்டியது.

இந்த வெற்றி கட்டியெழுப்புதலின் தொடர்ச்சியாக, அவர் தனது கல்வித்தலைமைத்துவத்தினை சிறி ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் தொடர்ந்து, அங்கே வாகடவியல் மற்றும் வாகடவிஞ்ஞானங்கள் துறையின் ஸ்தாபித தலைவராகி, வாகடவியல் இளமாணி பட்ட கற்கைநெறியை ஸ்தாபிப்பதில் முக்கிய பங்காற்றினார். இந்த அடைவுகளானது இலங்கையில் எவ்வாறு வாகடவியல் தொழில்வாண்மையாளர்கள் சர்வதேச தராதரங்களுக்கு ஏற்ற விதத்தில் தர நிர்ணயங்களை உயர்த்தும் வகையில் பயிற்றப்படுகிறார்கள் என்பதில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டதை குறித்துக் காட்டுகிறது.

### தொழிற்துறை தலைமைத்துவம் மற்றும் தர உறுதிப்பாடு உன்னதம்

பேராசிரியர் விஜயபண்டாரவின் வாகடவியல் தரக்கட்டுப்பாடு மற்றும் தர உறுதிப்படுத்தல் செயன்முறை நிபுணத்துவம், அரச மருந்துக் கூட்டுத்தாபனத்தில் (1997-2000) அவர் மருந்து தர உறுதிப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி ஆய்வுகூடத்தின் நிறுவுனர் முகாமையாளராக பணியாற்றியதில் ஆரம்பிக்கின்றது. இந்த மருந்து தர உறுதிப்படுத்தல் மற்றும் பாதுகாப்பு தரநிர்ணயத்தில் அடிப்படை அனுபவம், அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவராக அவருடைய தலைமைத்துவம் வகிபாகம் தொடர்பில் எடுத்தியம்புகிறது.

சுகாதார அமைச்சினுள் பண்டாரநாயக்க ஞாபகார்த்த ஆயுள்வேத ஆய்வு நிறுவகத்தின் பணிப்பாளராக அவருடைய சேவையும் பாரம்பரிய மருத்துவ அறிவை (2017-2018) காப்பு செய்வதற்கான தேசிய திட்டத்திற்கான அவருடைய தலைமைத்துவம்,பாரம்பரிய மருத்துவ அறிவை பாதுகாப்பதிலும் அதனை முன்னேற்றுவதிலும் அவர் காட்டிய அர்ப்பணிப்பிற்கு சான்றாகும். இந்த பங்களிப்புகளானது பாரம்பரிய ஞானத்தை அதி நவீன வாகடவியல் விஞ்ஞானத்துடன் ஒருங்கிணைக்க வேண்டிய முக்கியத்துவம் தொடர்பில் இவருடைய புரிதலை விளக்கி நிற்கிறது.

### ஆய்வு விளைவு மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு

பேராசிரியர் விஜயபண்டாரவின் ஆய்வாளர் வகிபாகமானது 40 இற்கும் மேற்பட்ட பிரசுரிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் மூன்று காப்புரிமைகளையும் உள்ளடக்கி, முன்னேற்றமடையும் வாகடவியல் விஞ்ஞானத்துறையில் தீவிரமான ஆய்வு மற்றும் புத்தாக்கத்துடன் கூடிய அவரது அர்ப்பணிப்பை பிரதிபலிக்கிறது. அவரது நிபுணத்துவம் வாகடவியல் கல்வி, பாரம்பரிய மருந்துகளை அடிப்படையாகக்கொண்ட புதிய மருந்துகளின் கண்டுபிடிப்பு மற்றும் மருந்தாக்க தரக்கட்டுப்பாடு மற்றும் தர உறுதிப்பாடு என்பவற்றுடன் மருந்து அபிவிருத்தி துறையில் பல்துறை பங்களிப்பாளர் ஆக அவரை உருவாக்கியுள்ளது.

# புதிய பணிப்பாளர் சபை

அவருடைய சர்வதேச ஆய்வு அனுபவமானது பாகிஸ்தான் மற்றும் சீனாவிற்கான வருகைதரு விஞ்ஞானி பதவிகளையும் உள்ளடக்கியதுடன், மருந்தாக்கத்துறை ஆய்வில் பூகோள ஒத்துழைப்பிற்கு தனது அர்ப்பணிப்பை வலுச்சேர்த்துமிருக்கிறார்.

**தொழில்வாண்மை ரீதியான அங்கீகாரமும் தலைமைத்துவமும்**

பேராசிரியர் விஜயபண்டாரவின் பங்களிப்புக்களின் அங்கீகாரம் சர்வதேச மருந்தாக்க சமூகம் முழுவதற்கும் நீடிக்கிறது. பார்மகோக்னொசியிற்கான ஆசிய சங்கத்தினுடனான அவருடைய கூட்டுறவு, மற்றும் பலதரப்பட்ட சர்வதேச விஞ்ஞான சங்கங்களில் அங்கத்துவம் என்பன வாகடவியல் விஞ்ஞானத்தில் அவரை மதிப்புமிக்கவராக நிலைநிறுத்துகிறது.

பன்முக ஆளுமையுடைய அவருடைய தொழில்வாழ்வில், பேராசிரியர் விஜயபண்டார கல்விசார் உன்னத நிலை, தொழிற்துறை தலைமைத்துவம் மற்றும் அரசதுறை அர்ப்பணிப்பு என்பன வாகடவியல் விஞ்ஞானங்களிலும் சுகாதார பராமரிப்பு வழங்கலிலும் அர்த்தபூர்வ முன்னேற்றத்தை வழங்கி இவற்றின் ஒன்றிப்பாக விளங்குகிறார். அவருடைய பணி, இலங்கையின் எதிர்கால வாகடவியல்துறை கல்வி மற்றும் பயன்பாடு என்பவற்றுக்கு புதிய வடிவம் தருவதுடன், பூகோள வாகடவியல் அறிவு மற்றும் தரநிர்ணயங்களுக்கும் பங்களிக்கிறது.

**திரு. ஆர். ஏ. சுசந்த குமார ரணசிங்க**
**பணிப்பாளர்**

நிதி அமைச்சின் பொது நிறுவனங்கள் திணைக்களத்தின் பணிப்பாளராக பணியாற்றும் திரு. ரணசிங்க, அங்கு அரச வங்கிகள் உள்ளடங்கலான பிரதான அரசுடைமை நிறுவனங்களின் மேற்பார்வையாளராக செயலாற்றுவதுடன் பொதுத்துறையில் 23 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தை கொண்டிருக்கிறார். நெவில் பெர்னான்டோ போதனா வைத்தியசாலை. வாகன புகை பரிசோதனை நம்பிக்கை நிதியம், லிட்ரோ வாயு லங்கா லிமிடெட் மற்றும் எல்கடுவ பிளான்டேஷன் லிமிடெட் உள்ளடங்கலாக வர்த்தகத்துறையில் பல்வேறு அரச துறை நிறுவனங்களில் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும் ஏனைய பல குழுக்களிலும் அவர் பணியாற்றியுள்ளார். தற்போது அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், களுபோவிற்றியான டீ பக்டரி லிமிடெட் மற்றும் இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் ஆகியவற்றில் பணிப்பாளர் சபை உறுப்பினராக பதவி வகிக்கிறார்.

வர்த்தகத்துறையில் கொழும்பு பல்கலைக்கழகத்தில் இளமாணி பட்டத்தை பெற்றிருக்கும் இவர், ஜப்பான் ஹிரோஷிமா பல்கலைக்கழகத்தில் பொருளியல் மற்றும் அபிவிருத்தி கொள்கை விடயப்பரப்பில் விஞ்ஞான முதுமாணி பட்டத்தையும், மிஹிந்தலை ரஜரட்டை பல்கலைக்கழகத்தில் வியாபார முகாமைத்துவ முதுமாணி பட்டத்தையும் ஈட்டியிருக்கிறார். இவர் இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் இணை அங்கத்தவராவார். இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் பொதுநிதி பட்டயக்கணக்காளரான இவர், லண்டன் பொதுநிதி மற்றும் கணக்கீடு என்பவற்றுக்கான பட்டய நிறுவனத்தின் அங்கத்தவராகவும் விளங்குகின்றார். இதற்கு மேலதிகமாக பொதுத்துறை கொள்வனவு மற்றும் கொந்தராத்து நிர்வாகம் விடயப்பரப்பில் டிப்ளோமா கல்வியை கொழும்பு, நிதிக்கற்கைகளுக்கான மிலோதா நிறுவகத்தில் முடித்துள்ளார்.

இவர் கணக்கீட்டியல், கணக்காய்வு, நிதி முகாமைத்துவம் கொள்முதல் முகாமைத்துவம் மற்றும் இடர் முகாமைத்துவம் போன்றவற்றில் புகழ்வாய்ந்த சர்வதேச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகத்தில் வெளிநாட்டு பயிற்சிகள் மற்றும் புதிய அனுபவங்களை பெற்றுள்ளார்.

**திரு. ஏ. மில்ரன் அமரசிங்ஹ**
**பணிப்பாளர்**

திரு. ஏ. எம். அமரசிங்ஹ, உள்நாட்டு இறைவரித் திணைக்கள உதவி மதிப்பீட்டாளராக (1970) சேவை புரிந்த இவர், திட்டமிடல் மற்றும் அமுலாக்கம் அமைச்சின் உதவிப் பணிப்பாளராகவும் (1978-1979) , உள்நாட்டு விவகார அமைச்சின் (1979-1988) உதவி அரசாங்க அதிபராகவும் பணியாற்றியுள்ளார். சபரகமுவ மாகாணசபையின் பிரதி செயலாளர். செயலாளர் பதவிகளை வகித்த அவர், கல்வி உயர்கல்வி அமைச்சின் சிரேஷ்ட பிரதி செயலாளர் பதவிகளையும் 1990-1995 காலப்பகுதியில் வகித்திருக்கிறார்.

மேலதிகமாக, மகாவலி அதிகாரசபையின் பணிப்பாளராகவும் (1995) மகாவலி அதிகாரசபையின் முகாமைத்துவ பணிப்பாளராகவும் (1995-1999) அதேபோன்று விளையாட்டு அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாகவும் (1999-2006) பணியாற்றியுள்ளார்.

# புதிய பணிப்பாளர் சபை

BPO சேவைகள் (தனியார்) லிமிடெட் இன் பொது முகாமையாளராக (2006-2009) செயலாற்றிய ஏ.எம். அமரசிங்ஹ அவர்கள், நுகர்வோர் விவகார அதிகாரசபையின் (2010-2015) நிறைவேற்றுப்பணிப்பாளராகவும் பெருந்தோட்டங்கள் முகாமைத்துவத்திற்கான தேசிய நிறுவகத்தின் தலைவராகவும் (2015) விளையாட்டு அமைச்சிற்கான ஆலோசகராகவும் (2017-2018) விளங்கியுள்ளார்.

இவர் பொருளியலில் கௌரவ இளங்கலைமாணி பட்டத்தை இலங்கை வித்யோதய பல்கலைக்கழகத்தில் பெற்றுக்கொண்டதுடன் கிராமிய மற்றும் பிரதேச திட்டமிடல் விடயத்தில் விஞ்ஞான முதுமாணி பட்டத்தை ஆசிய தொழிநுட்ப நிறுவகத்திலும் (பாங்கொக்-தாய்லாந்து) பெற்றுக்கொண்டார்.

### திரு. ஆர் எம். உபுல் சந்ரநாத்
**பணிப்பாளர்**

திரு. ஆர்.எம். உபுல் சந்ரநாத் அவர்கள் தற்போது சிரேஷ்ட கணக்காளராக லுணுவிலவில் அமைந்துள்ள தெங்கு ஆராய்ச்சி நிறுவகத்தில் 2015 ஆனியில் இருந்து பணிபுரிந்து வருகிறார். தம்புள்ளவில் அமைந்துள்ள மா'ஸ் ரொபிக்கல் பூட் புரொசஸிங் (தனியார்) லிமிடெட் நிறுவனத்தில் நிறைவேற்று நிதிக்கட்டுப்பாட்டளராக 2000 ஆவணி முதல் 2002 தை மாதம் வரையும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் கணக்காளராக 2002 தை மாதத்தில் இருந்து 2015 ஆனி மாதம் வரையும் பணியாற்றினார்.

பட்டய பொது நிதி கணக்காளர், இலங்கை பொதுநிதி கணக்காளர்களின் சங்கம் (CPFA), சி.ஏ சிறிலங்கா (2017)-பொதுத்துறை பிரிவு மற்றும் லண்டன் (2018) பொதுநிதி மற்றும் கணக்கீட்டியலிற்கான பட்டய நிறுவகம் ஆகியவற்றின் சான்றிதழ்களையும் இவர், வைத்திருக்கிறார்.

அதே போன்று திரு. ஆர்.எம். உபுல் சந்ரநாத், வயம்ப பல்கலைக்கழத்தில் வியாபார நிர்வாக முகாமைத்துவத்தில் முதுமாணி பட்டத்தையும் (2013/2014) ஜெயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இருந்து விசேட விஞ்ஞான முகாமைத்துவ பட்டத்தையும் (1994/97) கொண்டிருக்கிறார்.

### திரு. டி.டி. வன்னியாராச்சி
**பணிப்பாளர்**

சட்ட தொழில்வாண்மையாளரான திரு. டி.டி. வன்னியாராச்சி அவர்கள் தற்போது இலங்கை உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக பணியாற்றுகிறார். சட்டக்கல்வி துறையில் பலமான அத்திவாரத்தை கொண்டுள்ளதுடன் தொழில்வாண்மைக்குரிய அறநெறிகளையும் கொண்டுள்ள இவர், பெறுமதியான அனுபவம் மற்றும் சட்ட உயர்நோக்கங்களை பொதுத்துறை நிறுவகங்களை நிர்வகிப்பதில் அவர் கொண்டிருக்கிறார்.

2008 இல் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தனது சட்ட இளமாணி பட்டத்தை பெற்றுக்கொண்ட இவர், அன்றிலிருந்து சட்டத்துறையில் மரியாதைக்குரிய தொழில்முறையை நிர்மாணித்துக்கொண்டார். திரு. வன்னியாராச்சி அவர்கள் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு 2025 தை மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

### மருத்துவர். என்.ஆர்.கே. விதானகே
**பணிப்பாளர்**

மருத்துவர். என்.ஆர்.கே. விதானகே அவர்கள் மனநல சுகாதார துறையில் ஆழ்ந்த அனுபவம் வாய்ந்த சிறப்பு மருத்துவர் ஆவார். முல்லேரியா கொழும்பு கிழக்கு ஆதார வைத்தியசாலையில் உள நல மருத்துவராக சேவை புரியும் இவர், அங்கே விசேடத்துவம் வாய்ந்த மனநல பராமரிப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட உளநல சேவைகளை குறித்த பிரதேசத்தில் வழங்கி வருகிறார்.
மருத்துவர் விதானகே, மருத்துவ இளமாணி மற்றும் சத்திரசிகிச்சை இளமாணி பட்டத்தை இலங்கை பல்கலைக்கழகத்திலிருந்து கொண்டுள்ள அவர் மனநலத்துறையில் பட்டப்பின் டிப்ளோமாவினை கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்டுள்ளார். மனநல பராமரிப்பு துறையில் தனது நிபுணத்துவத்தினை விரிவுபடுத்த, நினைவாற்றல் தொடர்பான தேசிய டிப்ளோமா சான்றிதழையும் தாய்லாந்தில் அவர் பெற்றிருக்கிறார்.

மருத்துவர். விதானகே அவர்கள் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் (அ.ம.கூ) பணிப்பாளர் சபைக்கு 2025 தை மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

# புதிய பணிப்பாளர் சபை

**திரு. ஜே.டி.கே.ஜி. கொடுவேகெதர**
**பணிப்பாளர்**

திரு. ஜே.டி.கே.கொடுவேகெதர அவர்கள் மருந்து ஆய்வு, அபிவிருத்தி, உற்பத்தி மற்றும் சருமவியல் சார்ந்த துறையில் விசேடத்துவம் வாய்ந்த 25 வருடங்கள் அனுபவம் உள்ள ஒரு புத்தாக்க மருந்தாளர் ஆவார். உலர் சரும நிலைவரத்தை கட்டுப்படுத்தும் வணிகமயப்படுத்தப்படுவதற்கு அதிக சாத்தியத்தை கொண்ட உலர்தன்மை நீக்கி மருந்தொன்றிற்கான சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட காப்புரிமையை இவர் கொண்டிருக்கிறார். ஐ.சி.ஏ.என். கனடாவின் மற்றும் உலக கண்டுபிடிப்பு கண்காட்சி இந்தோனேசியா ஆகியவற்றின் மற்றும் கொரிய தங்கப்பதக்கம் வெள்ளி பதக்கங்கள் உட்பட உலக விருதுகளை அவர் பெற்றிருக்கிறார்.

திரு. ஜே.டி.கே.கொடுவேகெதர, தற்போது இலங்கை சுகாதார அமைச்சின் கீழ் வரும் சிறுவர்களுக்கான சீமாட்டி றிட்ஜ்வே மருத்துவமனையில் மருத்துவ பாதுகாப்பிற்கான தொடர்பு மருந்தாளராக இவர் பணிபுரிகிறார். சுகாதார அமைச்சின் சௌக்கியபராமரிப்பு தரம் மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான பயிற்றுனராகவும் இவர் உள்ளார்.
இவர், வாகடவியல் இளமாணி பட்டத்தினை மலேசிய லிங்கோலின் பல்கலைக்கழகத்திலும் (2023) வியாபார முகாமைத்துவ முதுமாணி பட்டத்தினை மலேசிய ஆசியா இ பல்கலைக்கழகத்திலும் (2025) பெற்றுக்கொண்டுள்ளார். அத்துடன் வாகடவியலில் முதுமாணி கற்கைநெறியையும் தொடர்கிறார்

# முன்னைய பணிப்பாளர் சபை

**டாக்டர். உத்பல இந்ரவன்ச - தலைவர்**
2024 செப்டெம்பர் வரை

டாக்டர் உத்பலா இந்திரவன்ச ஒரு மருத்துவ கலாநிதியாக இருப்பதோடு (ரஷ்யாவில உள்ள முன்னணி மருத்துவ பல்கலைக்கழகங்களில் ஒன்றான செச்செனோவின் மருத்துவ அகாடமியில் கற்ற) பொலன்னறுவை பொது வைத்தியசாலையில் சேவைக்கால பயிற்சியை நிறைவுசெய்தவராவார்.

2007 ஆம் ஆண்டில் அவர், புலஸ்திபுர கிராமப்புற மருத்துவமனையில் கடமைப்பொறுப்பு மருத்துவ அதிகாரியாக, '5S' க்கான உற்பத்தித்திறன் மாகாண விருதை பெறுவதில் முன்னோடியாக இருந்த வேளை, டாக்டர்கள் வகுதி மற்றும் மருத்துவமனை வகுதி போன்றவற்றுக்கான சுகாதார சிறப்பு விருது ஆகியவற்றையும் அதே காலகட்டத்தில் அவர் வென்றெடுத்தார். இவர் 2009 ஆம் ஆண்டு முதல் தேசிய வைத்தியசாலையில், விபத்து சேவை பிரிவில் எலும்பியல் பிரிவில் பணியாற்றி வருகின்றார். அவர் 2019 டிசம்பரில் இருந்து 2024 செப்டெம்பர் வரை இலங்கை அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலைவராக பணியாற்றினார்

**டாக்டர். பந்துல விஜயசிறிவர்த்தன - பணிப்பாளர்**
2024 டிசெம்பர் வரை

ஒரு உசாவுகை மருத்துவரான வைத்திய கலாநிதி பந்துல விஜேசிறிவர்தன, எம்.டி.(மருத்துவம்) இற்கான பிரதம பரீட்சகர், MCQ பிரதம குழுவின் தலைவர், AAAED குழு உறுப்பினர் மற்றும் 2005 ஆம் ஆண்டில் இலங்கை மருத்துவர்கள் கல்லூரியின் தலைவராக இருந்தமை போன்றவற்றுடன், அரசாங்க சுகாதார பராமரிப்பு துறையில் 33 வருடங்களுக்கும் மேற்பட்ட அனுபவத்தை கொண்டவராவார்.

இவர் தற்போது தனியார் மருத்துவ பராமரிப்பு துறையில் முழு நேரமும் பணிபுரிகின்றார். வைத்திய கலாநிதி விஜேசிறிவர்தன தற்போது நாடளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுகின்ற இலங்கை மருத்துவர்கள் கல்லூரியூடான சத்திரசிகிச்சை மருத்துவ நடைமுறை வழிகாட்டுதல்களை அறிமுகம் செய்வதில் முன்னோடியாக இருந்தார்.

இவரது இந்த புகழுக்கு பல தேசிய மற்றும் சர்வதேச வெளியீடுகளுடன் வைத்திய கலாநிதி விஜேசிறிவர்தன 2000 ஆம் ஆண்டில் அவரது மருத்துவ ஆராய்ச்சிக்காக ஜனாதிபதி விருதை வென்றதோடு ரோயல் அவுஸ்திரேலிய மருத்துவர்கள் சிகிச்சை கல்லூரி மற்றும் தென் ஆபிரிக்காவில் உள்ள மருத்துவக் கல்லூரிகள் என்பவற்றினால் கௌரவ அங்கத்துவ விருதுகளையும் பெற்றுள்ளார்.

அவர் MBBS (கொழும்பு), MD (கொழும்பு) மற்றும் MRCP (ஐக்கிய இராச்சியம்) ஆகிய பட்டங்களை பெற்றுள்ளதோடு, அமெரிக்க மருத்துவர்கள் கல்லூரி மற்றும் இலங்கை மருத்துவர்கள் கல்லூரி என்பவற்றினதும் அங்கத்தவராவார்.

**திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க - பணிப்பாளர்**
2024 டிசெம்பர் வரை

திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க, 2022 ஏப்ரல் மாதத்தில் அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபைக்கு நியமிக்கப்பட்டார். அவர், சிரேஷ்ட முகாமையாளர் ஒருவராகவும் பணிப்பாளர் ஒருவராகவும் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராகவும் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் 17 வருடங்களுக்கு கூடுதலாக சேவையாற்றிய அனுபவம் வாய்ந்தவராவார்.

திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க, தற்போது நிதி அமைச்சின் திறைசேரி பொது தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளராக பணியாற்றுவதுடன், கொழும்பு லோட்டஸ் டவர் (தனியார்) லிமிடெட் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராகவும் கடமையாற்றுகின்றார்.

கஹட்டகஹ கிராபைட் லங்கா லிமிட்டட் (KGLL), பி.சி.சி. (லங்கா) லிமிடெட், இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் (SLSPC) மற்றும் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை ஆகிய நிறுவனங்களின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ஒருவராக பணியாற்றியுள்ள திருமதி ஏ.ஆர்.விக்ரமசிங்க, இதற்கு முன்பு பொது தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் (PERC) சிரேஷ்ட முகாமையாளர் ஒருவராகவும், டைம்ஸ் கார்மன்ட்;ஸ் (பிறைவேட்) லிமிட்டட் நிறுவனத்தின் கணக்காளர் ஒருவராகவும் பணியாற்றியுள்ளார்.

அவர் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் வியாபார நிருவாக விஞ்ஞானமாணிப் பட்டமும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நிதித்துறை வியாபார நிருவாகத்தில் முதுமாணிப் பட்டமும் பெற்றுள்ளதுடன் பட்டய முகாமைத்துவ கணக்காளருமாவார் (ACMA-UK).

# முன்னைய பணிப்பாளர் சபை

**செல்வி யூ.எஸ்.கே. தெனவத்த - பணிப்பாளர்**
2024 டிசெம்பர் வரை

செல்வி யூ.எஸ்.கே. தெனவத்த மருந்துப் பொருட்கள் உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சின் மேலதிக செயலாளராக (நிர்வாகம்) பணியாற்றுகிறார்.

அவர் விவசாயத்தில் விஞ்ஞான இளமாணிப் பட்டத்தையும் (பேராதனைப் பல்கலைக்கழகம்) மற்றும் கருத்திட்ட முகாமைத்துவத்தில் பொது முகாமைத்துவ முதுமாணிப் பட்டத்தையும் (இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகம்) பெற்றுள்ளார்.

அவர் மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தில் உதவி ஆணையராகவும் (2000-2001) சுகாதார பராமரிப்பு மற்றும் போசாக்கு அமைச்சின் பணிப்பாளர் ஒருவராகவும் (2001-2010) பணியாற்றியுள்ளார். 2010 ஆம் ஆண்டில் அவர், உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் உதவிப் பணிப்பாளராக (ஜனதிரிய) பணியாற்றினார். செல்வி. தெனவத்த, மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு (2015-2017) மற்றும் புத்தசாசன, சமய மற்றும் கலாசார விவகாரங்கள் அமைச்சு (2017-2021) ஆகியவற்றில் சிரேஷ்ட உதவி செயலாளர் பதவியையும் பணியாற்றினார.

**திரு. வீ. ஜீ. சமிந்த விக்கிரமரத்ன - பணிப்பாளர்**
2024 டிசெம்பர் வரை

திரு. வீ. ஜீ. ச. விக்கிரமரத்ன 2020 ஜனவரி மாதத்திலிருந்து அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் சபை பணிப்பாளராக பணியாற்றியதோடு, SMI இன்ஜினியரிங் கோ. (பிரைவேட்) லிமிடெட்டின் நிறுவுனராக வியாபார முகாமைத்துவத்தில் 20 ஆண்டுகளுக்கும் மேலாக அனுபவத்தை கொண்டிருக்கின்றார்.

இவர் தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் (2005-2008), தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பொது அரங்காற்றுகை சபை (2008-2010) மற்றும் இலங்கை எனர்ஜிஸ் (பிரைவேட்) லிமிடெட் (2012-2015) ஆகியவற்றின் பணிப்பாளர் சபை பணிப்பாளராகவும் பணியாற்றியிருக்கின்றார்.

தற்போது அவர் ஹரித டிவி நெட்வொர்க்ஸ் (பிரைவேட்) லிமிடெட் மற்றும் அரிகே (பிரைவேட்) லிமிடெட் ஆகியவற்றின் பணிப்பாளராக பதவி வகித்து வருகின்றார். இதற்கு மேலதிகமாக அவர் தேசிய புகையிரத அருங்காட்சியகக் குழு உறுப்பினராகவும் உள்ளார்.



# பணிப்பாளர்கள் SPMC

"தொலைநோக்கு பார்வையுடனும் நேர்மை மற்றும் கூட்டுவு அறிவுடனும்
நிலைபேறான வெற்றியை நோக்கி வழிநடத்தும் அ.ம.கூ. இன் திசைகாட்டி"

# அமரத்துவம் அடைந்த பேராசிரியர் சேனக பிபிலே



1920 பெப்ரவரி 13 ஆம் திகதியன்று பிறந்த பேராசிரியர் சேனக பிபிலே ஒரு புகழ்பெற்ற மருந்தியல் வல்லுநராக இருந்ததோடு, இலங்கைத் தாய் இதுவரை உருவாக்கிய மனிதகுலத்தின் மிகச்சிறந்த மருத்துவதுறைசார் பரோபகரியாகவும் போற்றப்படுகின்றார்.



# நிறுவன



தலைவர் / முகாமைத்துவ பணிப்பாளர்
பொது முகாமையாளர்
பிரதி பொது முகாமையாளர் - உற்பத்தி
பிரதி பொது முகாமையாளர் - தரக்கட்டுப்பாடு
பிரதி பொது முகாமையாளர் - மருந்து வடிவம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
பிரதி பொது முகாமையாளர் - பொறியியல்
முகாமையாளர் - உற்பத்தி
முகாமையாளர் - தரக்கட்டுப்பாடு
முகாமையாளர் - தர உறுதிப்படுத்தல
முகாமையாளர் - மருந்து வடிவம் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி
முகாமையாளர் - பொறியியல்
முகாமையாளர் தகவல் தொழிநுட்பம்
முகாமையாளர் - பாதுகாப்பு
மருந்தாக்க வல்லுநர் - உற்பத்தி
தரக்கட்டுப்பாட்டு அலுவலர்
தர உறுதிப்படுத்தல் அலுவலர்
இரசாயனவியலாளர்
ஒழுங்குமுறை விவகார அலுவலர்
பொறியியல் உதவியாளர்
போக்குவரத்து அலுவலர்
பொறியியல் உதவியாளர் (கணினி வன்பொருள்)
அமைப்பு ஆய்வாளர்

# கட்டமைப்பு


பிரதி பொது முகாமையாளர் - திட்டமிடல், மற்றும் கொள்வனவு
பிரதி பொது முகாமையாளர்- சந்தைப்படுத்தல
பிரதி பொது முகாமையாளர் - நிதி
பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள
முகாமையாளர் - திட்டமிடல், மற்றும் கொள்வனவு
முகாமையாளர் -சந்தைப்படுத்தல
முகாமையாளர் - நிதி
முகாமையாளர் - மனித வளங்கள்
முகாமையாளர் - பயிற்சி மற்றும் அபிவிருத்தி
சட்டஅலுவலர
உள்ளக கணக்காய்வாளர
மருந்தாக்க வல்லுநர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு)
சந்தைப்படுத்தல் அலுவலர்
நிதி அலுவலர்
மனித வள/நிர்வாக அலுவலர்
பயிற்சி மற்றும் அபிவிருத்தி அலுவலர்
பிரத்தியேக செயலாளர்
உள்ளக கணக்காய்வு அலுவலர்

# முகாமைத்துவக்

இடமிருந்து - 02வது வரிசை

ஏ.சி.பி.ஆனந்தகுமார
- முகாமையாளர் (திட்டமிடல்,
மற்றும் கொள்வனவு)

எம். விதுஷன்
-முகாமையாளர்
(தரக்கட்டுப்பாடு)

பி.வி.எச்.பி.எஸ்.குமார
- முகாமையாளர் (பொறியியல்)

ஏ.ரி.எம். ஜெயசேகர
முகாமையாளர் (உற்பத்தி)

பாரத ஹென்நாயக்க, முகாமையாளர்
(மருந்து வடிவம்,ஆராய்ச்சி
மற்றும் அபிவிருத்தி)

வி.ஜே.பண்டாரவத்த
உள்ளகக் கணக்காய்வாளர்

ஆர்.ஓ.என். திசாநாயக்க
முகாமையாளர் (பொறியியல்)

இடமிருந்து - 01வது வரிசை

ஏ.எம்.ரி.பி.குலசேகர
பிரதி பொது முகாமையாளர் (விற்பனை
மேம்பாடுஃசந்தைப்படுத்தல்)- பதிற்கடமை

சி.டி.மகினாராச்சி
பிரதி பொது முகாமையாளர்
(மனித வளங்கள்)- பதிற்கடமை

ஏ.எம்.ரி.பி.குலசேகர
பிரதி பொது முகாமையாளர் (விற்பனை
மேம்பாடுஃசந்தைப்படுத்தல்) - பதிற்கடமை
சி.டி.மகினாராச்சி
- பிரதி பொது முகாமையாளர் (மனித வளங்கள்)-
பதிற்கடமை

ஏ.ஜி.டி.எஸ்.அதுரலிய
பொது முகாமையாளர்



# குழு

**இடமிருந்து - 02வது வரிசை**

எம்.பெனரகம
முகாமையாளர் (பொறியியல்)

எஸ்.சந்ரவிமல்
முகாமையாளர்,
(தரக்கட்டுப்பாடு)

வை.எம்.பி. குமார
முகாமையாளர் (திட்டமிடல், மற்றும் கொள்வனவு)

எம்.ஆர். ஹெட்டியாராச்சி
முகாமையாளர்
(உற்பத்தி)

எஸ். விக்ரமசிங்க
முகாமையாளர் (உற்பத்தி)

பு.தந்தநாராயண
முகாமையாளர் (உற்பத்தி)

**இடமிருந்து - 01வது வரிசை**

பேராசிரியர். ஜயந்த விஜயபண்டார
தலைவர்

எஸ்.பி.ஜயவீர
பிரதி பொது முகாமையாளர்
(உற்பத்தி)

பி.டி.ஜயசுந்தர - பிரதி பொது முகாமையாளர் (பொறியியல்)

ஜே.எம்.எஸ்.ஜயசுந்தர
பிரதி பொது முகாமையாளர் (நிதி)-
பதிற்கடமை



# பணிப்பாளர்களின் அறிக்கை

2024 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டிற்கான தமது அறிக்கையையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது. கணக்குகள் 40-83 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**பிரதான செயற்பாடுகள்**

**கூட்டுத்தாபனத்தின் பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு:**

- ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கையைச் செய்து கொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல்.
- துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல்.
- முதலீட்டாளர்களாக வரவுள்ளோருடன் சர்வதேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்.
- மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
- வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல்.
- கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

**வணிக மீளாய்வு**

2024 டிசம்பர் 31 அன்று கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளின் நிலைமை 23 ஆம் பக்கத்தில் உள்ள நிதிநிலைமை பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளது.

**புரள்வும் விளைவுகளும்**

இவ்வாண்டுக்கான புரள்வும் விளைவுகளும் மற்றும் உரிமைப்பங்கில் மாற்றம் என்பன முறையே 40 ஆம் பக்கத்தில் உள்ள வருமானக் கூற்றிலும் உரிமைப்பங்கில் மாற்றம் பற்றிய கூற்று 42 ஆம் பக்கத்திலும் தரப்பட்டுள்ளன.

**ஆதனங்கள், பொறிகள், உபகரணங்கள்**

இவ்வாண்டில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் மாற்றம் 72 ஆம் பக்கத்தில் உள்ள நிதியியல் கூற்றின் குறிப்பு 10 இல் தரப்பட்டுள்ளது.

**பங்கிலாபம் /பங்களிப்பு**

இவ்வாண்டில், பணிப்பாளர் சபையின் விதப்புரைக்கு அமைய கூட்டுத்தாபனத்தினால் பொதுத் திறைசேரியின் திரண்ட நிதிக்கு ரூபா. 300,000,000 வழங்கப்பட்டது.

**ஒதுக்கங்கள்**

கூட்டுத்தாபனத்தின் மொத்த ஒதுக்கங்களும் அவற்றின் உள்ளடக்கம் என்பன 42 ஆம் பக்கத்தில் உள்ள நிதிக்கூற்றில் உரிமைப்பங்கு மாற்றங்கள் பற்றிய கூற்றில் தரப்பட்டுள்ளன.

**புதிய பணிப்பாளர் சபை**

புதிய பணிப்பாளர் சபையானது சுகாதார அமைச்சரினால் நியமிக்கப்பட்ட ஏழு பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. பணிப்பாளர்களில் ஒருவர் நிதி அமைச்சுப் பிரதிநிதியும் மற்றுமொருவர் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் பிரதிநிதியும் ஆவர். பணிப்பாளர் சபையின் உறுப்பினர்கள் 2020 தை மாதம் முதல் நியமிக்கப்பட்டனர். இந்தக் காலப்பகுதியில், புதிய தலைவர் 2024ம் ஆண்டு செப்டெம்பரில் நியமிக்கப்பட்டதுடன், ஏனைய பணிப்பாளர்கள் 2025 ஜனவரியில் இருந்து நியமிக்கப்பட்டார்கள்.

| | |
|---|---|
| பேராசிரியர். ஜயந்த விஜயபண்டார | -தலைவர் |
| திரு. ஆர்.ஏ.எஸ்.கே.ரணசிங்க | -பணிப்பாளர் |
| திரு. ஜே.டி.கே.ஜி.கொடுவேகெதர | -பணிப்பாளர் |
| டாக்டர்.என்.ஆர்.கே.விதானகே | -பணிப்பாளர் |
| திரு.டி.டி.வன்னியாராச்சி | -பணிப்பாளர் |
| திரு. ஏ.ஏ.எம். அமரசிங்க | -பணிப்பாளர் |
| திரு.ஆர்.எம்.யு.சந்ரநாத் | -பணிப்பாளர் |

# பணிப்பாளர்களின் அறிக்கை

**முன்னைய பணிப்பாளர் சபை**

முன்னைய பணிப்பாளர் சபை உறுப்பினர்கள் 2020 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்கள். 2024 இல், பணிப்பாளர் சபையானது எட்டு கூட்டங்களை நடத்தியது. சம்பந்தப்பட்ட காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகள் தொடர்பாக தலைவரும் பணிப்பாளர் சபையும் பொறுப்புமிக்கவர்களாக இருந்தார்கள்.

டாக்டர். பி. பி. ஜி. பி. யு. இந்ரவன்ச - தலைவர்
(2024 செப்டெம்பர் வரை)
டாக்டர். பந்துல சந்ரநாத் விஜயசிறிவர்த்தன - பணிப்பாளர்
(2024 டிசெம்பர் வரை)
வி.ஜி. சமிந்த விக்ரமரத்ன - பணிப்பாளர்
(2024 டிசெம்பர் வரை)
யு.எஸ்.கே. தெனவத்த - பணிப்பாளர்
(2024 டிசெம்பர் வரை)
ஏ.ஆர்.விக்ரமசிங்க - பணிப்பாளர்
(2024 டிசெம்பர் வரை)

**கணக்கீட்டுக் கொள்கைகள்**

கூட்டுத்தாபனத்தின் பிரதான கணக்கீட்டுக் கொள்கைகள் 45-61 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

**சுற்றாடல் பாதுகாப்பு**

சுற்றாடலுக்குப் பாதிப்பில்லாத விதத்தில் செயற்படுவதும் நாம் தொழிற்படும் சமூகத்தில் உள்ள எமது வாடிக்கையாளர்களுக்கு பயன்மிக்க விளைவைக் கொண்ட உயர் தரத்திலான உற்பத்திகளை வழங்குவதும் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பாகும்.

**நியதிச்சட்டக் கொடுப்பனவுகள்**

அரசாங்கத்துக்கும் ஊழியர்களுக்குமான எல்லா நியதிச் சட்டக் கொடுப்பனவுகளும் ஐந்தொகைத் திகதியில் செலுத்தப்பட்டுள்ளன.

**ஐந்தொகைத் திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்**

நிதிக்கூற்றுகளில் திருத்தங்களை அல்லது வெளிப்பாட்டைத் தேவைப்படுத்தும் எவ்வித நிகழ்வும் ஐந்தொகைத் திகதியிலிருந்து இடம்பெறவில்லை.

**நடைபெற்றுக் கொண்டிருக்கும் அக்கறை**

நடைபெற்றுக்கொண்டிருக்கும் அக்கறை எண்ணக்கருவின் அடிப்படையில் நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்படுகின்றன. எதிர்வுகூறக்கூடிய காலத்தில் கூட்டுத்தாபனத்தில் தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கு போதிய வளங்களைக் கூட்டுத்தாபனம் கொண்டுள்ளது என பணிப்பாளர் சபை திருப்தியடைகின்றது.

**கணக்காய்வாளர்களை நியமித்தல்**

1971ஆம் ஆண்டின் நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வாளர் நாயகம், கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வாளராவார். 2024 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான கூட்டுத்தாபனத்தின் நிதியியல் செயற்பாடுகளின் வருடாந்த கணக்காய்வை அவர் மேற்கொண்டார்.

..............................................
பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார
தலைவர்
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்
28ம் திகதி மாசி 2025

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2024

**கணக்காய்வுக் குழுவின் பணிப்பொறுப்பு**

2021.11.17 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பொது முயற்சிகள் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் தொடர்பான கூட்டிணைந்த ஆளுகை வழிகாட்டிகளுக்கு இணங்க கணக்காய்வுக் குழு (AC) அமைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட வழிகாட்டிகளின் பிரகாரம் 2022.12.01 ஆந் திகதி பணிப்பாளர்கள் சபையால் அங்கீகரிக்கப்பட்ட SPMC இன் 'கணக்காய்வுக் குழு சாசனத்தால்' AC வழிநடாத்தப்பட்டது.

அதன் பிரகாரம், இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க, நிதி அறிக்கையிடல் தேவைகளுக்கு இணங்குதல், நிறுவனச் சட்டங்களின் தகவல் தேவைகள், கம்பனிகள் சட்டம் மற்றும் ஏனைய தொடர்புடைய நிதி அறிக்கையிடல் தொடர்பான பிரமாணங்கள் மற்றும் தேவைகள், இலங்கை கணக்காய்வு நியமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக நிறுவனத்தின் உள்ளக கட்டுப்பாடுகள் மற்றும் இடர் முகாமைத்துவ நடைமுறைகள் போதுமானதாக இருப்பதை உறுதி செய்வதற்கான செயல்முறை, நிறுவனத்தின் உள்ளக கணக்காய்வு பணியின் செயலாற்றலை உறுதிப்படுத்துதல், சபை உறுப்பினர்கள் மற்றும் பிரதான முகாமைத்துவ உத்தியோகத்தர்களுடன் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவதற்காகான பொறுப்பு, நிதி அறிக்கைகளில் வெளிப்படுத்தல்களைத் தயாரித்தல், சமர்ப்பித்தல் மற்றும் போதியளவில் நிறைவேற்றுவதற்காக கணக்காய்வுக் குழு, பணிப்பாளர்கள் சபைக்கு உதவி வழங்குகிறது.

**2024 ஆம் ஆண்டில் குழு உள்ளடக்கம்**

கணக்காய்வுக் குழு (க.கு) கூட்டுத்தாபனத்தின் நிறைவேற்றுத்தரம் அல்லாத மூன்று பணிப்பாளர்களைக் கொண்டிருந்ததுடன் இந்த ஆண்டில் பொதுத் திறைசேரியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் தலைமையில் செயல்பட்டிருந்தது.

| | |
|---|---|
| ஏ.ஆர். விக்ரமசிங்க | பணிப்பாளர் - SPMC பணிப்பாளர் (பதில்) நிதி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களம் |
| வீ.ஜி.சீ. விக்ரமரத்ன - உறுப்பினர் | SPMC- பணிப்பாளர் |
| யூ.எஸ்.கே. தேனவத்த - உறுப்பினர் | SPMC- பணிப்பாளர்/மேலதிக செயலாளர் (சுதேச மருத்துவத் துறை) சுகாதார அமைச்சு |

2025 சனவரி இல் சபை மீள்கட்டமைக்கப்பட்டதன் பிரகாரம் 2025 சனவரி 28 ஆந் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் பின்வரும் பணிப்பாளர்களால் கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டது.

| | |
|---|---|
| திரு. ஆர்.ஏ.எஸ்.கே. ரணசிங்க | பணிப்பாளர் - SPMC பணிப்பாளர் - நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் பொது முயற்சிகள் திணைக்களம் |
| திரு. ஏ.ஏ.எம். அமரசிங்க உறுப்பினர் | பணிப்பாளர் - SPMC |
| திரு. டி.டி. வன்னியாராச்சி உறுப்பினர் | பணிப்பாளர் - SPMC |

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2024

**வழக்கமாக பங்குபற்றுபவர்கள்**

**பார்வையாளர்களாக பங்குபற்றுபவர்கள்**

| | |
|---|---|
| திரு. கே.கே.எஸ் ஜயக்கொடி | தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் உதவிக் கணக்காய்வாளர் தலைமை அதிபதி |
| திருமதி. ஆர்.எம்.எஸ் வசந்த | சுகாதார அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் (2024.02.20 வரை) |
| திருமதி. டி.என்.ஆர்.என் பேமதுங்க | சுகாதார அமைச்சின் பிரதான உள்ளக கணக்காய்வாளர் (மருத்துவ விநியோகப் பிரிவு) (2024.05.21 முதல்) |
| திருமதி. ஜி எல் எம் பி டி சில்வா | தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் கணக்காய்வு அத்தியட்சகர் |

**அழைப்பின் பேரில் பங்குபற்றுபவர்கள்**

| | |
|---|---|
| டாக்டர். உத்பல இந்திரவன்ஷ | தலைவர் - SPMC |
| திருமதி. அசந்தி அதுரலிய | பொது முகாமையாளர் - SPMC |

SPMC இன் உள்ளக கணக்காய்வாளர் க.கு கூட்டங்களின் அழைப்பாளராக செயல்பட்டார்.

SPMC இன் உள்ளக கணக்காய்வாளர் மற்றும் உள்ளக கணக்காய்வு உத்தியோகத்தர்கள் க.கு கூட்டங்களில் பங்கேற்றனர்.

**கவனம் செலுத்தப்பட்ட மற்றும் செயற்பாட்டுப் பகுதிகள்**

**உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை**

- உள்ளக கணக்காய்வு பணியின் சுதந்திரம், நோக்கம் மற்றும் செயலாற்றல் மற்றும் நிறுவனத்தின் வளங்களின் போதுமான தன்மையை மீளாய்வு செய்யப்பட்டது.
- உள்ளக கணக்காய்வு திட்டம் அனுமதிக்கப்பட்டதுடன் வருடம் பூராகவும் குறித்த திட்டத்தை நடைமுறைக்கிடுவதன் வினைத்திறன் மீளாய்வு செய்யப்பட்டது. உள்ளக கட்டுப்பாடு அவதானிப்பு செயற்பாட்டை முன்னேற்ற க.கு.வின் முன்னேற்றம் கண்காணிக்கப்பட்டது.
- கொடுப்பனவுகள், காசு கையாளல், பெறுகைகள், மூலப்பொருட்கள் மற்றும் பூர்த்திப்பொருள் இருப்பு ஊழியர்களின் சம்பளம், கணக்கீட்டு நியமங்களை பயன்படுத்துதல், வியாபாரக் கடன்பட்டோர் ஆகிய துறைகளில் உள்ள குறைபாடுகள் மற்றும் கணக்காய்வு பரிந்துரைகளை உள்ளடக்கிய எட்டு (08) உள்ளக கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்யப்பட்டதுடன் மேலும் முன்னிலைப்படுத்தப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய முகாமைத்துவத்தால் எடுக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகள் கவனத்தில் கொள்ளப்பட்டது.
- பொருட்பதிவேட்டுப் பொருட்கள், கொடுப்பனவுகள், காசு கையாளல், வியாபாரக் கடன்பட்டோர், பெறுகைகள் மற்றும் ஊழியர்களின் சம்பளம் ஆகிய துறைகளில் பதினான்கு (14) உள்ளக கட்டுப்பாட்டு அமைப்புகளின் போதுமான தன்மை மற்றும் செயல்திறனைக் கருத்தில் கொண்டு, பொருத்தமான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.
- பொருட்பதிவேட்டுப் பொருட்கள் மற்றும் சம்பளம் தொடர்பாக வெளியிடப்பட்ட முன்னைய உள்ளக கணக்காய்வு அறிக்கைகளில் பத்து (10) பிரச்சினைகளைக் கருத்தில் கொண்டு, அவற்றை சரிசெய்ய முகாமைத்துவத்தால் எடுத்த பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் உரிய கவனம் செலுத்தப்பட்டது.
- தேவையான தகவல்களைப் பகிர்ந்தளித்தல் தொடர்பாக சகல திணைக்களங்களுக்கும் இடையிலான தொடர்பின் முக்கியத்துவத்திற்கு கவனம் செலுத்தி பொருத்தமான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.
- மூலப்பொருட்கள் மற்றும் காசோலை கொடுப்பனவுகள் ஆகியவற்றில் முயற்சியாண்மை வள திட்டமிடல் (ERP) அமைப்பால் உருவாக்கப்படும் தகவல்களின் சரியான தன்மை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2024

**வெளியக கணக்காய்வு அறிக்கைகள்**

நாட்டின் அரசியலமைப்பின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் வெளியக கணக்காய்வு கணக்காய்வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்படுகிறது.

2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் (க.த.அ) வரைவு அறிக்கைகளில் தீர்க்கப்படாத இரண்டு (02) பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் நிர்மாண ஒப்பந்தங்கள் மற்றும் பயன்படுத்த முடியாத நிலையான சொத்துக்களை அகற்றுவது தொடர்பான குறைபாடுகளை சரிசெய்வதற்காக முகாமைத்துவத்தால் எடுத்த பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

2022 ஆம் ஆண்டிற்கான வரைவு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் (க.த.அ) அறிக்கையில் சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்காமை தொடர்பான பத்து (10) பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் ஊழியர் ஆட்சேர்ப்பு, ஊழியர் கடன்கள் செலுத்துதல், பணிக்கொடை மற்றும் போக்குவரத்து, வருகை, ஊழியர் பணி மாற்றம், விடுமுறை மீதி தொடர்பான ஏனைய ஊதியங்கள் தொடர்பான குறைபாடுகளை சரிசெய்வதற்காக முகாமைத்துவத்தால் எடுத்த பின்தொடர் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தி மேற்குறிப்பிட்ட தீர்ப்பளிக்கும் பகுதிகளில் பொருத்தமான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

2023 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் (க.த.அ) அறிக்கையை மீளாய்வு செய்து, முன்னைய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் (யுபு'ள) அறிக்கை 2022 இன் அறிக்கையில் குறிப்பிடப்படாத பதினாறு (16) புதிய பிரச்சினைகள் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன் சட்டரீதியான மற்றும் ஒழுங்குமுறை தேவைகள், மூலப்பொருள் பெறுகைகள், மருந்து உற்பத்தி மற்றும் வழங்கல், குளிரூட்டும் அமைப்பை ஸ்தாபித்தல் மற்றும் கூட்டுமுயற்சிகள் (கூ.மு) கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான குறைபாடுகளை உள்ளடக்கி பொருத்தமான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டது.

**நிதி அறிக்கையிடல்**

2023 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கை மீளாய்வு செய்யப்பட்டதுடன் பின்வரும் ஆலோசனைகள் வழங்கப்பட்டன,

1.“பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்றில்” வருமான வரி தொகையை உள்ளடக்கவும்.

2.SPMC ஆல் மேற்கொள்ளப்பட்ட நிறுவன சமூகப் பொறுப்பு (CSR) திட்டங்களைக் குறிப்பிடவும்

3. “கணக்காய்வுக் குழு அறிக்கை – 2023” இல் அச்சிடல் தவறுகளைச் சரிசெய்யவும்

2023 ஆம் ஆண்டிற்கான வரைவு நிதி அறிக்கைகளை மீளாய்வு செய்து பணிப்பாளர்கள் சபை கூட்டத்தில் சமர்ப்பிக்க பரிந்துரைக்கப்பட்டது.

அரச மருந்துக் கூட்டுதாபனத்தின் (SPC) நீண்டகால நிலுவை மீதி தொடர்பில் கவனம் செலுத்தி, கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க ஐயக் கடன்களுக்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு பரிந்துரைத்தது.

மருத்துவ வழங்கல் பிரிவால் SPMC இற்கு நிலுவை மீதி தொடர்பில் கவனம் செலுத்தி பின்தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

**நடத்தப்பட்ட கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள்**

கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் (க.கு) மூன்று (03) மாதங்களுக்கு ஒரு முறையாவது கூட வேண்டும்.

நிதியாண்டில் மூன்று (03) கணக்காய்வுக் குழுக் (க.கு) கூட்டங்கள் மட்டுமே நடத்தப்பட்டன. 2024 ஒக்டோபர் இல் நடந்த சனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் புதிய பணிப்பாளர்கள் சபை நியமிக்கப்படாமையால் ஆண்டின் இறுதிக் காலாண்டிற்காக கணக்காய்வுக் குழுக் (க.கு) கூட்டத்தை நடத்துவதற்கு முடியாதிருந்தது.

# கணக்காய்வுக் குழுவின் அறிக்கை - 2024

**2024 ஆம் ஆண்டின் வருகை விவரங்கள்**

| உறுப்பினரின் பெயர் | கூட்டத் திகதிகள் | | | பங்குபற்றிய கூட்டங்கள் |
|---|---|---|---|---|
| | 20.02.2024 | 21.05.2024 | 04.09.2024 | |
| ஏ ஆர் விக்ரமசிங்க | X | X | X | மூன்றிலும் பங்குபற்றினார் |
| வீ ஜீ சீ விக்ரமரத்ன | X | X | X | மூன்றிலும் பங்குபற்றினார் |
| யூ எஸ் கே தேனவத்த | X | X | X | மூன்றிலும் பங்குபற்றினார் |

**எதிர்கால செயற்பாடுகள்**

2024 மற்றும் அதற்குப் பின்னர் கணக்காய்வுக் குழு சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களை அடைவதற்கு உறுதியளிப்பதன் மூலம் கணக்காய்வுக் குழு ஒரு சிறந்த மற்றும் பயனுள்ள உள்ளக கட்டுப்பாட்டு சூழலை போஷித்து வளர்க்கும்.

கணக்காய்வுக் குழுவின் சார்பாக

**திரு. ஆர்.ஏ.எஸ்.கே ரணசிங்க**
**தலைவர் - கணக்காய்வுக் குழு**
**2025.05.19**

# பெருநிறுவன ஆளுகை அறிக்கை

பெருநிறுவன ஆளுகை என்பது பங்குதாரர்களின் (முதலீட்டாளர்கள், பணியாளர்கள், விநியோகத்தர்கள், நுகர்வோர், அரசு மற்றும் பொதுமக்கள்) சிறந்த வெளிப்படைத்தன்மை, சிறந்த மற்றும் சரியான நேரத்தில் நிதி அறிக்கையை உறுதி செய்யும் வகையில் நிர்வாகத்தால் இயக்கப்படும் மற்றும் கட்டுப்படுத்தப்படும் அமைப்பாகும்.

கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்திற்கு பணிப்பாளர் சபை பொறுப்பாகும்.

**பணிப்பாளர்கள்**

முகாமைத்துவம், மருந்தியல், மருத்துவம், சந்தைப்படுத்தல், நிதி மற்றும் நிர்வாகத் துறைகளைச் சேர்ந்த தொழில்நிபுணர்களையும் மற்றும் அனுபவம் வாய்ந்த நபர்களை பணிப்பாளர்கள் சபை கொண்டுள்ளது.

பணிப்பாளர் சபை, ஒரு நிறைவேற்றுத்தர பணிப்பாளராக தலைவரையும், ஆறு நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களையும் உள்ளடக்கியது.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்டிருந்தாலோ அல்லது கௌரவ அமைச்சரினால் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாத நிலையிலோ தவிர, பணிப்பாளர் சபையானது மாதாந்த இடைவெளிகளுடன் கூட்டப்படுகிறது, கூடுதலாக சிறப்புக் கூட்டங்களும் தேவைக்கேற்ப ஏற்பாடு செய்யப்படுகின்றன

இந்த மதிப்பாய்வு காலத்தின் போது, எட்டு பணிப்பாளர் சபை கூட்டங்கள் நடைபெற்றன.

**முகாமைத்துவ குழு**

பெருநிறுவன முகாமைத்துவ குழு கூட்டுத்தாபன தலைவர் தலைமையில் உள்ளது. இந்தக் குழுவில் கூட்டுத்தாபனத்தின் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் துணைத் தலைவர்கள் உள்ளனர்

முகாமைத்துவ குழு, கூட்டுத்தானத்தின் நாளாந்த செயற்பாடுகளில் முடிவுகளை எடுக்கிறது, கொள்கை தீர்மானம் மற்றும் மூலோபாய நோக்கங்களை செயற்படுத்துகிறது, அத்துடன் கொள்கை தீர்மானங்களை எடுக்க பணிப்பாளர் சபைக்கு தேவையான பரிந்துரைகளையும் செய்கிறது.

முகாமைத்துவ குழு மாதாந்த இடைவெளிகளில் கூடுகிறது.

**கணக்காய்வு குழு**

'நல்ல நிர்வாகத்திற்கான பொது நிறுவன வழிகாட்டுதல்' மற்றும் பொது நிதி சுற்றறிக்கைகளின் படி கணக்காய்வு குழு அமைக்கப்பட்டுள்ளது.

கணக்காய்வு குழு பணிப்பாளர் சபையினால் நியமிக்கப்படுவதுடன் இது கூட்டுத்தாபனத்தின் மூன்று நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்களைக் கொண்டுள்ளது. நிதி அமைச்சினை பிரதிநிதித்துவப்படுத்தும் பணிப்பாளர் இந்த சபையின் தலைவராக உள்ளார்.

கூட்டுத்தாபனத்தின் செயல்பாடுகளை கணக்காய்வு குழு சுயாதீனமாக ஆய்வு செய்து மதிப்பீடு செய்கிறது. "உள் கணக்காய்வு திட்டத்தின்" படி மேற்கொள்ளப்படும் உள் கணக்காய்வு செயல்பாடு, கணக்காய்வு குழுவால் அங்கீகரிக்கப்படுவதுடன் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவிப்பும் செய்யப்படுகிறது.

இந்த மதிப்பாய்வு காலத்தின் போது, மூன்று கணக்காய்வு குழு கூட்டங்கள் நடத்தப்பட்டன.

கணக்காய்வு குழுவின் அறிக்கை பக்கம் 24 இல் உள்ளது.

**முதலீட்டாளரின் உறவு மற்றும் பொது பொறுப்புக்கூறல்**

பொது நிறுவனங்கள் பொதுமக்களின் சார்பாக அரசாங்கத்தால் நிறுவப்பட்டு, உரிமையாக்கப்பட்டு இயக்கப்படுகின்றன. எனவே கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையும், முகாமையாளர்களும் நிறுவனத்தின் முகாமை தொடர்பில் மத்திய சுகாதார அமைச்சுக்கும் நிதியமைச்சின் பொதுத்திறைசேரிக்கும்

# பெருநிறுவன ஆளுகை அறிக்கை

பொறுப்புடையவர்களாக இருக்கிறார்கள்.

வருடாந்த அறிக்கை, வருடாந்த கணக்குகள், வருடாந்த பாதீடுகள், காலாண்டு செயல்திறன் அறிக்கைகள் மேற்கண்ட பொறுப்பை நிறைவேற்றும் வகையில் அதே அதிகாரிகளுக்கு அனுப்பப்படுகின்றன

ஜனநாயக உலகம் முழுவதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்ட பாராளுமன்றம், பொது நிதிக்கான இறுதி அதிகாரமாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத்தின் செயல்திறன், நிதிநிலை அறிக்கைகள் மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ஆகியவற்றை உள்ளடக்கிய வருடாந்த அறிக்கை பாராளுமன்ற உறுப்பினர்களால் பரிசீலனைக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுகிறது.

ஒரு பொது நிறுவனமாக இருப்பதால், நாடாளுமன்றின் “பொது நிறுவனங்களுக்கான குழு” (COPE) விற்கும் கூட்டுத்தாபனம் பொறுப்பு கூறுகின்றது

**ஊதியக் கொள்கை**

பொது திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் துறையின் பரிந்துரைகளின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் ஊதியக் கொள்கை அமைக்கப்பட்டுள்ளது.

பொது திறைசேரியின் வெளியிடப்பட்ட கூட்டுத்தாபனங்களின் பணிப்பாளர்களின் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தொடர்பாக பொருந்தக்கூடிய சுற்றறிக்கைகளுக்கு இணங்க பணிப்பாளரின் கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகள் தீர்மானிக்கப்பட்டு செலுத்தப்படுகின்றன.

பொது திறைசேரியின் நிர்வாக சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரத்துடன் பொது நிர்வாக சம்பள விகிதங்களின் அடிப்படையில், நிறுவனத்தால் தயாரிக்கப்பட்ட சம்பள விகிதங்களில் ஊழியர்களின் சம்பளம் வழங்கப்படுகிறது.

வெகுமதிகளை நேரடியாக செயல்திறனுடன் இணைக்க செயல்திறன் ஊக்குவிப்புத் திட்டம் உள்ளது.

**உள்ளக கட்டுப்பாடு**

கூட்டுத்தாபனத்தினால்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும்
அனைத்துப் பரிவர்த்தனைகளும் முறையாக அங்கீகரிக்கப்பட்டு, பதிவுசெய்யப்பட்ட மற்றும் அறிக்கையிடப்பட்டவை என்பதற்கான நியாயமான உத்தரவாதத்தை வழங்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட உள்கட்டுப்பாட்டு முறையை கூட்டுத்தாபனம் பராமரிப்பதை உறுதிசெய்யும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உள்ளது.

செயல்பாட்டு நிறுவன அமைப்பு செயல்பாட்டில் உள்ளது. துறைகள் உற்பத்தி, தரக் கட்டுப்பாடு, பராமரிப்பு, நிதி, திட்டமிடல் மற்றும் உருவாக்கம் ஆராய்ச்சி, மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தல் போன்ற வரையறுக்கப்பட்ட செயல்பாடுகளுடன் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு துறையின் தலைவர்களும் நேரடியாக கூட்டுத்தாபனத்தின் தலைமை இயக்க அதிகாரியான பொது முகாமையாளரிடம் அறிக்கை செய்கிறார்கள்.பொது முகாமையாளர் தலைவருக்கும் பணிப்பாளர்சபைக்கும் அறிக்கை செய்வபராவார்.உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையானது உள்ளக கணக்காய்வு கணக்காய்வு பொறிமுறையினால் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. உள்ளக கணக்காய்வு அறிக்கைகள் கூட்டுத்தாபனத்தின் தலைவருக்கும் கணக்காய்வு குழுவின் தலைவருக்கும் அனுப்பப்படுவதனால், உள்ளக கணக்காய்வாளரின் சுயாதீன தன்மை இன்னும் பலப்படுத்தப்படுகிறது.

கொடுக்கல்வாங்கலின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கு தேசிய கொள்முதல் வழிகாட்டல்கள் கூட்டுத்தாபனத்தினால் பின்பற்றப்படுவதுடன், ஆர்வமுள்ள தரப்பினருக்கு சமமான வாய்ப்புகள் கொடுக்கப்படுகின்றது.

மூலதன பாதீட்டை உள்ளடக்கும் வருடாந்த பாதீடானது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்படுவதுடன் சுகாதார மற்றும் நிதி அமைச்சுகளிற்கு அனுப்பியும் வைக்கப்படுகின்றன.

# பணிப்பாளர்களின் பொறுப்புகள் பற்றிய கூற்று

நிதியியல் கூற்றுகள் தொடர்பாக பணிப்பாளர்களின் பொறுப்புகள், கணக்காய்வாளர்களின் பொறுப்புகளிலிருந்து வேறுபடுகின்றன. அவை பற்றிய விபரம் 84-96 ஆம் பக்கங்களில் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் தரப்பட்டுள்ளது.

1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் கீழ், ஓர் அரச கூட்டுத்தாபனமானது வருமானமும் செலவினங்களும், சொத்துகளும், பொறுப்புகளும் மற்றும் கூட்டுத்தாபனத்தின் ஏனைய எல்லா கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய கணக்குகளைப் பேணுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகள் தொடர்பாக அத்தகைய வடிவில் அத்தகைய விபரங்களைக் கொண்ட வருடாந்தக் கூற்றையும், கணக்குகளையும் ஓர் அரசாங்கக் கூட்டுத்தாபனம் தயாரித்தல் வேண்டும்.

அரசாங்கத்தினதும் பங்கீட்டாளர்களினதும் சார்பாகத் தொழில் முயற்சியொன்றை நடத்தும் நியதிச்சட்டப் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உண்டு. நியாயமான அளவு செம்மையாக கூட்டுத்தாபனத்தின் நிதி நிலைமையைக் காட்டுவதற்கும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டுச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துவதற்கும் 1971 ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தினால் தேவைப்படுத்தப்படும் தகவல்களை வழங்குவதற்கும், போதியளவு கணக்குப் பதிவுகளைப் பேணுவதை உறுதிப்படுத்துவதற்கும் அவர்கள் பொறுப்புமிக்கவர்களாவதுடன் நிதிக் கூற்றுகளைத் தயாரிப்பதில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அதே அடிப்படையைப் பணிப்பாளர்கள் தொடர்ந்தும் கடைப்பிடித்தல் வேண்டும்.

கூட்டுத்தாபனத்தின் சொத்துகளைப் பாதுகாப்பதற்கும், இது தொடர்பாக உள்ளகக் கணக்காய்வு, உள்ளக சரிபார்த்தலும், நிதியியல் மீளாய்வுகளும், மோசடிகள் மற்றும் ஒழுங்கீனங்களைக் கண்டறிதல் என்பவை உள்ளிட்ட தகுந்த உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமைகள் சமர்ப்பிக்கப்படுவதில் கவனம் செலுத்துவதற்கும் பணிப்பாளர்கள் பொறுப்பைக் கொண்டுள்ளனர்.

1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் கீழ் எல்லா நிதியியல் பதிவுகள், அவை தொடர்பான தரவுகள் ஆகியவற்றுடன் பணிப்பாளர் சபையினால் கிடைக்கச் செய்யப்பட்ட நிதிக் கூற்றுகள் யாவும் கணக்காய்வாளர் நாயகத்தினால் பரிசீலிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களின் அபிப்பிராயம் இவ்வறிக்கையின் 84-96 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.



பேராசிரியர் ஜயந்த விஜயபண்டார
தலைவர்
அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம்

# அபாய முகாமைத்துவ அறிக்கை

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனமாகிய நாம், எமது நிறுவனத்தின் குறுகிய கால, நீண்ட கால ஆகிய இரு காலங்களிலும் பேண்தகுநிலையைக் காப்பதற்கு அபாய முகாமைத்துவத்துடன் இணைந்த பெறுமானத்தை உணர்ந்துள்ளோம். அபாய முகாமைத்துவம், எமது கூட்டிணை மூலோபாய மற்றும் தொழில்முயற்சி மாதிரியுருவின் ஓர் இன்றியமையாத கூறாகும். காலத்துடன் பெறுமானமொன்றைச் சேர்ப்பதற்கு எமக்குள்ள ஆற்றலின் மீது அது நேரடியாக தாக்கம் செலுத்துவதே அதற்குரிய காரணமாகும்.

**அபாய முகாமைத்துவத்தின் நோக்கங்களாவன:**

- நீடுறுதியான கூட்டுத்தாபனத்தின் இருப்பை உத்தரவாதப்படுத்தல்.
- சூழல் மற்றும் சந்தை நிலைமைகளிலிருந்து கூட்டுத்தாபனத்தைப் பாதுகாத்தல்.
- கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களையும் கூட்டுத்தாபனத்தின் சொத்துக்களையும் பொதுமக்களையும் பாதுகாத்தல்.
- வளங்களின் வினைத்திறனான பயன்பாட்டுக்கு உதவுதல்.

திரவத்தன்மை அபாயம், பெறுகை அபாயம், உற்பத்தி அபாயம், சந்தை அபாயம், அந்நியச் செலாவணி வீத அபாயம், சமூக பொருளாதார அபாயம், மனித வள அபாயம் அடங்கலான பல்வேறு அபாயங்களை முகாமை செய்வற்கு அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபத்தின் முகாமைத்துவத்தினால் பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன:

**திரவத்தன்மை அபாயம்**

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், அரச மருத்துவ வழங்கல்கள் பிரிவுக்கு 100% கடன் நிபந்தனையின் அடிப்படையில் மருந்து வகைகளை விநியோகிக்கின்றது.

மருத்துவ வழங்கல்கள் பிரிவினால் நீண்ட காலமாக செலுத்தித் தீர்க்கப்படாதுள்ள விலைப்பட்டியல்கள் மூலம் திரவத்தன்மை அபாயம் ஏற்படலாம். ஆகையால், திரவத்தன்மை அபாயத்தினை தவிர்த்துக் கொள்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து, பொதுத் திறைசேரியின் தலையீட்டுடன் குறித்த தொகைகளை ஈடுசெய்துகொள்வதற்கு கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்துள்ளது.

**பெறுகை அபாயம்**

புதிய மூலப்பொருள்களின் பெறுகை முக்கியமாக அரசாங்க கேள்விப்பத்திர நடபடிமுறைகளைத் தழுவியதாகவே மேற்கொள்ளப்படுவதுடன், மூலப்பொருள்களில் 80% க்குக் கூடுதலான அளவு இறக்குமதி செய்யப்படுகிறது. ஆகையால், உற்பத்திச் செயன்முறையின் மீது பாதிப்புச் செலுத்தக்கூடிய மூலப்பொருள்களை தொடர்ச்சியாக வழங்குவதில் அபாய நிலைமையொன்று காணப்படுகின்றது.

இந்த அபாயத்தினை தவிர்த்துக்கொள்வதற்கு மூலப்பொருள்கள் கிடைக்கக்கூடியதன்மையை முகாமைத்துவம்; நெருக்கமாக அவதானிக்கப்படுகிறது . உலகளவிலான கேள்விப்பத்திர நடபடிமுறைகளின் ஊடாக வழங்குநர்களின் அடிப்படையை விரிவாக்குவதற்கு அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

**உற்பத்தி அபாயம்**

சந்தைக்கு விநியோகிக்கப்படும் உற்பத்திகள் யாவும் எமது உள்ளான விவரக்குறிப்பீடுகள் போன்றே பிரித்தானிய பார்மகோபியா (BP) ஐக்கிய அமெரிக்க பார்மகோபியா (USP) ஏற்புடைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்கின்றன.

சிறந்த உற்பத்தி நடைமுறைகள் (GMP) தொடர்ந்தும் மேற்பார்வை செய்யப்படுவதோடு, மருந்து உற்பத்திகள் உரிய தரநியமங்களுக்கு அமைவானவையா என்பதை உறுதிசெய்வதற்காக குறித்த உற்பத்திகளுக்குரிய ஏனைய முறைமைகளும் நடபடிமுறைகளும் தொடர்ந்தும் மீளாய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.

# அபாய முகாமைத்துவ அறிக்கை

**சந்தை அபாயம்**

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்துடன் சம்பந்தப்பட்ட சந்தைப் போட்டிநிலை அதிகரிப்பதற்கான அபாயமொன்று உள்ளது. எமது உற்பத்திகளுக்கு பிரதான போட்டியாளர்களாக மருந்துகளை இறக்குமதி செய்வதில் ஈடுபட்டுள்ள மருந்துக் கம்பனிகளை அடையாளம் காட்டலாம். அபாயம் குறித்து உணர்ந்து, மொத்த கிரயத்தைக் குறைக்கும் நோக்குடன் செயல் விளைதிறனை அதிகரிப்பதன் மீது நாம் எமது கவனத்தை தொடர்ந்தும் செலுத்துகின்றோம்.

**செலாவணி விகித அபாயம்**

செலாவணி விகிதங்களின் ஏற்றவிறக்கம், உற்பத்திகளின் விலையிடலின் மீது நேரடியாகவே தாக்கம் செலுத்தக்கூடியதாகும். அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவம், அதன்போது ஏற்பட்ட சில பலவீனங்களைத் தவிர்ப்பதற்கு விலையிடல் குழுக் கூட்டமொன்றை நடாத்தியது.

**சமூக பொருளாதார அபாயம்**

தேசிய சுகாதார சேவைகள் முறைமைக்கும் பொதுமக்களுக்கும் தாங்கிக் கொள்ளக்கூடிய விலையில் பயனுறுதிவாய்ந்த மருந்துகளை வழங்குவது, ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் தலையாய பொறுப்பாகும்.

**மனித வள அபாயம்**

நிறுவனங்களின் பயிற்றப்பட்ட ஊழியர்கள் வெளிநாடுகளுக்கு புலம்பெயரும் அபாயமொன்று காணப்படுவதால், அதற்குரிய சம்பளமற்ற லீவு நடபடிமுறையை மாற்றியமைப்பதற்கு முகாமைத்துவம் தீர்மானித்துள்ளது.

# பேண்தகு அபிவிருத்தி



# பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், பொறுப்பு வாய்ந்த ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் கூட்டுத்தாபனத்தின் குறுகிய கால, நடுத்தர கால மற்றும் நீண்ட கால மூலோபாயங்களில் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை (SDGs) உள்ளடக்குவதன் மூலம் பேண்தகு அபிவிருத்தி இலக்குகளை எய்துவதற்கு பங்காற்றுகின்றது.

## வறுமைநிலையை ஒழித்துக் கட்டல்

கூட்டுத்தாபனம், தமது 342 ஊழியர்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்துவதற்காக அவர்களின் ஊழியக் கிரயமாக 723 மில்லியன் ரூபா தொகையைச் செலுத்தியுள்ளது. மேலும், அந்த ஊழியர்களினதும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களினதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் நோக்குடன் கடன் வழங்கல் திட்டங்களையும் மருத்துவ வசதிகள் முதலான பல்வேறு நலனோம்புகைத் திட்டங்களையும் அவர்களுக்கு வழங்குகின்றது.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், ஓர் அரச நிறுவனம் என்ற வகையில் பொது மக்களுக்கு பொருளாதார ரீதியாக நிவாரணமளிக்கும் நோக்குடன் உயர் தரம் வாய்ந்த மருந்து வகைகளை அவர்களால் பெறக்கூடிய விலைக்கு வழங்குகின்றது

## சிறந்த ஆரோக்கிய நிலையும் நலமும்

மருந்து வகைகளை உற்பத்தி செய்யும் ஒரேயொரு அரச நிறுவனமான அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், மருந்து உற்பத்திச் செயன்முறையில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற தரநியமங்களை அனுசரிக்கின்றது.

அரச மருத்துவமனைகளில் மருந்துகளுக்கு பற்றாக்குறை ஏற்படாதவாறு பல்வேறு மருந்து வகைகள் (அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் உற்பத்தித் தொடர்) தொடர்ச்சியாக அரச மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்படுவதுடன், விநியோக சேவை மார்க்கங்களின் ஊடாக தாங்கிக்கொள்ளக்கூடிய விலைக்கு தனியார்துறை சந்தைக்கும் அத்தகைய மருந்து வகைகள் வழங்கப்படுகின்றன.

சுகாதாரத்தையும் நலத்தையும் முன்னேற்றும் நோக்கில் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களையும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களையும் உள்ளடக்குகின்ற மருத்துவ உதவித் திட்டம், பணிக்கொடைக் கொடுப்பனவு, பிரசவ விடுமுறை வழங்குதல் முதலியவற்றின் மூலம்; தமது ஊழியர்களுக்கு மருத்துவ நன்மைகள் அடங்கலான நன்மைகளை கூட்டுத்தாபனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## பால்நிலை சமத்துவம்

தமது ஊழியர்கள் அனைவருக்கும் கூட்டுத்தாபனம்; சமவாய்ப்பு அளித்துள்ளதோடு, பால்நிலை அடிப்படையில் எந்தவொரு பாரபட்சமும் காட்டப்படுவதில்லை. ஊழியர்கள் அனைவருக்கும் துறையில் எந்தவொரு பாரபட்சமும் இன்றி அவர்களுக்கு சமமான நன்மைகளை வழங்கும் ஒரு கொள்கை பின்பற்றப்படுவதுடன், அனைத்து நியதிச்சட்ட மற்றும் ஏனைய தேவைகளுக்கும் இணங்க ஒரே தொழில் வகுதிகளுக்கு சமமான நன்மை அளவுத்திட்டங்களுக்கு (1:1) தகுதிபெறும் விதத்தில் ஆளெவருக்கும் பால்நிலை வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்பளிக்காமல் செயலாற்றப்படுகின்றது.

## நேரடியாக பணியிலீடுபடுதலும் பொருளாதார வளர்ச்சியும்

நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு வீத வரிகள், அறவீடுகள், தீர்வைகள் என்ற வடிவில் கூட்டுத்தாபனத்தினால் 1,257 மில்லியன் ரூபா தொகை அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அரசுக்குச் சொந்தமான ஒரே அரச மருந்து உற்பத்தியாளர் என்ற வகையில் நாட்டினுள் மருந்துப்பொருள்களுக்கு பற்றாக்குறை ஏற்படாதவாறு பல்வேறு மருந்து வகைகளை ஆண்டுபூராகவும் அரச மருத்துவமனைகளுக்கும் தனியார்துறைக்கும் தொடர்ந்தேர்ச்சியாக வழங்குவதில் அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது.

மேலும் அரச மருந்தாக்கற்,கூட்டுத்தாபனம் 2024 ஆம் ஆண்டில் அதன் மொத்தக் கிரயத்தில் 35% க்குக் கூடுதலான பங்கு பொருளாதார பெறுமானமொன்றையும் டொலர் சேமிப்பொன்றையும் நாட்டுக்கு சேர்த்துக் கொடுத்தது.

# பேண்தகு அபிவிருத்தி இலக்குகள்

## கைத்தொழில் புத்தாக்கமும் உட்கட்டமைப்பு வசதிகளும்

புற்றுநோய்ச் சிகிச்சைக்குப் பயன்படுத்தப்படும் மருந்துகளையும் வாய்வழியாக எடுக்கக்கூடிய திண்ம (OSD) மருந்துகளையும், உடற்குறை நிவர்த்தி உபகரணங்களையும் உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலையொன்றை ஹொரண-மில்லாவையில் நிறுவுவதற்கு அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் திட்டம் வகுத்துள்ளது.

## சமத்துவமின்மைகளைக் குறைத்தல்

பயிற்சியளித்தல், ஆட்சேர்ப்பு செய்தல், வேலை ஒப்படைப்புகள், பதவி உயர்வு வழங்கல்கள் போன்ற நாளாந்த நடவடிக்கைகளின் போது அனைவரையும் நியாயமான முறையில் கவனிக்கும் பொருட்டு உதவுவதற்கான தெளிவான சமத்துவமான கொள்கைகளைப் பேணுவதன் ஊடாக வாய்ப்புக் கிட்டும்.

## பொறுப்புடனான நுகர்வும் உற்பத்தியும்

உடன்பட்ட சர்வதேச செயல் வரைகளுக்கு இணங்க, கழிவுப்பொருள்களை வெளியேற்றுவதற்கான சுற்றாடல் நட்புறவான முகாமைத்துவ முறைமையொன்று எம்மால் முன்னெடுக்கப்படுகிறது. அதன் மூலம் மனிதர்களின் சுகாதாரத்திற்கும் சுற்றுச்சூழலுக்கும் ஏற்படக்கூடிய பாதக தாக்கங்களைக் குறைப்பதற்காக வளிக்கும், நீருக்கும், மண்ணுக்கும் அவற்றை விடுவிக்காமல் இருக்க நாம் உறுதியளிக்கின்றோம். சர்வதேச அங்கீகாரம் பெற்ற முறைமைகளையும் அதற்கு உடன்பாடான சட்டதிட்டங்களையும் ஒழுங்குவிதிகளையும் அனுசரித்தே மருந்து உற்பத்திக் கழிவுப்பொருள்கள் வெளியேற்றப்படுகின்றன.

## காலநிலை நடவடிக்கைகள்

காலநிலை சார்ந்த தொல்லைகளும் அவை சார்ந்ததாக இடம்பெறும் இயற்கை அனர்த்தங்களும் மூலம் ஏற்படக்கூடிய பாதிப்புகளைக் குறைப்பதற்கும் தடுப்பதற்குமான உள்ளக நடபடிமுறைகளும் நடைமுறைகளும் எம்மால் கட்டியெழுப்பப்பட்டுள்ளன. அவற்றைச் செயற்படுத்துவதற்கு பணியாட்குழுவுக்கு அவசியமான பயிற்சிகளையும் விழிப்பூட்டல் நிகழ்ச்சித்திட்டங்களையும் நாம் ஏற்பாடு செய்து கொடுக்கின்றோம்.

# அ.ம.கூ. இனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் - 2024

| இன ரீதியான உற்பத்தி அளவு - (குளிகைகள் / கூட்டுக்குளிகைகள்) மில்லியன் அலகுகளில் | | | |
|---|---|---|---|
| உற்பத்திகள் | அளவு மில்லியன் அலகுகள | உற்பத்திகள் | அளவு மில்லியன் அலகுகள |
| அமொக்சிசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி. | 113.30 | காபாபென்ரீன் கூட்டுக்குளிகைகள் USP 300 மி.கி. | 10.20 |
| அமொக்சிசிலின் கூட்டுக்குளிகைகள் BP 500 மி.கி. | 39.22 | க்ளிக்ளசைட் குளிகைகள் BP 40 மி.கி. | 318.00 |
| அமொக்சிசிலின் குளிகைகள் USP 125 மி.கி. | 5.25 | கிளிக்ளசைட் குளிகைகள் BP 80 மி.கி. | 314.00 |
| அஸ்கோர்பிக் அசிட் குளிகைகள் BP 100 மி.கி. | 35.10 | இன்டொமெதசீன் கூட்டுக்குளிகைகள் 25 மி. கி | 4.90 |
| அரோவஸ்ரடின் குளிகைகள் IP 10 மி.கி. | 343.52 | லிவொதைரொக்சின் குளிகைகள் IP 50 மை.கி. | 75.74 |
| பென்செக்சோல் குளிகை BP 2 மி.கி. | 58.00 | லொசார்டன் பொட்டாசியம் குளிகைகள் 50 மி.கி. | 291.20 |
| பிசொபுரொலோல் குளிகைகள் BP 5 மி.கி. | 6.75 | மெபென்டசோல் குளிகைகள் USP 100 மி.கி. | 14.00 |
| காபமெசபைன் குளிகைகள் BP 200 மி.கி. | 49.00 | மெபெனமிக் அசிட் குளிகைகள் BP 500 மி.கி. | 1.35 |
| சிற்ரசின் குளிகைகள் BP 10 மி.கி. | 10.40 | மெற்ஃபோர்மின் குளிகைகள் BP 500 மி.கி | 9.28 |
| சிப்ரோஃபிலொக்சசின் குளிகைகள் USP 250 மி.கி. | 2.40 | மெற்றொனிடசோல் குளிகைகள் BP 200 மி.கி | 18.90 |
| கிளரித்ரோமைசின் குளிகைகள் USP 250 மி.கி. | 10.20 | ஒமிபிரசோல் கூட்டுக்குளிகைகள் IP 20 மி.கி. | 249.98 |
| கிளரித்ரோமைசின் குளிகைகள் USP 500 மி.கி | 1.92 | பரசிடமோல் குளிகைகள் BP 500 மி.கி. | 194.02 |
| குளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி. | 13.30 | பெனொக்சிமெதைல் பெனிசிலின் குளிகைகள் BP 250 மி.கி. | 16.73 |
| குளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 500 மி.கி. | 10.86 | பிரெட்னிசொலோன் குளிகை BP 5 மிகி | 196.00 |
| கோ-ட்ரிமொக்சசோல் குளிகைகள் BP (வயது வந்தோர்) | 5.25 | புறப்றனலோல் குளிகை BP 40 மிகி | 18.00 |
| டைக்ளொஃபெனெக் சோடியம் DR குளிகள் USP 50 மி.கி. | 23.40 | றொசுவாஸ்ரரின் குளிகைகள் IP 10 மி.கி. | 3.20 |
| டைஎதையில்கார்பமசீன் குளிகைகள் BP 50 மி.கி. | 8.10 | சல்பியூடமோல் குளிகைகள் BP 2 மி.கி. | 232.80 |
| டில்ரியாசம் HCL குளிகைகள் USP 30 மி.கி. | 64.50 | ஸ்பிரனோலக்டோன் குளிகைகள USP 25 மி.கி. | 36.90 |
| டில்ரியாசம் HCL குளிகைகள் USP 60 மி.கி. | 54.25 | தியோபிலின் E/R குளிகைகள் USP 125 மி.கி. | 4.20 |
| டொம்பெரிடோன் குளிகைகள் BP 10 மி.கி. | 58.80 | டிராமடோல் கூட்டுக்குளிகைகள் IP 50 மி.கி. | 5.25 |
| எனலப்பிரில் மெலியேற் குளிகைகள் USP 5 மி.கி. | 33.60 | ட்றைஃப்ளோபெரசின் HCL குளிகைகள் BP 5 மி.கி. | 9.00 |
| ஃபமோரிடின் குளிகைகள் USP 20 மி.கி. | 90.45 | வெரபமில் குளிகைகள் BP 40 மி.கி. | 29.70 |
| ஃபுளுகுளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 250 மி.கி. | 17.10 | விட்டமின் BP கொம்பிளெக்ஸ் குளிகைகள் CHF | 19.60 |
| ஃபுளுகுளொக்சசிலின் கூட்டுக்குளிகைகள் BP 500 மி.கி. | 22.43 | | |
| ஃபோலிக் அசிட் குளிகைகள் BP மி.கி. | 10.00 | | |
| புரூஸிமைட் குளிகைகள் BP 40 மி.கி. | 12.00 | | |








# அ.ம.கூ. உடனான கூட்டுமுயற்சிகள்









# கூட்டுமுயற்சி உற்பத்திகள்

Acetaminophen Suppositories USP 125mg
Acetaminophen Suppositories USP 250mg
Acetaminophen Suppositories USP 500mg
Acetazolamide Tablets BP 250mg
Aciclovir Tablets BP 200mg
Aciclovir Tablets BP 800mg
Alfacalcidol Softgelatin Capsules 0.25mcg
Amantadine HCI Capsules USP 100mg
Amiodarone Tablets BP 100mg
Amisulpride Tablets BP 200mg
Amlodipine Besylate Tablets USP 2.5mg
Aripiprazol Tablets USP 10mg
Ascorbic Acid Tablets BP 100mg
Aspirin - Gastro Resistant Tablets USP 75mg
Atorvastatin Tab 10mg
Atorvastatin Tab 20mg
Atorvastatin Tablets 40mg
Atorvastatin Tablets IP 10mg
Atorvastatin Tablets IP 20mg
BaclofenTablets 5mg
Baclofen Tablets BP 10mg
Betamethasone Valerate Cream USP 0.1%
Betamethasone Valerate Oinment USP 0.1%
Bisacodyl Suppositories USP 10mg
Bisacodyl Tablets BP 10mg
Bisoprolol Fumarate Tablets USP 2.5mg
Bosentan Tablets 62.5mg
Bosentan Tablets 125mg
Cabergoline Tablets USP 0.5mg
Calciferol Tablets 10000 IU
Calcitriol Softgel Capsules 0.25mcg
Calcium Carbonate Tablet 1250mg
Calcium Carbornate - Chewable Tablets BP 500mg
Calcium Gluconate Injection USP 10% w/v, 10ml
Calcium Lactate Tablets BP 300mg
Captopril Tablets 12.5mg
Carvedilol Tablets USP 3.125mg
Carvedilol Tablets USP 6.25mg
Carvedilol Tablets USP 12.5mg
Cetirizine Hydrochloride BP 10mg
Cetirizine Oral Solution BP5mg/5ml
Chlorphenamine Injection BP 10mg/ml, 1ml Ampoule
Chlorpheniramine Oral Solution USP 2mg/5ml
Chlorpromazine Tablets BP 50mg
Ciprofloxacin Intravenous Infusion BP 0.2% w/v, 100ml
Clindamycin Capsules BP 150mg
Clindamycin Capsules BP 300mg
Clomipramine Tablets 50mg
Clopidogrel Tablets USP 75mg
Clotrimazole Cream BP 1%
Clozapine Tablets USP 100mg
Colecalciferol Tablets BP 400 IU
Colecalciferol Capsules 1000 IU
Compound Sodium Lactate Intravenous Infusion BP 500ml
Cotton Crape Bandage - 5cm - 3m Roll
Cotton Crape Bandage - 7.5cm - 4.5m Roll
Cotton Crape Bandage - 7.5cm -9m Roll
Cotton Crape Bandage - 10cm - 6m Roll
Dapsone Tablets BP 25mg
Dapsone Tablets BP 50mg

# கூட்டுமுயற்சி உற்பத்திகள்

Deferasirox Tablets 100mg
Deferasirox Tablets 400mg
Dextran 40 Intravenous Infusion BP 10% w/v, 500ml
Diazepam 10mg/2ml Ampoule
Diclofenac Gastro Resistant Tablets BP 25mg
Diclofenac Sodium DR Tablets USP 50mg
Diclofenac Sodium Suppositories 100mg
Diclofenac Sodium Suppositories 12.5mg
Diclofenac Sodium Suppositories 25mg
Diltiazem - Prolonged Release Tablets BP 90mg
Domperidone Suppositories 10mg
Domperidone Suppositories 30mg
Domperidone Suppositories 60mg
Domperidone Tablets BP 10mg
Donepezil Hydrochloride Tablets USP 5mg
Doxepin Capsules BP 50mg
Enalapril Maleate Tablets USP 5mg
Ephedrine Injection BP 30mg/ml
Fentanyl Injection BP 100mcg/ 2 ml Ampoule
Ferrous Fumarate 91.2mg + Folic Acid Tablets 400mcg (Maternal and School Health)
Ferrous Fumarate 182.4mg + Folic Acid 400mcg Tablets
Ferrous Sulphate Tablets 200mg
Fluphenazine HCl USP 5mg
Frusemide Tablets BP 40mg
Gabapentin Capsules USP 300mg
Gliclazide Modified Release Tablets 30mg
Gliclazide Tab BP 40mg
Gliclazide Tab BP 80mg
GlucoseIntravenous Infusion BP 5% w/v, 500ml
Glucose Intravenous Infusion BP 10% w/v, 500ml
Glucose Intravenous Infusion BP 25% w/v, 25ml
Glucose Intravenous Infusion BP 50% w/v, 50ml
Haemodialysis Solution (Part A)
Haemodialysis Solution (Part B)
Hydralazine Tablets BP 50mg
Hydrocortisone Acetate Cream BP 1%
Hydrocortisone Ointment BP 1%
Hydroxychloroquine Sulfate Tablets USP 200mg
Isosorbide Mononitrate ER Tablets USP 30mg
Ketamine HCL Inj. 200mg/20ml Vial
Ketamine HCL Inj. 500mg/10ml Vial
Labetalol Tablets BP 100mg
Lamotragine Tablets USP 100mg
Lamotragine Tablets USP 25mg
Lamotragine Tablets USP 50mg
Levamisole Hydrochloride Tablets USP 40mg
Levetiracetam Tablets USP 250mg
Levetiracetam Tablets USP 500mg
Lidocaine 2% Injection BP 5ml Vial
Lidocaine Injection BP 2% w/v (Preservative free) 20ml vial
Lithium Carbonate Tablets BP 250 mg
Losartan Potassium Tablets BP 25mg
Losartan Potassium Tablets BP 50mg
Magnesium Sulfate Injection BP 50% w/v, 10ml
Mannitol Intravenous Infusion BP 20% w/v, 250ml
Mebendazole Tablets USP 100mg
Mebendazole Tablets USP 500mg (Chewable)
Mebendazole Tablets USP 500mg (Sachet)
Mesalazine Suppositories BP 500mg
Metaraminol Injection BP 10mg/ml, 1ml Ampoule

# கூட்டுமுயற்சி உற்பத்திகள்

Metformin SR Tablets 500mg
Metformin Tablets BP 500mg
Methionine Tablets 500mg
Methyldopa Tablets BP 250mg
Metolazone Tablets USP 5mg
Metoprolol Tartrate Tablets USP 50mg
Metronidazole Intravenous Infusion BP 0.5% w/v, 100ml
Miconazole Nitrate Cream BP 2%
Midazolam Injection BP 5mg/ ml Ampoule
Mycophenolate Mofetil Tablets 250mg
Mycophenolate Mofetil Tab USP 500mg
Mycophenolate Mofetil Tablets USP 250mg
Nalidixic Acid Tablets 250mg
Nicorandil Tablets BP 10mg
Nimodipine Tablets BP 30mg
Ofloxacin Intravenous Infusion 0.2% w/v, 100ml
Omeprazole GR Capsules 20mg
Omeprazole Magnesium - Gastero Resistant Tablets 10mg
Oseltamivir Phosphate Capsules USP 30mg
Oseltamivir Phosphate Capsules USP 45mg
Oxcarbazepine Tablets USP 150mg
Oxcarbazepine Tablets USP 300mg
Paediatric Paracetamol Oral Solution BP 120mg/5ml
Pancreatin Capsules 150mg
Paracetamol Tablets BP 500mg
Penicillamine Capsules USP 250mg
Phenytoin Sodium Injection 250mg/5ml Ampoule
Phytomenadione Tablets BP 5mg
Pizotifen Tablets BP 0.5mg
Pottasium Chloride 15% Injection 10ml
Prazosin Tablets 1mg

Pregabalin Capsules IP 75mg
Primidone Tablets USP 250mg
Promethazine Injection BP 25mg/ml, 2ml Ampoule
Propranolol - Prolong Released Capsules BP 160mg
Pyridostigmine Tab BP 60mg (Blister)
Pyridoxine Tablets BP 10mg (Blister)
Pyrimethamine Tabs BP 25mg (Blister)
Quetiapine ER Tablets USP 200mg
Quetiapine Tablets USP 100mg
Risperidone Tablets USP 1mg
Risperidone Tablets USP 2mg
Salbutamol Oral Solution 2mg/5ml
Sertraline HCl Tablets USP 50mg
Sildenafil Tablets USP 50mg
Sitagliptin Tablets USP 50mg
Sitagliptin Tablets BP 100mg
Sodium Bicarbonate Tablets USP 600mg
Sodium Chloride Intravenous Infusion BP 0.9% w/v, 500ml
Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.45% & 5% w/v, 500ml
Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.45% & 10% w/v, 500ml
Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.9% & 5% w/v, 500ml
Sodium Chloride & Glucose Intravenous Infusion BP 0.9% & 10% w/v, 500ml
Sodium Chloride Injection BP 0.9% w/v, 5ml
Sodium Chloride Intravenous Infusion BP 3% w/v, 500ml
Sodium Fusidate Tablets 250mg
Sodium Valproate - Gastro Resistant Tablets BP 100mg
Sodium Valproate - Gastro Resistant Tablets BP 200mg
Solifenacin Succinate Tablets 5mg

# கூட்டுமுயற்சி உற்பத்திகள்

Solifenacin Succinate Tablets 10mg

Sotalol Hydrochloride Tablets USP 80mg

Sterilised Water for Injections BP-10ml

Sulfadiazine Tablets USP 500mg

Sumatriptan Tablets BP 50mg

Tamsulosin Prolonged Release Capsules BP 0.2mg

Tamsulosin Prolonged Release Capsules BP 0.4mg

Theophyline Extended Release Tablets 125 mg

Thiamine Hydrochloride Tablets USP 10mg

Thiamine Hydrochloride Tablets USP 100mg

Thiamine Injection BP 100mg/2ml Ampoule

Tranexamic Acid Capsules 500mg

Tranexamic Acid Injection 500 mg/ml

Trientine Hydrochloride Capsules USP 300mg

Trifluoperazine Tablets BP 5mg

Ursodeoxycholic Acid Tablets BP 150mg

Valganciclovir Tablets USP 450mg

Venlafaxine  Hydrocholoride ER Capsules USP 37.5mg

Venlafaxine Hydrocholoride ER Capsules USP 75mg

Verapamil HCL Injection 2.5 mg/2ml Ampoule

Verapamil PR Tablets BP 240mg

Vigabatrin Tablets BP 500mg

Vitamin A Capsules USP 100000 IU

Voriconazol Tablets 200mg

Wafarin Sodium Tablets USP 0.5mg

Wafarin Sodium Tablets USP 1mg

Wafarin Sodium Tablets USP 3mg

# ACHIEVEMENTS






## STATE PHARMACEUTICAL MANUFACTURING CORPORATION

WON

## THE GOLD AWARD

FOR THE

BEST ANNUAL REPORTS AND ACCOUNTS OF PUBLIC SECTOR - 2023
CONDUCTED BY THE ASSOCIATION OF PUBLIC FINANCE ACCOUNTANTS OF SRI LANKA.

# முழுமையான வருமானக் கூற்று

2024 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டுக்கானது
(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | குறிப்பு | 2024 | 2023 |
|---|---|---|---|
| வருமானம் | 1 | 28,202,081,820 | 29,331,718,691 |
| விற்பனை செலவுகள் | 2 | (25,219,748,290) | (26,381,969,229) |
| **மொத்த இலாபம்** | | **2,982,333,530** | **2,949,749,462** |
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 3 | 38,588,211 | 14,096,336 |
| நிர்வாகச் செலவுகள் | 4 | (418,617,627) | (396,275,773) |
| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 5 | (86,936,746) | (937,035,896) |
| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 6 | (13,526,232) | (22,286,381) |
| **தொழிற்பாட்டு இலாபம்** | | **2,501,841,136** | **1,608,247,748** |
| நிதிச்செலவு | 7 | (25,015,940) | (57,488,612) |
| நிதி வருமானம் | 8 | 606,178,870 | 622,548,970 |
| **வரிக்கு முந்திய இலாபம்** | | **3,083,004,066** | **2,173,308,106** |
| வரிச்செலவுகள் | 9 | (926,973,991) | (654,752,799) |
| **ஆண்டுக்கான இலாபம்** | | **2,156,030,075** | **1,518,555,307** |
| **முழுமையான வருமானக் கூற்று** | | | |
| ஆண்டுக்கான இலாபம் | | **2,156,030,075** | **1,518,555,307** |
| (+/-) ஓய்வூதிய நன்மை கடப்பாடு மீதான அக்சூரியல் (இலாபம்/(நட்டம்) | | (23,168,613) | 12,513,552 |
| ஓய்வூதிய நன்மை கடப்பாடு மீதான அக்சூரியல் (இலாபம்/(நட்டம்) மீதான வருமான வரி | 9 (ஆ) (i) | 6,950,584 | (3,754,066) |
| | | **(16,218,029)** | **8,759,486** |
| (+) திட்ட சொத்து மீதான அக்சூரியல் இலாபம் | | 1,268,505 | 6,763,352 |
| திட்ட சொத்து மீதான அக்சூரியல் இலாபம் மீதான வருமான வரி | 9 (அ) | (380,552) | (2,029,006) |
| | | **887,954** | **4,734,346** |
| **ஆண்டுக்கான மொத்த முழுமையான வருமானம், நிகர வரி** | | **2,140,700,000** | **1,532,049,139** |

# நிதியியல் நிலைமை பற்றிய கூற்று

| 2024.12.31இல் உள்ளவாறு<br>(எல்லா தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன) | குறிப்பு | 31.12.2024 | 31.12.2023 |
|---|---|---|---|
| **சொத்துகள்** | | | |
| **நடைமுறை அல்லாத சொத்துகள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள், மற்றும் உபகரணங்கள் | 10 | 3,899,215,130 | 4,002,112,062 |
| கட்புலனாகாச் சொத்துகள் | 11 | 4,496,126 | 5,488,440 |
| ஏனைய நடைமுறை அல்லாத சொத்துகள் | 14 | 6,365,333 | 6,818,836 |
| குத்தகை முன்கொடுப்பனவு | 13 | 315,772,340 | 319,077,961 |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை - கட்டுமானம் | | 156,344,956 | 163,346,971 |
| **நடைமுறைச் சொத்துகள்** | | | |
| இருப்புகள் | 15 | 4,112,406,987 | 3,911,381,606 |
| வியாபார மற்றும் ஏனைய வரவேண்டியவை | 16 | 2,136,050,687 | 1,622,883,799 |
| முற்கொடுப்பனவு | 17 | 47,406,275 | 42,619,403 |
| ஏனைய நிதிச் சொத்துகள் | 18 | 8,193,471,634 | 5,974,554,359 |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | 19 | 782,355 | 468,896,309 |
| | | **14,490,117,937** | **12,020,335,476** |
| **மொத்த சொத்துகள்** | | **18,872,311,823** | **16,517,179,747** |
| **உரிமை முதலும் பொறுப்புகளும்** | | | |
| அதிகாரமளிக்கப்பட்ட மூலதனம் | | 850,000,000 | 850,000,000 |
| சொல்லப்பட்ட மூலதனம் | 20 | 3,106,173,044 | 3,106,173,044 |
| வைத்திருப்பு வருவாய் | | 9,186,271,236 | 7,376,658,041 |
| மீள்மதிப்பிட்டு ஒதுக்கம் | | 557,996,541 | 557,996,541 |
| உதவி-உலக வங்கியின் சுகாதார முறைமை தயார்படுத்துதல் திட்டம் | 21 அ | 412,818,155 | 438,146,336 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி-சக்தி வினைத்திறன் வாய்ந்த மத்திய வளிச்சீராக்கி பொறிமுறை | 21 ஆ | 29,872,980 | - |
| **மொத்த உரிமை முதல்** | | **13,293,131,956** | **11,478,973,962** |
| **நடைமுறை அல்லாத பொறுப்புகள்** | | | |
| நிகர ஓய்வு நன்மை கடப்பாடு | 22 | (6,329,471) | (14,557,672) |
| பிற்போடப்பட்ட வரிப்பொறுப்பு | 23 | 355,370,390 | 389,492,010 |
| | | **349,040,919** | **374,934,338** |
| **நடைமுறைப் பொறுப்புகள்** | | | |
| வியாபாரமும் ஏனைய செலுத்தவேண்டியவையும் | | 4,689,869,254 | 4,052,364,854 |
| செலுத்த வேண்டிய வரி | 24 | 540,269,694 | 610,906,591 |
| | | **5,230,138,948** | **4,663,271,446** |
| **மொத்த உரிமை முதலும் பொறுப்புகளும்** | | **18,872,311,823** | **16,517,179,747** |

இந்த நிதிக்கூற்றுக்களின் முழு பகுதி மற்றும் கணக்கீட்டு கொள்கைகள் பக்கம் 45 இலிருந்து 61 வரை காணப்படுகிறது. இந்த நிதிக்கூற்றுக்களின் நடவடிக்கை மற்றும் காட்சிப்படுத்தல் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். இந் நிதியியல் கூற்றுக்கள் பணிப்பாளர் சபையின் பின்வருவோரால் ஒப்பமிடப்பட்டு அவர்களின் அங்கீகாரத்துடன் கணக்காய்வாளர் நாயகத்தின் திணைக்களத்திற்கு வழங்கப்பட்;டது.

தலைவர்:.....................................

பணிப்பாளர் : .....................................

பிரதிப் பொது முகாமையாளர் - நிதி :.....................................

திகதி: ............15.05.2025............

# உரிமை முதல் கூற்றில் மாற்றங்கள்

2024 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது
(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | கூறப்பட்ட மூலதனம் | இலாபம் மற்றும் நட்டம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | உதவி-உலக வங்கியின் சுகாதார முறைமை தயார்படுத்துதல் | உதவி-சக்தி வினைத்திறனான மத்திய வளிச்சீராக்கல் பொறிமுறை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| **2024.01.01இல் உள்ளவாறு மீதி** | 3,106,173,044 | 7,376,658,041 | 557,996,541 | 438,146,336 | - | 11,478,973,962 |
| சக்தி வினைத்திறனான மத்திய வளிச்சீராக்கல் பொறிமுறை திட்டம் | - | - | - | - | 31,446,753 | 31,446,753 |
| Amortization for the year | - | - | - | (25,328,181) | (1,573,774) | (26,901,955) |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | - | 2,156,030,075 | - | - | - | 2,156,030,075 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | (15,330,076) | - | - | - | (15,330,076) |
| திறைசேரிக்கான தீர்வை | - | (300,000,000) | - | - | - | (300,000,000) |
| முன்னைய ஆண்டுக்கான சீர்திருத்தங்கள் | - | (31,086,805) | - | - | - | (31,086,805) |
| **2024.12.31இல் உள்ளவாறு மீதி** | 3,106,173,044 | 9,186,271,236 | 557,996,541 | 412,818,155 | 29,872,980 | 13,293,131,956 |
| | **கூறப்பட்ட மூலதனம்** | **இலாபம் மற்றும் நட்டம்** | **மீள்மதிப்பீட்டு ஒதுக்கம்** | **உதவி-உலக வங்கியின் சுகாதார முறைமை தயார்படுத்துதல்** | **உதவி-சக்தி வினைத்திறனான மத்திய வளிச்சீராக்கல் பொறிமுறை** | **மொத்தம்** |
| **2023.01.01இல் உள்ளவாறு மீதி** | 690,079,000 | 6,145,370,588 | 557,996,541 | - | | 7,393,446,129 |
| அரச மூலதன முதலீடாக மாற்றப்பட்டது | 2,416,094,044 | - | - | - | | 2,416,094,044 |
| பெனிசிலின் வலைய அபிவிருத்தி திட்டம்(CERHSP) | - | - | - | 438,146,336 | | 438,146,336 |
| ஆண்டுக்கான மொத்த இலாபம் | - | 1,518,555,307 | - | - | | 1,518,555,307 |
| ஏனைய முழுமையான வருமானம் | - | 13,493,833 | - | - | | 13,493,833 |
| திறைசேரிக்கான தீர்வை | - | (300,000,000) | - | - | | (300,000,000) |
| முன்னைய ஆண்டுக்கான சீர்திருத்தங்கள் | - | (761,686) | - | - | | (761,686) |
| **2023.12.31இல் உள்ளவாறு மீதி** | 3,106,173,044 | 7,376,658,041 | 557,996,541 | 438,146,336 | | 11,478,973,962 |

# 2024ம் ஆண்டு டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

| | 2024 | 2023 |
|---|---|---|
| **தொழிற்பாட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| வரிக்கு முந்திய தேறிய இலாபம்(நட்டம்) மற்றும் அசாதாரண இனங்கள் | 3,083,004,066 | 2,173,308,106 |
| முன்னைய ஆண்டுக்கான சீர்திருத்தங்கள் | (31,052,305) | (761,686) |
| **திருத்தங்கள் :** | | |
| அசையாச் சொத்துகளின் தேய்வு | 288,078,275 | 258,320,398 |
| நடைமுறை சேவை செலவினம் | 13,411,030 | 9,944,092 |
| ஊழியர் வட்டிச் செலவு | 23,072,704 | 29,768,523 |
| திட்ட சொத்து மீதான எதிர்பார்க்கப்பட்ட திரும்பல் | (24,965,201) | (28,262,541) |
| ஐயக்கடனுக்கான ஏற்பாடுகள் | - | 800,926,792 |
| கடனாளர்களின் உணரப்படாத பரிமாற்று இழப்பு | 332,038 | 1,182,184 |
| கையுதிர்ப்பு இலாபம் / நட்டம் | 429,134 | 167,416 |
| உதவி வருமானம் | (26,901,955) | - |
| சேதமடைந்தவை மற்றும் பயன்படுத்தாதவற்றுக்கான செலவு | 4,651,566 | 956,432 |
| வட்டி வருமானம் | (587,396,153) | (611,027,968) |
| **செயற்படு மூலதன மாற்றத்துக்கு முன்னர் தொழிற்பாட்டு இலாபம்** | **2,742,663,199** | **2,634,521,748** |
| **செயற்படு மூலதன இனங்களில் மாற்றம்** | | |
| இருப்புகளில் (அதிகரிப்பு) / குறைவு | (201,025,381) | (787,361,785) |
| கடன் பெறுனர் மற்றும் பெறவேண்டியவற்றில் (அதிகரிப்பு) / குறைவு | (513,166,888) | (18,410,208) |
| வைப்புகள் மற்றும் முற்கொடுப்பனவுகளில் (அதிகரிப்பு) / குறைவு | (4,786,872) | 25,746,916 |
| பொறுப்புகளில் அதிகரிப்பு / (குறைவு) | 637,172,362 | 182,571,573 |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட காசு** | **2,660,856,421** | **2,037,068,244** |
| செலுத்தப்பட்ட பணிக்கொடை | (25,190,440) | (15,097,410) |
| செலுத்தப்பட்ட வரி வருமானம் | (1,025,162,476) | (674,401,394) |
| **தொழிற்பாட்டிலிருந்து ஈட்டப்பட்ட தேறிய காசு** | **1,610,503,505** | **1,347,569,440** |
| **முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறுகிய கால முதலீடு (குறிப்பு அ) | (2,356,183,373) | (1,719,245,538) |
| அசையாச் சொத்துகள் கொள்வனவு | (147,819,472) | (209,443,180) |
| விற்கப்பட்ட ஆதனங்களின் விற்பனை வருமானம் | 269,632 | 172,003 |
| பெற்ற வட்டி | 724,662,252 | 596,804,790 |
| ஏனைய நடைமுறையல்லாத சொத்துகளின் அதிகரிப்பு | 453,503 | (5,456,960) |
| **முதலீட்டுச் செயற்பாடுகளில் பயன்படுத்தப்பட்ட தேறிய காசு** | **(1,778,617,459)** | **(1,337,168,885)** |
| **நிதியீட்டச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| திறைசேரி தீர்வை | (300,000,000) | (300,000,000) |
| **நிதியீட்டச் செயற்பாடுகளில் பயன்படுத்திய தேறிய காசு** | **(300,000,000)** | **(300,000,000)** |
| காசு மற்றும் காசுக்குச் சமமானவை தேறிய அதிகரிப்பு / (குறைவு) | (468,113,954) | (289,599,445) |
| ஆண்டின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை | 468,896,309 | 758,495,754 |
| **காலப்பகுதியின் இறுதியில் காசு மற்றும் காசுக்குச் சமமானவை (குறிப்பு ஆ)** | **782,355** | **468,896,309** |

# 2024ம் ஆண்டு டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று

(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன

| | 2024 | 2023 |
|---|---|---|
| **குறிப்பு அ : முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| குறித்த காலப்பகுதியில் காசு உட்பாய்ச்சல் | (327,743,972,955) | (250,086,842,213) |
| குறித்த காலப்பகுதியில் காசு வெளிப்பாய்ச்சல் | 330,100,156,329 | 251,806,087,751 |
| **தேறிய காசுப்பாய்ச்சல்** | **2,356,183,373** | **1,719,245,538** |

**குறிப்பு ஆ**

**காசும் காசுக்குச் சமமானவையும்**

| | | |
|---|---|---|
| இலங்கை வங்கி - இரத்மலானை கிளை | 149,855 | 18,550 |
| இலங்கை வங்கி - பெருநகரக் கிளை | 288,586 | 2,173,504 |
| மக்கள் வங்கி - இரத்மலானை கிளை | 136,565 | 136,565 |
| மக்கள் வங்கி - தொகுதிக் கிளை | 87,349 | 48,435 |
| டொலர் இடைவெளி- இலங்கை வங்கி பெரு நகரக்கிளை | - | 466,399,254 |
| காசு மீதி | 100,000 | 100,000 |
| சில்லறைக் காசேட்டு மீதி | 20,000 | 20,000 |
| | **782,355** | **468,896,309** |

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**1.கூட்டிணைவுத் தகவல்கள்**

**பொது**

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனம் 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க கைத்தொழில் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டுள்ளது. இது, இல.11, சேர் ஜோன் கொத்தலாவல மாவத்தை, இரத்மலானை என்னும் முகவரியில் அமைந்துள்ள அரச கூட்டுத்தாபனமாகும்.

2024 டிசம்பர் 31ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கான நிதியியல் கூற்றுக்களை கூட்டுத்தாபனம் தயார் செய்கின்றது. இந்த நிதியியல் கூற்றுக்கள் 2025ம் ஆண்டு மாசி மாதம் 27ம் திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.

**பிரதான செயற்பாடுகள்**

பிரதான செயற்பாடுகள் பின்வருமாறு.

1. ஒன்றில் தானாகவோ அல்லது அத்தகைய கூட்டு முயற்சி, பகிரங்க தனியார் பங்காண்மை அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கையைச் செய்து கொள்வதன் மூலம், மருந்தை உற்பத்தி செய்தல், பதனிடல், களஞ்சியப்படுத்தல், பொதியிடுதல் அல்லது மீளப்பொதியிடுதல்.
2. துணைநிலைக் கம்பனிகளை உருவாக்குதல்.
3. சாத்தியமான முதலீட்டாளர்களுடன் சர்வதேச உடன்படிக்கையைச் செய்துகொள்ளுதல்.
4. மருந்தை உற்பத்தி செய்வதற்காகவும் பதனிடுவதற்காகவும் தொழில்நுட்ப உதவியை வழங்குதல்.
5. வாகடவியற்சார் மற்றும் மருந்தாக்கற்சார் ஆராய்ச்சி மற்றும் மருந்தின் தரப்படுத்தலைப் பொறுப்பேற்றல்.
6. கூட்டுத்தாபனம் அல்லது கூட்டு முயற்சி அல்லது அத்தகைய வேறு உடன்படிக்கைகளினால் தயாரிக்கப்பட்ட மருந்துசார் உற்பத்திப் பொருட்களைச் சந்தைப்படுத்துதல்.

**2. தயார்படுத்தலின் அடிப்படை**

**2.1. இணங்கியொழுகுதல் பற்றிய கூற்று**

நிதியியல் கூற்றுகள் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தினால் வழங்கப்பட்டவாறு இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு (SLFRS/LKAS) அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**2.2. அளவீட்டு அடிப்படை**

நிதிக்கூற்றுகள் வரலாற்று ரீதியான செலவினங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாவில் தரப்பட்டுள்ளன. கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபையானது நிதியியில் கூற்றுக்களுக்கான தமது பொறுப்பினை ஏற்றுக்கொள்கிறது.

**2.3. நிறுவன தொடர்ச்சிக் கருத்து**

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கைகள் நிறுவன தொடர்ச்சிக் கருத்து அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளன.

**3. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் சுருக்கம்**

**3.1. முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கைகள், கீழே குறிப்பிடப்பட்டதை தவிர்ந்த ஏனையவை கடந்த வருடங்களில் பயன்படுத்தப்பட்டவற்றுடன் இணங்குகின்றன.

**3.1.1. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் ஆகியவை வெளியக சுயாதீன மதிப்பாளரினால் மதிப்பிடப்பட்டு பின்வருமாறு பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

மீள்மதிப்பிடப்பட்டுள்ள சொத்து ஒன்றின் போதுமான அளவு ஒழுங்குடன்; அதனுடைய கொண்டிருக்கும் தொகையில் இருந்து வேறுபடாத வகையில், நியாயமான தன்மையை உறுதிப்படுத்தும் வகையில் மதிப்பிடலானது மேற்கொள்ளப்படுகின்றது.

இடையிடையே ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் முக்கியமான பாகங்களைப் பதிலீடு செய்ய நேரிடின், கூட்டுத்தாபனம் பதிலீடு செய்யப்பட்ட பாகத்தை அங்கீகரிப்பதுடன் புதிய பாகத்தை அதன் சொந்த தொடர்பான பயன்பாட்டுக் காலம் மற்றும் தேய்மானத்துடன் அங்கீகரிக்கின்றது. அவ்வாறே, பாரிய பரிசோதனை ஒன்று மேற்கொள்ளப்பட்டால், அங்கீகரித்தல் தகவுதிறன்கள் ஈடு செய்யப்படின், ஒரு பதிலீடாக அதன் ஆகுசெலவு பொறி மற்றும் உபகரணத்தின் கொண்டுசெல்லும் தொகையுடன் அங்கீகரிக்கப்படுகின்றது. ஏனைய எல்லா திருத்தங்கள் மற்றும் பராமரிப்புச் செலவுகள் வருமானக் கூற்றில் கூறப்பட்டதாக அங்கீகரிக்கப்படுகின்றன.

### 3.1.2. தேய்வு

தேய்வு LKAS 16 இல் உள்ளதன் படி வழங்கப்படுகிறது. நடைமுறை அல்லாத சொத்துக்களின் தேய்வு பாவிக்கப்படும் நாளிலிருந்து கணிப்பிட ஆரம்பிக்கப்படுகிறது. அதேவேளை விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்ட/முடிவு செய்யப்பட்ட குறித்த திகதியிலிருந்து தேய்வு கைவிடப்படுவதோடு SLFRS 05 இற்கு ஏற்ப தேய்வானது நேர்கோட்டு முறை அடிப்படையில் மேற்கொள்ளப்படுகிறது. ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் உத்தேச பயன்படு காலம் பின்வருமாறு:

| | |
|---|---|
| குத்தகைக் காணி | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| இயற்கை நிலக்காட்சியமைப்புச் செலவுகள் | குத்தகைக் காலத்தில் (99 வருடங்கள்) |
| கட்டிடங்கள் | 40 வருடங்கள் |
| வாகனக் கொட்டகை | 12 வருடங்கள் |
| பொறிகள் மற்றும் இயந்திரங்கள் | 20 முதல் 1 வருடங்கள் |
| மோட்டார் வாகனங்கள் | 8 முதல் 3 வருடங்கள் |
| மோட்டார் சைக்கிள் | 7 வருடங்கள் |
| துவிச்சக்கர வண்டி மற்றும் வண்டிகள் | 20 முதல் 7 வருடங்கள் |
| உபகரணங்கள் | 25 முதல் 1 வருடங்கள் |
| கணினி உதிரிப்பாகங்கள் | 5 முதல் 1 வருடங்கள் |
| கணினி மென்பொருள் | 5 முதல் 1 வருடங்கள் |
| தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் | 20 முதல் 3 வருடங்கள் |
| கருவிகள் | 15 முதல் 1 வருடங்கள் |

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**3.1.3. அருவச் சொத்துகள்**

பிரத்தியேமாகக் கொள்வனவு செய்யப்பட்ட அருவச் சொத்துகள் ஆரம்ப அங்கீகார ஆகுசெலவில் மதிப்பிடப்படுகின்றன. ஆரம்ப அங்கீகாரத்தைத் தொடர்ந்து, அருவச் சொத்துகள் திரண்ட கடன் தீர்த்தல் மற்றும் திரண்ட சேத இழப்புகள் ஏதேனும் இருப்பின் அவற்றைக் கழித்து ஆகுசெலவில்

கொண்டுசெல்லப்படுகின்றன. மூலதனமாக்கப்பட்ட அபிவிருத்தி ஆகுசெலவுகள் நீங்கலாக, உள்ளக ரீதியாக உருவாக்கப்பட்ட அருவச் சொத்துகள் மூலதனமாக்கப்படாது, செலவு ஏற்பட்ட ஆண்டின் வருமானக் கூற்றில் செலவினம் பிரதிபலிக்கப்படுகின்றது.

**3.1.4. ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் சேதம்**

ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் கொண்டு செல்லும் பெறுமதி, வருடாந்தம் அல்லது கொண்டு செல்லும் பெறுமதி மீண்டும் பெற முடியாதது என நிகழ்வுகள் அல்லது சூழ்நிலை மாற்றங்கள் குறித்துக் காட்டும்போது மீளாய்வு செய்யப்படுகின்றன. அத்தகைய குறித்துக்காட்டல்கள் இருக்குமாயின், கொண்டு செல்லும் பெறுமதி உத்தேச அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமாயின், சொத்துகள் அறவிடக்கூடிய தொகை குறைத்து எழுதப்படுகின்றன. சேத இழப்புகள் அதே சொத்துக்கான முன்னைய மீள் மதிப்பீட்டு மிகையை வழங்காதவிடத்து வருமானக்கூற்றில் அங்கீகரிக்கப்படுகின்றன.

**3.1.5. நிதி சாரா சொத்துகளின் சேதம்**

ஒரு சொத்து சேதமடையலாம் என்பதற்கான குறிகாட்டிகள் தென்படுகின்றனவா என ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் கூட்டுத்தாபனம் மதிப்பிடுகின்றது. ஏதேனும் குறிகாட்டிகள் தென்படின், அல்லது ஒரு சொத்தின் வருடாந்த சேத மதிப்பீட்டுச் சோதனை தேவைப்படுத்தப்படும்போது, கூட்டுத்தாபனம் சொத்தின் பெறக்கூடிய தொகையை மதிப்பிடுகின்றது. ஒரு சொத்தின் பெறக்கூடிய தொகை ஒரு சொத்தின் காசை உருவாக்கும் அலகுகளில் (CGU) இருந்து விற்பனைக்கான ஆகுசெலவைக் கழித்து வரும் தொகையில் கூடியது என்பதுடன் பயன்பாட்டிலுள்ள அதன் பெறுமதி ஏனைய சொத்துகளிலிருந்து அல்லது சொத்துகளின் தொகுதியிலிருந்து பெருமளவில் தங்கியிராத காசுப்பாய்ச்சலை சொத்து உருவாக்காதவிடத்து, ஒரு தனிப்பட்ட சொத்துக்கு நிர்ணயிக்கப்படுகின்றது. ஒரு சொத்தின் கொண்டு செல்லும் பெறுமதி அல்லது CGU அதன் அறவிடக்கூடிய தொகையை விஞ்சுமிடத்து, அந்த சொத்து சேதமடைந்ததாகக் கருதப்பட்டு அதன் அறவிடக்கூடிய தொகைக்கு குறைத்து எழுதப்படுகின்றது. பயன்பாட்டிலுள்ள பெறுமதியை மதிப்பிடும்போது, பணத்தின் காலப் பெறுமதியின் தற்போதைய சந்தை மதிப்பீடுகளைப் பிரதிபலிக்கும் வரிக்கு முந்திய கழிவு வீதம் மற்றும் சொத்துக்கான குறித்த இடர் ஆகியவற்றைப் பயன்படுத்தி உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலுக்கு கழிவு வழங்கப்படுகின்றது. விற்பனைக்காக ஆகுசெலவைக் கழித்து நியாய விலையை நிர்ணயிக்கையில், அண்மைக்கால சந்தைக் கொடுக்கல் வாங்கல்கள் கிடைக்கக்கூடியதாக இருப்பின் அவை கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் எதனையும் அடையாளம் காண முடியாதவிடத்து, ஒரு பொருத்தமான மதிப்பீட்டு மாதிரி பயன்படுத்தப்படுகின்றது.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

### 3.1.6. வரி விதிப்பு

#### 3.1.6.1. நடைமுறை வரி விதிப்பு

நடைமுறை வரிச்சொத்துகள் மற்றும் பொறுப்புகள் தற்போதைய மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக வரி அறவிடும் ஆணையகத்திற்கு அறவிடுவதற்கு அல்லது அவர்களுக்குச் செலுத்துவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகைகளைக் கொண்டதாகும். தொகைகளைக் கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் வரி வீதம் மற்றும் வரிச் சட்டங்கள் நிதி நிலைமைக் கூற்றுத் திகதியளவில் சட்டவாக்கம் செய்யப்பட்ட அல்லது பெருமளவில் சட்டவாக்கம் செய்யப்பட்டவைகளாகும்.

அதன் பிரகாரம், வரி விதிப்புக்கான ஏற்பாடு 2017ஆம் ஆண்டின் 24ஆம் இலக்க அரசிறைச் சட்டம் மற்றும் அதன் திருத்தங்களில் குறித்துரைக்கப்பட்ட வீதங்களின் பிரகாரம் வரி நோக்கங்களுக்காகத் திருத்தப்பட்டவாறாக அவ்வாண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றது. நடைமுறை ஆண்டின் வரி விதிப்புக்கான ஏற்பாடு சட்டத்தினால் குறித்துரைக்கப்பட்ட வீதத்துக்கு அமைவாக கணக்கீட்டு இலாபத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது.

#### 3.1.6.2. தாமதித்த வரி விதிப்பு

நிதியியல் நிலைமை பற்றிய கூற்றில் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு வகையான தற்காலிக வேறுபாடுகள் தொடர்பாக, தாமதித்த வரிப் பொறுப்பு மற்றும் சொத்துகளை நாம் கவனத்தில் கொண்டோம். எமது நிதிக் கூற்றில், ஓய்வு பெறல் பணிக்கொடை ஏற்பாட்டுக்காக நிலையான சொத்துகள் மற்றும் தாமதித்த வரிச் சொத்து ஆகியவற்றுக்கான புத்தக மற்றும் வரி குறைத்து எழுதப்பட்ட தாமதித்த வரிப்பொறுப்பை நாம் பிரதானமாக அங்கீகரித்தோம். தாமதித்த வரிச் சொத்துகள் மற்றும் பொறுப்புகள் ஆகியவை வருமான வரி வீதத்தில் அளவிடப்படுகின்றன.

### 3.2. சரக்கிருப்புகள்

'முதலில் வந்து முதலில் செல்பவை' என்னும் அடிப்படையில் மதிப்பிடப்படும் உபயோகத்தில் இல்லாத மற்றும் மெதுவாக விற்பனையாகும் பொருட்களுக்கான உரிய தொகையை ஒதுக்கிய பின்னர் ஆகுசெலவினம் மற்றும் தேறிய அங்கீகரிக்கக்கூடிய பெறுமதி ஆகியவற்றில் எது குறைவானதோ அதில் சரக்கிருப்புகள் மதிப்பிடப்படுகின்றன.

#### 3.2.1. சரக்கிருப்புகளின் அளவீடு

**சரக்கிருப்புகளின் ஆகுசெலவு**

**மூலப்பொருட்கள்**

ஏதேனும்இடைநேர்விளைவான செலவினங்களுடனான கொள்முதல் ஆகுசெலவுகள்

**நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை**

மூலப்பொருட்களின் ஆகுசெலவு மற்றும் வேறுபடக்கூடிய உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**முடிவுப் பொருட்கள்**

மூலப்பொருட்களின் ஆகு செலவு மற்றும் வேறுபடக்கூடிய உற்பத்திச் செலவினங்கள் முழுமையாக.

**ஏனைய இருப்புகள்**

ஆகு செலவு நிறையிடப்பட்ட சராசரி அடிப்படையில் கணிக்கப்படுகின்றது.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**3.2.2. வியாபாரம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள்**

வியாபார மற்றும் ஏனைய பெற வேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையிலும் அதனைத் தொடர்ந்து பயனுறுதியான வட்டி வீத முறையைப் பயன்படுத்தி சேதங்களுக்கான ஏற்பாடுகளைக் கழித்து கடன் தீர்த்தல் செலவினத்தில் அங்கீகரிக்கப்படுகின்றன. 31-12-2023 உள்ளவாறான MSD நீண்ட நிலுவை கடன்பட்டோர் சந்தேகக்கடன் பொருட்டு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பாடு ஒன்று வழங்கப்பட்டள்ளது.

**3.2.3. காசும் காசுக்குச் சமமானவையும்**

காசும் காசுக்குச் சமமானவையும் கையிலுள்ள காசு, வங்கி மீதி மற்றும் குறுகிய கால முதலீடுகள் ஆகியவற்றைக் கொண்டுள்ளன.

**3.2.4. தொடர்பான தரப்பு கொடுக்கல் வாங்கல்கள்**

**முக்கிய நிர்வாக பணியாளர்களுடனான பரிமாற்றங்கள் (“KMP”)**

கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளைத் திட்டமிடுவதற்கும், கட்டுப்படுத்துவதற்கும் அதிகாரம் மற்றும் பொறுப்பு உள்ளவர்கள் முக்கிய நிர்வாக பணியாளர்கள் ஆவர். அதன்படி, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர்கள் (நிர்வாக மற்றும் நிர்வாகமற்ற பணிப்பாளர்கள் உட்பட) முக்கிய நிர்வாக பணியாளர்கள் என வகைப்படுத்தப்பட்டுள்ளது.

முக்கிய நிர்வாக பணியாளர்களுக்கான (பணிப்பாளர் சபை) இழப்பீடு பின்வருமாறு.

| | 2024 | 2023 |
|---|---|---|
| குறுகிய கால நன்மைகள் | 2,394,055 | 2,380,423 |
| பரிசு சீட்டு | 215,000 | 180,000 |

**அரசு மற்றும் அரசு தொடர்பான அமைப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்கள்**

கூட்டுத்தாபனம் அதன் சாதாரண தொழிற்பாட்டு நடவடிக்கைகளில், தொடர்பான தரப்புகளுடன் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்கின்றது. தொடர்பான தரப்புகள் என்பது இலங்கை அரசாங்கம் (கூட்டுத்தாபனத்தின் இறுதியான உரிமையாளர் அரசாங்கம் என்ற வகையில்) பல்வேறு அரச திணைக்களங்கள், அரசினால் கட்டுப்படுத்தப்படும் அமைப்புகள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்ததும் கூட்டாக முக்கியத்துவம் வாய்ந்ததும் ஆனால் தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் அல்லாதவையுமான அரச மற்றும் அரச கட்டுப்பாட்டு அமைப்புகளுடன் கூட்டுத்தாபனத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒழுங்குகளின் விபரம் பின்வருமாறு:

| கொடுக்கல் வாங்கலின் தன்மை | 2024 | 2023 |
|---|---|---|
| **கொடுக்கல் வாங்கல்** | **ரூபா (Rs)** | **ரூபா (Rs)** |
| இலங்கை அரசாங்கப் பிணையங்களில் கூட்டுத்தாபனத்தின் முதலீடு | 8,411,745,348 | 6,166,594,367 |
| இவ்வாண்டில் அரசாங்கத்துக்குச் செலுத்திய மிகை | 300,000,000 | 300,000,000 |
| சு.சே.தி, அ.ம.கூ மற்றும் விநியோகஸ்தர்களுக் கான விற்பனைகள் | 28,202,081,820 | 29,331, 718,691 |
| **நிலுவையாக உள்ள மீதி** | | |
| அ.ம.கூ இடமிருந்து பெறவேண்டியவை | 11,599,411 | 8,426,990 |
| சு.சே.தி இடமிருந்து பெறவேண்டியவ்வு | 2,885,941,368 | 2,378,686,753 |

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**3.2.5. மூலதனம்**

2024 டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டில் அதிகாரமளிக்கப்பட்ட மூலதனத்தில் எவ்வித மாற்றமும் இல்லை.

**3.2.6 உதவிகள்**

உதவிகள் ஆரம்பத்தில் நியாயமான பெறுமதியில், பொதுவாக பெறப்பட்ட தொகை அல்லது பெறவுள்ள தொகையாக அளவிடப்படுகின்றன. உதவியின் அளவு, உதவியின் தன்மை அடிப்படையில் வேறுபடும்.

- வருமானத்துடன் தொடர்புடைய உதவிகள் இலாப நட்ட கூற்றில் காட்டப்படுகின்றன
- சொத்துக்களுடன் தொடர்புடைய உதவிகள் பிற்போடப்பட்ட வருமானமாக காட்டப்படுகின்றன.

**3.2.7. நிதியியல் நிலைமைக் கூற்றுத் திகதிக்குப் பிந்திய நிகழ்வுகள்**

நிதியியல் கூற்றுத் திகதிக்குப் பிந்திய எல்லா நிகழ்வுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டு அவசியமானவிடத்து நிதியியல் கூற்றில் பொருத்தமான திருத்தங்களும் வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**3.2.8 ஆய்வுச் செலவு**

புதிய விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப அறிவையும் புரிந்துணர்வையும் பெறும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுச் செயற்பாடுகள் மீதான செலவினம் ஏற்படுகின்றபோது அது இலாபம் அல்லது செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**4. பொறுப்புகளும் ஏற்பாடுகளும்**

**4.1. ஓய்வுப்பயன் கடப்பாடு**

**4.1.1 வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் - ஓய்வூதியப் பணிக்கொடை**

வரையறுக்கப்பட்ட நலன் திட்டம் என்பது வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டத்தைத் தவிர, ஊழியத்திற்கு பின்னரான நலன் திட்டமாகும். ஒரு சுயாதீனமான, தகுதியான மதிப்பீட்டாளரால் தீர்மானிக்கப்படும் இந்தப் பொறுப்பின் மதிப்பீடு, நீண்ட கால எடுகோள்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும். எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறையைப் பயன்படுத்தி வருடாந்தம் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடு கணிப்பிடப்படுகிறது. இலங்கை கணக்கியீட்டு நியமம் (எல்கேஏஎஸ்– 19) – ஊழியர் நலன்களுக்கு இணங்க தேவையான ஏற்பாட்டைக் கணிப்பிடுவதில் யதார்த்தமான மதிப்பீட்டு முறையை ஏற்றுக்கொண்ட எஸ்பிஎம்சி இற்கான வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் மதிப்பீட்டைத் தீர்மானிக்க தகுதிவாய்ந்த மதிப்பீட்டாளரின் சேவை பெறப்படுகிறது. இந்த நியமமானது கம்பனியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட யதார்த்தமான மதிப்பீட்டின் அண்ணளவான யதார்த்த நுட்பங்களையும் வழங்குகிறது. எதிர்வுகூறப்பட்ட அலகு கடன் முறையானது நடைமுறைத் தரவை உண்மையான எடுகோள்களைப் பயன்படுத்தி திட்டமிடுகிறதுடன் பங்கேற்பாளர்களின் ஓய்வூதியத் திகதியில் எதிர்வுகூறப்பட்ட நலன்களைக் கணிப்பிடுகிறது.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

நிதி நிலைமை கூற்றில் இனங்காணப்பட்ட வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாடானது, திட்ட சொத்துக்களின் நியாயமான பெறுமதியால் குறைக்கப்பட்டவாறு வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் தற்போதைய பெறுமதியைக் குறிக்கிறது. உண்மையான ஆதாயங்கள் மற்றும் நட்டங்கள் அவை எழும் நிதியாண்டின் விரிவான வருமான கூற்றில் வருமானம் அல்லது செலவினங்களாக இனங்காணப்படுகின்றன. எஸ்பிஎம்சீ இன் பணிக்கொடை பொறுப்பு, பணிக்கொடை நிதியொன்றால் ஒரு பகுதியாக தனித்தனியாக அடையாளம் காணப்பட்டுள்ளது, இந்த நிதியின் முதலீடு முக்கியமாக அரசாங்க வங்கியின் திறைசேரி உண்டியலில் உள்ளது. இலங்கை கணக்கீட்டு நியமம் (எல்கேஏஎஸ் – 19) – ஊழியர் நலன்களுக்கு இணங்க, சேவையின் முதல் வருடத்திலிருந்து அனைத்து ஊழியர்களுக்கும் வரையறுக்கப்பட்ட நலன் திட்டப் பொறுப்புக்கான ஏற்பாடு மேற்கொள்ளப்படுகிறது.

PUC முறை கணக்கிபிட்டு நியமத்தின் கீழ் வரையறுக்கப்பட்ட நலன் கடப்பாட்டின் (PVDBO) உண்மையான தற்போதைய பெறுமதியானது, மதிப்பீட்டுத் திகதி வரையிலான சேவையின் அடிப்படையில், ஆனால் வேலையில் இருந்து விலத்துவதற்கு (உடல்நலக் குறைவு, ஓய்வுபெறல், இறப்பு, சாதாரண ஓய்வுபெறல் அல்லது வேறு ஏதேனும் காரணம் சாத்தியமான திகதிக்கு அட்டுறுவாக உள்ள எதிர்வுகூறப்பட்ட இறுதிச் சம்பளத்துடன், திட்டத்தின் தற்போதைய ஊழியர்களுக்குக் அட்டுறுவாக உள்ள அனைத்து நலன்களின் தற்போதைய பெறுமதியாகும);. எனினும், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ், ஐந்தாண்டுகள் தொடர்ச்சியான சேவையை நிறைவு செய்யும் போது மாத்திரமே ஊழியர் ஒருவரிற்குப் பொறுப்பு எழுகிறது.

**உண்மையான ஆதாயங்கள் மற்றும் நட்டங்களின் இனங்காணல்**

எஸ்பிஎம்சி ஆனது அது நிகழும் காலப்பகுதியில் ஏனைய விரிவான வருமானத்தில் மொத்த உண்மையான ஆதாயங்கள் மற்றும் நட்டங்களை இனங்காணுகின்றது.

**தற்போதைய சேவை கிரயத்தை இனங்காணுதல்**

சேவையின் இறுதிப் பணிக்கொடை வரையறுக்கப்பட்ட நலன் ஒரு நியதிச்சட்ட நலன் என்பதால், 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடை கொடுப்பனவுச் சட்டத்தில் வேலை முடிவுறுத்தப்படும் போது வாக்குறுதியளிக்கப்பட்ட நலனை அதிகரிக்கச் செய்வதற்கு எதிர்காலத்தில் திருத்தம் செய்யப்பட்டால் மாத்திரமே தற்போதைய சேவை கிரயத்தை இனங்காண்பது ஏற்படும். அத்தகைய நிகழ்வில், வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களுக்கு தற்போது பயன்படுத்தப்படும் கணக்கீட்டு கொள்கையை எஸ்பிஎம்சி ஏற்றுக்கொள்ளும்.

**குறிப்பிடத்தக்க கணக்கீட்டு தீர்ப்புக்கள், மதிப்பீடுகள் மற்றும் எடுகோள்கள் - வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்கள்**

வரையறுக்கப்பட்ட நலன் திட்டங்களின் கிரயம், யதார்த்தமான மதிப்பீடுகளைப் பயன்படுத்தி தீர்மானிக்கப்படுகிறது. யதார்த்தமான மதிப்பீடானது பல்வேறு எடுகோள்களை உருவாக்குதல், கழிவு விகிதங்கள், எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் மற்றும் இறப்பு விகிதங்களை தீர்மானித்தல் ஆகியவற்றை உள்ளடக்கியது. மதிப்பீட்டின் சிக்கலான தன்மை, அடிப்படை எடுகோள்கள் மற்றும் அவற்றின் நீண்ட கால இயல்பு ஆகியவற்றின் காரணமாக, இத்தகைய மதிப்பீடுகள் குறிப்பிடத்தக்க நிச்சயமற்ற தன்மைக்கு உட்பட்டுள்ளன. ஒவ்வொரு அறிக்கையிடல் திகதியிலும் அனைத்து எடுகோள்களும் மதிப்பாய்வு செய்யப்படுகின்றன.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

பொருத்தமான கழிவு விகிதத்தை நிர்ணயிப்பதில், இலங்கை அரசாங்க பத்திரங்களின் வட்டி விகிதங்களை முகாமைத்துவம் கருத்தில் கொள்கிறது. இறப்பு விகிதம் பொதுவில் கிடைக்கும் இறப்பு அட்டவணையை அடிப்படையாகக் கொண்டது. எதிர்கால சம்பள அதிகரிப்புக்கள் மீதான மதிப்பீடு எதிர்பார்க்கப்படும் எதிர்கால பணவீக்க விகிதங்கள் மற்றும் எஸ்பிஎம்சி இன் எதிர்பார்க்கப்படும் எதிர்கால சம்பள அதிகரிப்பு விகிதத்தை அடிப்படையாகக் கொண்டது. திட்ட சொத்துக்களின் முதலீட்டு போர்ட்போலியோ (portfolio) சந்தை மற்றும் கடன் அபாயங்களுக்கு வெளிப்படுகிறது.

ஒரு திட்டத்தின் நலன்கள் மாற்றப்படும்போது அல்லது ஒரு திட்டம் குறைக்கப்படும்போது, கடந்த கால சேவையுடன் தொடர்புடைய நலன்களில் ஏற்படும் மாற்றம் அல்லது குறைப்பதில் ஏற்படும் ஆதாயம் அல்லது நட்டம் உடனடியாக இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகிறது. தீர்ப்பனவு நிகழும்போது வரையறுக்கப்பட்ட திட்டத்தின் தீர்ப்பனவுக்கான ஆதாயம் அல்லது இழப்பை எஸ்பிஎம்சி இனங்காணுகிறது.

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் ஓய்வூதிய நலன்களுக்கான கடப்பாடுகள் திரு.முனிசாமி பூபாலநாதன் - ஆக்சுவரியல் அன்ட் மனேஜ்மென்ட் கென்சல்டன்ட்ஸ் (Portfolio) லிமிட்டட்டின் மதிப்பீட்டாளர் மூலம் மேற்கொள்ளப்பட்ட யதார்த்தமான மதிப்பீடுகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது

### 4.1.2 வரைவிலக்கணப்படுத்தப்பட்ட பங்களிப்புத் திட்டங்கள்

**ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்**

'ஊழியர் சேமலாப நிதியம்' மற்றும் 'ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்' ஆகியவற்றுக்குத் தகுதியான எல்லா ஊழியர்களுக்கும் சம்பந்தப்பட்ட ஒழுங்குவிதியின் பிரகாரம் உரிய பங்களிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய பங்களிப்புகளுக்கான கடப்பாடுகள் வருமானக் கூற்றில் செலவாகக் காட்டப்பட்டுள்ளன.

**ஊழியர் சேமலாப நிதியம்**

கூட்டுத்தாபனத்தின் எல்லா ஊழியர்களும் ஊழியர் சேமலாப நிதியத்தின் அங்கத்தவர்களாக இருப்பதோடு இதற்கு கூட்டுத்தாபனமானது ஊழியரின் ஒருங்கிணைந்த சம்பளத்தில் 15% வீதத்தினை பங்களிக்கின்றது.

**ஊழியர் நம்பிக்கை நிதியம்**

கூட்டுத்தாபனமானது ஒவ்வொரு ஊழியரினதும் நம்பிக்கை நிதியத்திற்காக ஊழியரின் ஒருங்கிணைந்த சம்பளத்திலிருந்து 3% வீதத்தினை பங்களிக்கின்றது.

### 4.1.3 வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள்

வர்த்தகம் மற்றும் ஏனைய செலுத்தவேண்டியவைகள் ஆரம்பத்தில் நியாய விலையில் மதிக்கப்பட்டு அதன் பின்னர் பயனுறுதியான வட்டி வீத முறையிலிருந்து சேதத்துக்கான இழப்பைக் கழித்தல் முறையைப் பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அளவிடப்படுகின்றன. 2024.12.31 இல் முக்கிய தாக்கம் உள்ளவாறு ஏதேனும் அதனைத் தொடர்ந்த அளவிடப்பட்ட செலவினத்துக்கு கூட்டுத்தாபனம் ஏற்பாடுகளை மேற்கொள்ளவில்லை.

### 4.1.4 ஏற்பாடு

**பொது**

கடந்த கால நிகழ்வுகளின் விளைவாக தற்போதைய கடப்பாடுகளை (சட்ட ரீதியான அல்லது நெருக்குதலான) கூட்டுத்தாபனம் கொண்டுள்ள போது ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகின்றன. கடப்பாட்டைத் தீர்ப்பதற்கு பொருளாதரப் பயனைக் கொண்ட வளத்தின் வெளிப்பாய்ச்சல் தேவைப்படுத்தப்படலாம். கடப்பாட்டுத் தொகையிலிருந்து நம்பத்தகுந்த மதிப்பீடொன்று மேற்கொள்ளப்படலாம். ஏற்பாடுகளில் சில அல்லது எல்லாம் மீளளிப்புச் செய்யப்படவேண்டும் என கூட்டுத்தாபனம் எதிர்பார்க்குமிடத்து, உதாரணமாக ஒரு காப்புறுதி ஒப்பந்தத்தின் கீழ், மீளளிப்பு நடைமுறையில் நிச்சயமாக உள்ள போது மட்டுமே அது பிரத்தியேகமான சொத்தாகக் கருதப்படுகின்றது. ஏதேனும் ஏற்பாடு தொடர்பான செலவினம் வருமானக் கூற்றில் இடம்பெறுகின்றது.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

பணத்தின் நேரப் பெறுமதி முக்கியமாயின், பொருத்தமானவிடத்து, பொறுப்புக்கான குறித்த இடர்களைப் பிரதிபலிக்கும் தற்போதைய வரிக்கு முந்திய வீதத்தைப் பயன்படுத்தி ஏற்பாடுகள் கழிவு வழங்கல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. கழிவு வழங்கல் பயன்படுத்தப்படும்போது, காலப்போக்கில் ஏற்படும் ஏற்பாட்டின் அதிகரிப்பு நிதிச்செலவாக அங்கீகரிக்கப்படுகின்றது.

**5. வரிக்கூற்று**

வருமானக் கூற்றைச் சமர்ப்பிக்கும் நோக்கத்துக்காக, செலவுகள் முறைமை செயற்பாடு கூட்டுத்தாபனத்தின் செயலாற்றக் கூறுகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதனால், அம்முறை கையாளப்படுகின்றது.

**5.1.1 புரள்வு**

அரச மருந்தாக்கற் கூட்டுத்தாபனத்தின் புரள்வானது, சுகாதார சேவைகள் திணைக்களம், விநியோகஸ்தர்கள் மற்றும் அரச மருந்து கூட்டுத்தாபனம் ஆகியவற்றுக்கான விற்பனைகளை உள்ளடக்குகின்றது.

**5.1.2 வருமானத்தை அங்கீகரித்தல்**

கொடுப்பனவுகள் எப்போது மேற்கொள்ளப்படுகின்றன என்பதைப் பொருட்படுத்தாது பொருளாதாரப் பயன்கள் கூட்டுத்தாபனத்துக்கு உட்பாய்வதுடன் வருமானத்தை நம்பத்தகுந்தவாறு அளவிட முடியும் என்பது சாத்தியமானதாகும் என்னும் அளவுக்கு வருமானம் அங்கீகரிக்கப்படுகின்றது. ஒப்பந்த ரீதியாக வரைவிலக்கணப்படுத்தப்பட்ட கொடுப்பனவு நியதிகள் மற்றும் வரிகள் அல்லது தீர்வைகளைக் கழித்து, பெற்ற அல்லது பெறக்கூடிய நியாயப் பெறுமதியில் வருமானம் அளவிடப்படுகின்றது. வருமானம் பிரதானமாகவா அல்லது செயலாண்மையாகவா செயற்படுகின்றது என்பதை நிர்ணயிப்பதற்காக கூட்டுத்தாபனம் அதன் வருமான ஒழுங்குகளை குறித்த தகவுதிறன்களுக்கு எதிராக மதிப்பிடுகின்றது. அதன் எல்லா வருமான ஒழுங்குகளிலும் அது பிரதானமாகச் செயற்படுகின்றது என கூட்டுத்தாபனம் முடிவு செய்துள்ளது. வருமானத்தை அங்கீகரிப்பதற்கு முன்னர் பின்வரும் குறித்த அங்கீகார தகவுதிறன் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

**பொருட்களின் விற்பனை**

மருத்துவ விநியோக பிரிவு, அரச மருந்துக் கூட்டுத்தாபனம் மற்றும் விநியோக வழிகளின் ஊடாக மருந்துகள் விற்பனை செய்வதன் மூலம் கூட்டுத்தாபனம் அதன் வருவாயை உருவாக்குகிறது.
நிறுவனம் வாங்குபவருக்கு பொருட்களின் உரிமையில் குறிப்பிடத்தக்க ஆபத்து மற்றும் வெகுமதிகளை மாற்றும் போது பொருட்களின் விற்பனையின் வருவாய் அங்கீகரிக்கப்படுகிறது.

பின்வரும் மூலங்களிலிருந்து வருவாயை கூட்டுத்தாபனம் அங்கீகரிக்கிறது.

(அ) மருந்து வழங்கல் பிரிவுக்கு மருந்துகளை வழங்குதல் (அரச மருத்துவமனைகள்).கூட்டுத்தாபனம் உற்பத்தி, கூட்டுமுயற்சி நிறுவனங்களிடமிருந்து மருந்துகளை வாங்கி மருத்துவ வழங்கல் பிரிவிற்கு விற்பனை செய்தல் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ளது.

தயாரிப்புகள் மருத்துவ வழங்கல் பிரிவுக்கு மாற்றப்படும் கட்டத்தில் வருவாய் அங்கீகரிக்கப்படுகிறது. அ.ம.கூ. ஆனது கூட்டிணைவு முயற்சியின் பொருட்களை மருந்து வழங்கல் பிரிவிற்கு வழங்கும் போது கொள்வனவு செய்யும் விலைக்கு 6% வீதத்தினை சேர்க்கிறது.

கூட்டுத்தாபனமானது பின்வரும் பின்வரும் கூட்டுமுயற்சி நிறுவனங்களை உருவாக்கியுள்ளது.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

| நிறுவனத்தின் பெயர் | கூட்டுமுயற்சி நிறுவனத்தின் இடம் | உரிமையாண்மையின் வீதம் | பிரதான தொழிற்பாடு |
|---|---|---|---|
| செலோஜன் லங்கா (தனியார்) லிமிடெட் | இல. 116, லெயார்ட்ஸ் புரோட்வே, கொழும்பு-14 | 10% | மருந்துகளை தயாரித்தல், அ.ம.கூ. ஊடாக மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகித்தல் |
| டியத்த பார்மசூட்டிகல் அன்ட் கெல்த்ஹெயார் (தனியார்) லிமிடெட் | இல. 53/யு/1, பட்டகம வடக்கு, ஜா-எல. | 10% | மருந்துகளை தயாரித்தல், அ.ம.கூ. ஊடாக மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகித்தல் |
| குளோசாந்ரே (தனியார்) லிமிடெட் | இல. 372, சேர் குடாரத்வத்தே மாவத்தை, தொடங்வல, கண்டி. | 10% | மருந்துகளை தயாரித்தல், அ.ம.கூ. ஊடாக மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகித்தல் |
| மெடிகொம் (தனியார்) லிமிடெட் | இல. 20, விஜித வீதி, நதிமால, தெகிவளை. | 10% | மருந்துகளை தயாரித்தல், அ.ம.கூ. ஊடாக மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகித்தல் |
| யாடன் லபோறரோறிஸ் (தனியார்) லிமிடெட். | இல.67, நொறிஸ் கனல் வீதி, கொழும்பு | 10% | மருந்துகளை தயாரித்தல், அ.ம.கூ. ஊடாக மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகித்தல் |
| சான்ட்ஸ் அக்ரிவ் (தனியார்) லிமிடெட் | இல. 36, அப்துல் ஜப்பார் மாவத்தை, கொழும்பு-12 | 10% | மருந்துகளை தயாரித்தல், அ.ம.கூ. ஊடாக மருந்து வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை விநியோகித்தல் |

கூட்டுமுயற்சியில் கூட்டுத்தாபனம் மற்றும் கூட்டுமுயற்சி நிறுவனம் என்பன மேற்சொன்ன பங்குடமை தொடர்பில் பங்குதாரர் ஒப்பந்தம் ஒன்றினை செயற்படுத்த முடியும். இந்த கூட்டு முயற்சி நிறுவனங்கள், குறித்த ஒப்பந்தம் நிலுவையில் உள்ள வரையில் பங்குகளின் விகிதம் அ.ம.கூ. இற்கு வழங்கப்படுவதை உறுதி செய்யும். பங்குகளை வைத்திருப்பது தொடர்பான விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

| பங்கு வைத்திருக்கும் நிறுவனம் | பங்குகளின் எண்ணிக்கை | வழங்கிய திகதி | பெறுமதி (ரூபா.) |
|---|---|---|---|
| செலோஜன் லங்கா (தனியார்) லிமிடெட் | 3,000,000 | 21.10.2020 | 3,000,000 |
| டியத்த பார்மசூட்டிகல் அன்ட் கெல்த்ஹெயார் (தனியார்) லிமிடெட் | 1,500,000 | 21.10.2020 | 1,500,000 |
| பிரீமியம் இன்டநஷனல் இன்ஜெக்ரபிள் (தனியார்) லிமிடெட் | 16,162 | 22.12.2020 | 16,162 |
| சான்ட் அக்ரிவ் (தனியார்) லிமிடெட் | 33 | 15.11.2019 | 33 |
| யாடன் லபோறரோறிஸ் (தனியார்) லிமிடெட் | 4,111,111 | 07.06.2021 | 4,111,111 |
| சிநேர்ஜி பார்மசூட்டிகல்ஸ் (தனியார்) லிமிடெட் | 10 | 01.07.2018 | 10 |
| குளோசாந்ரே (தனியார்) லிமிடெட் | 10 | 06.06.2022 | 10 |

ஆ) விநியோகத்தர்கள் ஊடாக மருந்துகளை விநியோகித்தல்.
கூட்டுத்தாபனமானது மருந்துகளை விநியோகத்தர்கள் ஊடாக சந்தைப்படுத்துவதில் 2003ம் ஆண்டிலிருந்து ஈடுபடுகிறது.

**வருவாயைப் பிரித்தல்**

வருவாயின் தன்மைக்கேற்ப வருவாய் பிரிக்கப்படுகிறது.

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| மருந்து வழங்கல் பிரிவு | அ.ம.கூ. பொருட்கள் | 6,365,874,163 | 6,529,310,266 |
| | கூட்டுமுயற்சி பொருட்கள் | 19,922,270,452 | 20,166,340,889 |
| அரச மருந்துக் கூட்டுத்தாபனம் | அ.ம.கூ. பொருட்கள் | 18,566,907 | 66,827,524 |
| | கூட்டுமுயற்சி பொருட்கள் | 9,299,089 | 8,647,340 |
| விநியோகம் | அ.ம.கூ. பொருட்கள் | 1,668,560,933 | 2,365,477,315 |
| | கூட்டுமுயற்சி பொருட்கள் | 217,510,274 | 195,115,357 |

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**விற்பனை கழிவுகள்**
கழிவுகள் கீழ்வரும் விதத்தில் வழங்கப்பட்டன.

**விநியோகஸ்தர்கள்**

| | |
|---|---|
| கடன் விற்பனை | 9% |
| காசு விற்பனை | 10% |
| **ஒசுசலவிற்கான விற்பனை** | |
| ரூபா. 50,000- ரூபா. 100,000 இடையிலான கடன் விற்பனை | 6% |
| ரூபா. 50,000- ரூபா. 100,000 இடையிலான காசு விற்பனை | 7% |
| மருத்துவர்களுக்கான காசு விற்பனை | 5% |
| **அரச மருந்துக்கூட்டுத்தாபனத்திற்கான நேரடி விற்பனை** | |
| கடன் விற்பனை | 10% |

**5.1.3 செலவுகள்**

வணிகத்தை நடத்துவதில் ஏற்படும் எல்லா செலவுகளும் ஆண்டுக்கான இலாபத்தை வந்தடைந்ததும் வருமானத்தில் சாட்டப்படுகின்றது.

பழுதுபார்ப்பு மற்றும் மீள்புதுப்பிப்பு என்பன அந்த செலவு ஏற்பட்ட ஆண்டின் இலாப நட்டத்தில் காட்டப்படுகின்றன.

**5.1.4 செலவினங்களுக்கு நிதியிடல்**

நிதிச் செலவுகள், வங்கி மேலதிகப்பற்று வட்டி, நாணயப்பத்திர ஆரம்பச் செலவுகள் மற்றும் கடன் வசதி உடன்படிக்கைக் கட்டணங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும்.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**5.1.5 மேந்தலைகளுக்கிடையிலான ஒதுக்கீடு**

நிதிக்கூற்றுகளில், மேந்தலை ஒதுக்கீட்டு முறைமை பின்வருமாறு:

| செலவுகள் | ஒதுக்கீட்டு முறைமை |
|---|---|
| (அ) வீதங்கள் மற்றும் வரிகள், மின்சாரம், நீர்க்கட்டணங்கள், பாதுகாப்பு கட்டணங்கள், காப்புறுதி, கருவிகளின் பராமரிப்பு – பொது, பராமரிப்பு – கட்டிடம், தேய்வு. | (அ) உண்மையான செலவினம் உற்பத்திக்கும்இ நிர்வாகத்திற்கும் நேரடியான தொடர்பை கொண்டிருப்பின் அவ் அடிப்படையில் பங்கிடப்படும் ஏனைய பொதுவான உண்மையான செலவினம் உற்பத்திக்கும் நிர்வாகத்துக்கும் 70% மற்றும் 30% என்னும் அடிப்படையில் பங்கிடப்படுகின்றது. |
| (ஆ) சுகாதாரக் காப்புறுதித் திட்டத்தின் காப்புறுதி, பணியாளர் சேமநலன், சீருடை மற்றும் சப்பாத்துகள், போக்குவரத்துக் கட்டணங்கள். | (ஆ) செலவினம் ஒவ்வொரு பிரிவிலும் உள்ள ஊழியர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பங்கிடப்படுகின்றது. |
| (இ) பணிப்பாளர்களுக்கான கட்டணங்கள், ஏனைய ஊக்குவிப்புகள், மோட்டார் வாகன திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு, வாகனங்களுக்கான எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள், தபால் செலவுகள் மற்றும் தொலைநகல், தொலைபேசிக் கட்டணங்கள், பாதுகாப்புக் கட்டணங்கள், வாகனங்கள் மற்றும் மருந்துகளுக்கான உரிமக் கட்டணங்கள், அச்சிடல் மற்றும் காகிதாதிகள், அலுலகச் செலவுகள், கணக்காய்வுக் கட்டணம், வாடகைக் கட்டணங்கள், விளம்பரங்கள், வர்த்தகம், மற்றும் பருவ இதழ்களுக்கான சந்தா, சட்ட மற்றும் விசாரணைச் செலவுகள், தொழில்சார் கட்டணங்கள், பொழுதுபோக்கு, வருடாந்த சந்தா, வருடாந்த மகாநாடுகள் மற்றும் கூட்டங்கள், முத்திரைக் கட்டணம், காகிதாதிகள், இருப்பெடுப்பு சீராக்கல். | (இ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது. |
| (ஈ) பணியாளர் பயன்களும் ஏனைய செலவினங்களும். | (ஈ) உண்மையான செலவு முறைமை பயன்படுத்தப்படுகின்றது. |

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**6. நிதியியல் சாதனங்கள்**

**6.1. நிதியியல் சொத்துகள்**

**ஆரம்ப அங்கீகாரமும் அளவீடும்**

LKAS 39 இன் நோக்கெல்லையினுள் வரும் நிதியியல் சொத்துகள் இலாபம் அல்லது நட்டம், கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள், முதிர்ச்சி வரை வைத்திருக்கும் முதலீடுகள் மற்றும் விற்பனைக்காக வைத்துள்ள நிதியியல் சொத்துகள், ஆகியவற்றின் ஊடாக பொருத்தமானவாறும் ஆரம்ப அங்கீகாரத்தில் அதன் நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தல் நிர்ணயிக்கின்றவாறும் நியாயப் பெறுமதியில் நிதிச் சொத்துகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

எல்லா நிதிச் சொத்துகளும் ஆரம்பத்தில் நியாயப் பெறுமதியிலும் நியாயப் பெறுமதியில் இல்லாத சொத்துகளைப் பொறுத்தவரை, நேரடியாக கொடுக்கல் வாங்கல் செலவுக்கு ஏற்றிக் கூறக்கூடிய இலாபம் அல்லது நட்டம் ஊடாகவும் அங்கீகரிக்கப்படுகின்றன. கூட்டுத்தாபனத்தின் நிதிச் சொத்துகள் காசு மற்றும் குறுகிய கால திறைசேரி உண்டியல் முதலீடு, வர்த்தகம் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகள், பணியாளர் கடன்கள் மற்றும் ஏனைய பெறவேண்டியவைகளை உள்ளடக்கும்.

**அடுத்துவரும் அளவீடு**

நிதிச்சொத்துகளின் அடுத்துவரும் அளவீடு பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலைப் பொறுத்துள்ளது.

**6.1.1 இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் நிதிச் சொத்துகள்**

வியாபாரத்துக்காக வைத்திருக்கும் நிதிச்சொத்துகள், இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் ஆரம்ப அங்கீகாரத்தின் மீதமைவாக ஒதுக்கப்பட்ட நிதிச் சொத்துகள் ஆகியவற்றை இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் நிதிச்சொத்துகள் உள்ளடக்கும். நிதிச்சொத்துகள் அண்மையில் விற்பதற்காக அல்லது மீள்கொள்வனவுக்காக கொள்வனவு செய்யப்படின், வியாபாரத்துக்காக வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படும்.

**6.1.2. கடன்களும் பெறவேண்டியவைகளும்**

கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகள் செயலூக்க சந்தை ஒன்றில் விலை கூறப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடனான வழிவராத நிதிச்சொத்துகளாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர், அத்தகைய நிதிச்சொத்துகள் பயனுறுதியான வட்டி வீத முறைமையைப் (EIR) பயன்படுத்தி கடன் தீர்த்த செலவில் அதனைத் தொடர்ந்து அளவிடப்பட்டு அதில் இருந்து சேதத்தைக் கழித்து வருபவையாகும். கடன் தீர்த்த செலவினம் கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்துடன் EIR இன் ஒருங்கிணைந்த பகுதியாகிய கட்டணம் அல்லது செலவினங்களைக் கவனத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. EIR கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச்செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது.

**6.1.3. முதிர்ச்சி வரை வைத்திருக்கும் முதலீடுகள்**

நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகள் மற்றும் நிலையான முதிர்ச்சிகளுடனான வழிவராத நிதிச்சொத்துகள் கூட்டுத்தாபனம் சாதகமான நோக்கத்தையும் முதிர்ச்சிவரை அதனை வைத்திருக்கும் ஆற்றலையும் கொண்டிருக்கும் போது முதிர்ச்சி வரை வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்படுகின்றன. ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி சேதத்தைக் கழித்து கடன் தீர்த்த செலவினத்தில் அளவிடப்படுகின்றன.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

கடன் தீர்த்த செலவினம் கொள்வனவு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்துடன் EIR இன் ஒருங்கிணைந்த பகுதியாகிய கட்டணம் அல்லது செலவினங்களைக் கவனத்தில் கொண்டு கணிக்கப்படுகின்றது. EIR கடன் தீர்த்தல் வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது. சேதத்திலிருந்து எழும் நட்டங்கள் வருமானக் கூற்றில் நிதிச்செலவில் அங்கீகரிக்கப்படுகின்றது. 2024 டிசம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டில் கூட்டுத்தாபனம் முதிர்ச்சிக்காக வைத்திருக்கும் முதலீடுகள் எதனையும் கொண்டிருக்கவில்லை.

**6.1.4. விற்பனைக்காக கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள்**

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய நிதி முதலீடுகள் என்பது உரிமைப்பங்கு மற்றும் கடன் பிணையங்களை உள்ளடக்கியதாகும். விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியவையாக வகைப்படுத்தப்பட்ட உரிமைப்பங்கு முதலீடுகள் வியாபாரத்துக்காக வைத்திருப்பவையாக வகைப்படுத்தப்பட்டவையோ அல்லது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நியாய விலையில் ஒதுக்கப்பட்டவையோ அல்ல. இந்த வகுதியைச் சேர்ந்த கடன் பிணையங்கள் நிச்சயமற்ற ஒரு காலப்பகுதிக்கு வைத்திருப்பதற்குக் கருதப்பட்டவையும் திரவத்தன்மைத் தேவைகளுக்கு பதில் நடவடிக்கையாக அல்லது சந்தை நிலைமைகளில் ஏற்படும் மாற்றங்களுக்கான பதில் நடவடிக்கையாக விற்கக்கூடியவையாகும்.

ஆரம்ப அளவீட்டின் பின்னர், முதலீடு அங்கீகரிக்கப்படாத வரை விற்பனைக்காகக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்தில் ஏனைய பூரண வருமானமாக அங்கீகரிக்கப்படாத வருமானங்கள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நட்டங்கள் ஆகியவற்றுடன் தொடர்ந்து நியாயப் பெறுமதியில் மதிப்பிடப்படும் வேளையில், திரண்ட இலாபம் அல்லது நட்டம் ஏனைய செயற்பாட்டு வருமானத்தில் அங்கீகரிக்கப்படுவதுடன் அவ்வேளையில், திரண்ட நட்டம் நிதிச் செலவில் வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்பட்டு விற்பனைக்காக் கிடைக்கக்கூடிய ஒதுக்கத்திலிருந்து அகற்றப்படுகின்றது. விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் கடன் பிணையங்கள் மீதான வட்டி வருமானம் பயனுறுதியான வட்டி முறைமையைப் பயன்படுத்தி கணிக்கப்படுவதுடன் இலாபம் அல்லது நட்டத்தில் அங்கீகரிக்கப்படுகின்றது.

விற்பனைக்காகக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் நிதிச் சொத்துகளை அண்மித்த காலத்தில் விற்பனை செய்வதற்கான ஆற்றல் மற்றும் நோக்கம் தற்போதும் பொருத்தமானதா என நிர்ணயிப்பதற்கு கூட்டுத்தாபனம் அதனை மதிப்பிடுகின்றது. செயலூக்கமற்ற சந்தை காரணமாக கூட்டுத்தாபனம் இந்த நிதிச் சொத்துகளை விற்பனை செய்ய முடியாதுள்ளபோதும் அவ்வாறு செய்வதற்கான முகாமைத்துவத்தின் தீர்மானம் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலத்தில் கணிசமான அளவு மாறுகின்ற போதும் கூட்டுத்தாபனம் அரிதான சூழ்நிலைகளில் இந்த நிதிச் சொத்துகளை மீள்வகைப்படுத்துதற்கு தீர்மானிக்கலாம். நிதிச் சொத்துகள் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளின் வரைவிலக்கணங்களை ஈடுசெய்கின்றபோதும் எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரை அல்லது முதிர்ச்சி வரை இந்தச் சொத்துகளை வைத்திருப்பதற்கு கூட்டுத்தாபனம் நோக்கத்தையும் ஆற்றலையும் கொண்டுள்ளபோதும் கடன்கள் மற்றும் பெறவேண்டியவைகளை மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது. அதன் பிரகாரம் நிதிச் சொத்துகளை வைத்திருப்பதற்கான ஆற்றலையும் நோக்கத்தையும் நிறுவனம் கொண்டுள்ள போது மட்டும் முதிர்ச்சி வரை வைத்திருக்கும் வகுதியை மீள்வகைப்படுத்தல் அனுமதிக்கப்படுகின்றது.

நிதிச் சொத்துகள் விற்பனைக்குக் கிடைக்கக்கூடியதாக இருக்கும் வகுதிக்கு வெளியில் மீள்வகைப்படுத்துவதற்கு உரிமைப்பங்கில் அங்கீகரிக்கப்பட்ட அந்தச் சொத்து மீதான ஏதேனும் முன்னைய இலாபம் அல்லது நட்டம் EIR ஐப் பயன்படுத்தி முதலீட்டின் எஞ்சியுள்ள காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டத்துக்கு தீர்க்கப்படுகின்றது. புதிய கடன் தீர்த்த செலவினத்துக்கும் எதிர்பார்க்கப்பட்ட காசுப்பாய்ச்சலுக்கும் இடையிலான ஏதேனும் வேறுபாடும் EIR ஐப் பயன்படுத்தி சொத்தின் எஞ்சிய காலப்பகுதியில் தீர்க்கப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து அந்த சொத்துகள் சேதமானவை என நிர்ணயிக்கப்படின்,

உரிமைப்பங்கில் பதிவு செய்யப்பட்ட தொகை வருமானக் கூற்றில் மீள்வகைப்படுத்தப்படுகின்றது. 2024 டிசம்பர் 31ஆம் திகதி முடிவுற்ற ஆண்டில் விற்பனைக்காகக் கிடைக்கும் ஏதேனும் நிதி முதலீடுகளை கூட்டுத்தாபனம் கொண்டிருக்கவில்லை.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

### 6.2. அங்கீகரிக்காது விடல்

பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒரு நிதிச்சொத்து (அல்லது நிதிச்சொத்தொன்றின் ஒரு பாகம் அல்லது ஒத்த நிதிச்சொத்தின் குழுவொன்றின் ஒரு பாகம்) அங்கீகரிக்கப்படுவதில்லை:

i) சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்கான உரிமை காலாவதியாதல்.

ii) கூட்டுத்தாபனம் சொத்திலிருந்து காசுப்பாய்ச்சலைப் பெறுவதற்காக அதன் உரிமைகளை மாற்றிக்கொடுத்தல் அல்லது 'கடந்து செல்லல்' ஏற்பாட்டின் கீழ் ஒரு மூன்றாம் தரப்புக்கு சாதன தாமதம் இன்றி காசுப்பாய்ச்சலை முழுமையாகப் பெறுவதற்கு பெற்ற காசைச் செலுத்துவதற்கான கடப்பாட்டை ஆரம்பித்தல். அத்துடன்,

அ) கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் சொத்தின் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றிக்கொடுத்தல், அல்லது.

ஆ) கூட்டுத்தாபனம் கணிசமான அளவில் சொத்தின் எல்லா இடர்களையும் வெகுமதிகளையும் மாற்றிக்கொடுக்காமலும் வைத்திருக்காமலும் சொத்தின் கட்டுப்பாட்டை மாற்றிக் கொடுத்தல்.

### 6.3. நிதிச் சொத்துகளின் சேதம்

கூட்டுத்தாபனம் ஒவ்வொரு அறிக்கைத் திகதியிலும் ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்துகளின் குழு உண்மையாகவே சேதமடைந்துள்ளதா என்பதை மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப அங்கீகாரத்தின் பின்னர் நிகழ்ந்த ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட சம்பவங்களின் விளைவாக சேதத்துக்கான உண்மையான சான்று இருப்பதுடன் அந்த இழப்புச் சம்பவம் நம்பத்தகுந்தவாறு மதிப்பிடக்கூடிய நிதிச் சொத்தின் அல்லது நிதிச் சொத்துகளின் குழுவின் உத்தேச எதிர்கால காசுப்பாய்ச்சலின் மீது தாக்கத்தைக் கொண்டிருந்தால் மட்டுமே ஒரு நிதிச் சொத்து அல்லது நிதிச் சொத்தின் குழு சேதமடைந்ததாகக் கருதப்படும்.

கடனாளிகள் அல்லது கடனாளிகளின் ஒரு குழு கணிசமான நிதிப் பிரச்சினைகளை அனுபவித்தல், வட்டி அல்லது கடன் கொடுப்பனவில் தவணை தவறுதல் அல்லது நெறி பிறழ்தல், அவர்கள் வங்குரோத்து நிலைக்கு அல்லது ஏனைய நிதியியல் மீள் ஒழுங்கமைப்புக்கு உட்படுவார்கள் என்னும் சாத்தியம் மற்றும் தவணை தவறுதலுடன் தொடர்பான நிலுவைகளில் மாற்றம் அல்லது பொருளாதார நிலைமைகள் போன்ற உத்தேச எதிர்கால காசுப் பாய்ச்சலில் அளவிடக்கூடிய குறைவு ஆகியவற்றை அவதானிக்கக்கூடிய தரவுகள் குறித்துக் காட்டுதல் போன்ற ஆகிய குறிகாட்டிகளை சேதத்துக்கான சான்றுகள் உள்ளடக்கலாம்.

### 6.4. கடன் தீர்த்த செலவில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகள்

கடன் தீர்த்த செலவில் கொண்டு செல்லப்படும் நிதிச் சொத்துகளைப் பொறுத்தவரை, தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்த நிதிச் சொத்துகள் அல்லது தனிப்பட்ட முறையில் முக்கியத்துவம் வாய்ந்தவை அல்லாத நிதிச் சொத்துகளுக்கான உண்மையான சான்றுகள் உள்ளனவா என கூட்டுத்தாபனம் மதிப்பிடும்.

முக்கியத்துவம் வாய்ந்தவையாயினும் இல்லாவிடினும், தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கான சேதத்துக்கு உண்மையான சான்று எதுவும் இல்லை என கூட்டுத்தாபனம் நிர்ணயித்தால்;, அது ஒத்த கடன் இடர் தன்மைகளுடனான நிதிச் சொத்தின் குழு ஒன்றை உள்ளடக்குவதுடன் அவற்றை சேதத்துக்காக கூட்டாக மதிப்பிடும். சேதத்துக்காக தனிப்பட்ட முறையில் மதிப்பிடப்பட்ட சொத்துகளில் சேத இழப்பு இருப்பின் அல்லது தொடர்ந்து காணப்படுவதாக அங்கீகரிக்கப்படின், அவை சேதத்துக்கான கூட்டான மதிப்பீட்டில் உள்ளடக்கப்படமாட்டாது.

# கூட்டிணைவுத் தகவல்களும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளும்

**7. நிதி அபாய முகாமைத்துவ நோக்கங்கள் மற்றும் கொள்கைகள்**

**நிதி அபாயம்**

கூட்டுத்தாபனத்தின் அபாய முகாமைத்துவ கட்டமைப்பை நிறுவுதல் மற்றும் மேற்பார்வை செய்வதற்கான ஒட்டுமொத்தப் பொறுப்பை பணிப்பாளர் சபை கொண்டுள்ளது.கூட்டுத்தாபனத்தின் அபாய முகாமைத்துவ முறைமைஇ கூட்டுத்தாபனம் எதிர்கொள்ளும் இடர்களை கண்டறிந்து பகுப்பாய்வு செய்து பொருத்தமான அபாய வரம்பு மற்றும் கட்டுப்பாடுகளை அமைப்பதற்கும்இ அபாயங்களை கண்காணிப்பதற்கும்இ வரம்பிற்கு இணங்குவதற்கும் நிறுவப்பட்டுள்ளது.

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

(எல்லாத் தொகைகளும் இலங்கை ரூபாவில் உள்ளன)

**குறிப்பு- 01**

| | | | 2024 | | 2023 |
|---|---|---|---|---|---|
| **வருமானம்** | | | | | |
| விற்பனை - சுகாதார சேவைகள் திணைக்களம் | அ.ம.கூட்டுத்தாபனம் | 6,365,874,163 | | 6,529,310,266 | |
| | கூட்டுமுயற்சி | 19,922,270,452 | 26,288,144,615 | 20,166,340,889 | 26,695,651,155 |
| விற்பனை - விநியோகஸ்தர்கள் | அ.ம.கூட்டுத்தாபனம் 1 - ஆ | 1,687,127,841 | | 2,432,304,839 | |
| | கூட்டுமுயற்சி 1 - இ | 226,809,364 | 1,913,937,205 | 203,762,697 | 2,636,067,536 |
| | | | **28,202,081,820** | | **29,331,718,691** |

**குறிப்பு- 01 அ**

| **விற்பனை - விநியோகம் SPMC** | 2024 | 2023 |
|---|---|---|
| மொத்த விற்பனைகள் | 1,862,390,335 | 2,687,210,197 |
| (-) கழிவு - 6% | (51,988) | - |
| (-) கழிவு - 7% | (3,033) | - |
| (-) கழிவு - 9% | (94,176,374) | (122,912,584) |
| (-) கழிவு- 10% | (81,031,099) | (131,992,775) |
| **நிகர விற்பனை** | **1,687,127,841** | **2,432,304,839** |

**குறிப்பு - 1ஆ**

| **விற்பனை-விநியோகம் - கூட்டுத்தயாரிப்பு** | 2024 | 2023 |
|---|---|---|
| மொத்த விற்பனைகள் | 249,932,883 | 224,545,824 |
| (-) கழிவு - 9% | (12,204,174) | (10,568,519) |
| (-) கழிவு- 10% | (10,919,345) | (10,214,609) |
| **நிகர விற்பனை** | **226,809,364** | **203,762,697** |

**குறிப்பு - 2**

| **விற்பனைச் செலவுகள்** | | | 2024 | | 2023 |
|---|---|---|---|---|---|
| விற்பனைச் செலவு - சு.சே.தி | அ.ம.கூட்டுத்தாபனம் | 4,394,327,713 | | 4,708,703,823 | |
| | கூட்டுமுயற்சி | 18,822,743,554 | 23,217,071,267 | 19,043,340,361 | 23,752,044,184 |
| விற்பனைச் செலவு - அ.ம.கூ. | அ.ம.கூட்டுத்தாபனம் | 1,147,410,416 | | 1,907,567,989 | |
| | கூட்டுமுயற்சி | 212,105,750 | 1,359,516,166 | 189,765,906 | 2,097,333,895 |
| உற்பத்திச் செலவுகள் | | | 643,160,857 | | 532,591,149 |
| | | | **25,219,748,290** | | **26,381,969,228** |

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

### குறிப்பு 2 அ

| உற்பத்திச் செலவு | உள்ளீர்க்கப்படாத கிரயம் | விற்பனைச் செலவில் உள்ளீர்க்கப்பட்ட செலவினம் | 2024 மொத்த தொகை | 2023 மீள்குறிப்பிடப்படுபவை |
|---|---|---|---|---|
| **நேரடி ஊழியம் (உற்பத்தி)** | | | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | - | 60,503,964 | 60,503,964 | 61,502,678 |
| அமய சம்பளங்கள் | 1,805,555 | 367,292 | 2,172,847 | 2,071,114 |
| வாழ்க்கைச் செலவு | - | 29,349,791 | 29,349,791 | 13,424,798 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | - | 10,818,071 | 10,818,071 | 10,819,138 |
| ஊ.சே.நி & ஊ.ந.நி - 18% | 4,793,814 | 13,429,458 | 18,223,272 | 14,378,933 |
| மேலதிக நேர வேலை | 1,374,984 | 21,164,829 | 22,539,812 | 27,571,565 |
| வருகை ஊக்குவிப்பு | 10,237,209 | - | 10,237,209 | 9,924,274 |
| செயற்பாட்டு ஊக்குவிப்பு | 49,974,971 | 3,215,035 | 53,190,006 | 57,657,883 |
| வருடாந்த ஊக்க ஊதியம் | 10,197,160 | - | 10,197,160 | 3,499,285 |
| நடைமுறை சேவை கிரயம் | 5,523,298 | - | 5,523,298 | 4,089,983 |
| ஊழியர் வட்டி செலவு | (749,713) | - | (749,713) | 554,837 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 4,422,700 | - | 4,422,700 | 4,888,500 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 6,676,642 | - | 6,676,642 | 7,308,208 |
| வீடமைப்புக் கடன் வட்டி மீளளிப்பு | 4,060,473 | - | 4,060,473 | 4,487,809 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 570,629 | - | 570,629 | 612,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 5,291,640 | - | 5,291,640 | 4,332,780 |
| தொழில்முறை கொடுப்பனவு | 132,000 | - | 132,000 | 191,898 |
| பணி ஓய்வு நன்மை | 276,000 | - | 276,000 | - |
| மாதாந்த கொடுப்பனவு | 4,096,895 | 4,837,420 | 8,934,315 | 9,320,195 |
| பணியாளர் செலவு | 7,431,634 | - | 7,431,634 | 4,181,678 |
| | **116,115,891** | **143,685,859** | **259,801,749** | **240,817,556** |
| **நேரடியல்லாத உற்பத்திச் செலவு (தரக்கட்டுப்பாடு, உ.அ.ஆ , திட்டமிடல், பராமரிப்பு)** | | | | |
| சம்பளங்களும் வேதனங்களும் | 40,381,371 | 2,236,918 | 42,618,289 | 41,445,201 |
| அமய சம்பளங்கள் | 4,114,255 | - | 4,114,255 | 561,036 |
| வாழ்க்கைச் செலவு | 18,299,596 | - | 18,299,596 | 8,117,678 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | 7,363,991 | - | 7,363,991 | 7,183,955 |
| ஊ.சே.நி & ஊ.ந.நி - 18% | 12,537,883 | - | 12,537,883 | 9,647,989 |

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

### குறிப்பு 2 அ

| | உள்ளீர்க்கப்படாத கிரயம் | விற்பனைச் செலவில் உள்ளீர்க்கப்பட்ட செலவினம் | 2024 | 2023 மீள்குறிப்பிடப் படுபவை |
|---|---|---|---|---|
| **நேரடியல்லாத உற்பத்திச் செலவு (தரக்கட்டுப்பாடு, உ.அ.ஆ , திட்டமிடல், பராமரிப்பு)** | | | | |
| மேலதிக நேர வேலை | 21,050,118.58 | - | 21,050,118.58 | 20,711,556.00 |
| வருகை ஊக்குவிப்பு | 9,304,445.28 | - | 9,304,445.28 | 7,323,021.00 |
| செயற்பாட்டு ஊக்குவிப்பு | 32,469,003.65 | - | 32,469,003.65 | 35,035,565.00 |
| வருடாந்த ஊக்க ஊதியம் | 6,334,438.35 | - | 6,334,438.35 | 1,721,544.00 |
| நடைமுறை சேவை செலவு | 4,039,711.00 | - | 4,039,711.00 | 2,800,092.00 |
| ஊழியர் வட்டி செலவு | (540,664.09) | - | (540,664.09) | 459,519.00 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 1,398,300.00 | - | 1,398,300.00 | 1,487,113.00 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 4,683,075.55 | - | 4,683,075.55 | 4,421,509.00 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | 1,909,272.50 | - | 1,909,272.50 | 2,355,751.00 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 108,000.00 | - | 108,000.00 | 135,968.00 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 2,239,235.00 | - | 2,239,235.00 | 1,846,860.00 |
| ஓய்வூதிய ஆதாயம் | 260,000.00 | - | 260,000.00 | 92,000.00 |
| தொழில்முறை கொடுப்பனவு | 323,312.91 | - | 323,312.91 | 252,484.00 |
| மாதாந்த கொடுப்பனவு | 5,753,161.67 | - | 5,753,161.67 | 5,434,993.00 |
| பணியாளர் செலவு | 4,691,601.82 | - | 4,691,601.82 | 2,562,245.00 |
| விசேட பதிற்கடமை ஊக்குவிப்பு | - | - | - | 69,042.00 |
| தொடர்பாடல் ஊக்குவிப்பு | 215,291.93 | - | 215,291.93 | 187,549.00 |
| சுகாதார காப்புறுதித் திட்ட தவணைக் கட்டணம் | 633,565.56 | 10,512,359.66 | 11,145,925.22 | 8,992,905.00 |
| பணியாளர் நலனோம்பல் | 9,710,946.88 | 72,869,768.53 | 82,580,715.41 | 74,971,734.00 |
| பணியாளர் பயிற்சி | 7,995,750.20 | - | 7,995,750.20 | 2,288,901.00 |
| சீருடைகளும் சப்பாத்துகளும் | 896,158.26 | 3,631,405.18 | 4,527,563.44 | 5,440,428.00 |
| நீர் கட்டணங்கள் | - | 9,758,617.70 | 9,758,617.70 | 6,823,329.00 |
| விகிதங்களும் வரிகளும் | - | 1,275,920.33 | 1,275,920.33 | 1,267,918.00 |
| மின்சாரம் | 6,265,569.90 | 84,449,294.06 | 90,714,863.96 | 108,626,519.00 |
| காப்புறுதி - பொது | - | 5,241,296.61 | 5,241,296.61 | 4,701,487.00 |
| பாதுகாப்பு கட்டணம் - உற்பத்தி | 7,618,575.94 | - | 7,618,575.94 | 7,527,444.00 |
| உபகரணங்கள் பராமரிப்பு | 213,667.60 | 4,750,288.81 | 4,963,956.41 | 6,422,620.00 |
| பராமரிப்பு - உற்பத்தி | 230,190.11 | 22,164,085.07 | 22,394,275.18 | 37,692,126.00 |
| கட்டிட பராமரிப்பு | 4,342,286.16 | 7,102,853.78 | 11,445,139.94 | 5,623,091.00 |
| தேய்வு | 244,703,183.65 | - | 244,703,183.65 | 215,698,863.00 |

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

| | உள்ளீர்க்கப்படாத கிரயம் | விற்பனைச் செலவில் உள்ளீர்க்கப்பட்ட செலவினம் | 2024 | 2023 மீள்குறிப்பிடப் படுபவை |
|---|---|---|---|---|
| போக்குவரத்துக் கட்டணங்கள் | 525,256 | 885,735 | 1,410,991 | 448,900 |
| நுகர்வு - உதிரிப்பாகங்கள் | 465,883 | 50,058,363 | 50,524,246 | 27,968,748 |
| நுகர்வு - எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் | - | 44,482,086 | 44,482,086 | 53,313,395 |
| திருத்தங்களும் பராமரிப்பும் தி மற்றும் ப | 9,581,486 | 15,006,029 | 24,587,515 | 18,424,559 |
| தரக்கட்டுப்பாட்டுச் செலவுகள் | 31,455,449 | - | 31,455,449 | 32,972,640 |
| மூ/பொ. அழிப்புக் கட்டணங்கள் | 1,357,161 | - | 1,357,161 | 3,285,131 |
| நிராகரிக்கப்பட்ட மூலப்பொருள் செலவு | 2,352,642 | - | 2,352,642 | 1,344,532 |
| நிராகரிக்கப்பட்ட பொதியிடல் சாதனங்கள் செலவு | 1,036,545 | - | 1,036,545 | 1,251,655 |
| நிராகரிக்கப்பட்டநடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை செலவு | 1,656,167 | - | 1,656,167 | 2,087,653 |
| மூலப்பொருள் சீராக்கம் - பொது மருந்துகள் | 20,869,052 | - | 20,869,052 | (1,118,496) |
| மூலப்பொருள் சீராக்கம்-பெனிசிலின் மருந்துகள் | 312,397 | - | 312,397 | 72,499 |
| மூலப்பொருள் சீராக்கம் இருப்பெடுப்பு | (1,498,900) | - | (1,498,900) | (905,325) |
| பொதியிடும் சாதனங்கள் சீராக்கம் - இருப்பெடுப்பு | (1,856,429) | - | (1,856,429) | (2,537,976) |
| பொதியிடும் சாதனங்கள் சீராக்கம் | 248,175 | - | 248,175 | (14,561) |
| இருப்பெடுப்பு சீராக்கம் - பராமரிப்பு | 81,946 | - | 81,946 | (56,894) |
| நடைபெற்றுக்கொண்டிருக்கும் வேலை சீராக்கம்-இருப்பெடுப்பு | 968,107 | - | 968,107 | (22,704) |
| விற்பனை சிட்டை வேறுபாடு ஆகுசெலவு | 3,229,540 | - | 3,229,540 | 10,019,179 |
| | **643,160,857** | **478,110,879** | **1,121,271,736** | **1,027,280,526** |

## குறிப்பு - 3

| | | 2024 | 2023 |
|---|---|---|---|
| ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | | | |
| நானாவித வருமானம் | (குறிப்பு 3-அ) | 11,353,816 | 13,993,363 |
| உதவி-வருமானம் | | 26,901,955 | - |
| முடிவுப் பொருட்கள், மூ.பொ. விற்பனை | | 332,442 | 102,973 |
| | | **38,588,212** | **14,096,336** |

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

### குறிப்பு - 3 அ

**நானாவித வருமானம்**

| | | |
|---|---|---|
| கழிவுப்பொருட்கள் விற்பனை | 4,610,222 | 7,211,381 |
| வழங்குனர்களை பதிவுசெய்தல் | 883,000 | 729,000 |
| ஏல ஆவணக்கட்டணம் | 4,697,350 | 3,058,630 |
| கடன் வழங்குனர்களின் மீதி மற்றும் ஏல ஒப்பந்த செலுத்தப்பட வேண்டியது | - | 1,972,769 |
| பொதுவானது | 1,163,243 | 1,021,583 |
| | **11,353,816** | **13,993,363** |

### குறிப்பு - 4

| நிர்வாகச் செலவுகள் | 2024 | 2023 |
|---|---|---|
| சம்பளங்களும் வேதனங்களும் | 43,200,362 | 43,850,364 |
| அமைய சம்பளங்கள் | 2,526,899 | 1,351,040 |
| வாழ்க்கைச் செலவு | 17,268,252 | 7,995,465 |
| போக்குவரத்து ஊக்குவிப்பு | 13,598,224 | 15,346,579 |
| ஊ.சே.நி. மற்றும் ஊ.ந.நி.- 18% | 11,407,027 | 9,273,844 |
| மேலதிக நேர வேலை | 17,412,126 | 17,499,593 |
| வருகை ஊக்குவிப்பு | 8,387,569 | 7,097,780 |
| செயலாற்ற ஊக்குவிப்பு | 31,187,732 | 33,207,773 |
| வருடாந்த ஊக்க ஊதியம் | 5,834,500 | 1,581,025 |
| நடைமுறை சேவை செலவு | 3,848,021 | 3,054,017 |
| பணியாளர் வட்டி செலவு | (602,120) | 491,627 |
| சுழற்சி முறை வேலை ஊக்குவிப்பு | 615,400 | 582,800 |
| பணியாளர் செலவு | 4,345,881 | 2,462,722 |
| பணியாளர் மருத்துவச் செலவு | 5,977,738 | 4,677,774 |
| வீடமைப்புக் கடன் மீளளிப்பு | 3,499,898 | 3,767,121 |
| மேற்பார்வையாளர் கொடுப்பனவு | 285,968 | 300,000 |
| கடினமான வேலை நிலை கொடுப்பனவு | 729,285 | 542,190 |
| தொழில்முறை கொடுப்பனவு | 904,782 | 1,060,073 |
| விசேட பதிற்கடமை ஊக்குவிப்பு | 1,183,479 | 1,058,360 |
| மாதாந்த கொடுப்பனவு | 5,281,932 | 5,524,211 |
| பணி ஓய்வு அனுகூலம் | 360,000 | 472,000 |
| தொடர்பாடல் கொடுப்பனவு | 456,498 | 523,508 |
| சுகாதாரக் காப்புறுதி தவணைக் கட்டணம் | 4,056,913 | 3,591,617 |
| பணியாளர் நலனோம்பல் | 28,296,729 | 25,983,258 |
| பணியாளர் பயிற்சி | 1,545,231 | 748,156 |
| சீருடைகளும் சப்பாத்துகளும் | 1,081,407 | 1,432,006 |

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

| குறிப்பு - 4 | 2024 | 2023 |
|---|---|---|
| போக்குவரத்து - வெளிநாடு | - | 666,722 |
| பணிப்பாளர்களுக்கான கட்டணம் | 296,000 | 320,000 |
| ஏனைய ஊக்குவிப்புகள் | 5,631,800 | 7,167,800 |
| விகிதங்களும் வரிகளும் | 545,068 | 545,146 |
| மின்சாரம் | 28,550,974 | 32,908,839 |
| நீர் கட்டணங்கள் | 3,315,649 | 2,858,135 |
| காப்புறுதி - பொது | 730,041 | 822,547 |
| காப்புறுதி - வாகனங்கள் | 361,911 | 331,248 |
| மோட்டார் வாகனம் திருத்தமும் பேணுதலும் | 13,698,978 | 10,425,767 |
| வாகனங்களுக்கான எரிபொருள், உரா.நீக்கி | 13,433,062 | 15,011,119 |
| கருவிகள் பராமரிப்பு | 3,136,818 | 1,979,551 |
| பராமரிப்பு - நிர்வாகம் | 7,528,263 | 6,775,809 |
| கட்டிடப் பராமரிப்பு | 2,148,410 | 294,109 |
| தேய்வு | 43,375,091 | 42,621,535 |
| போக்குவரத்துக் கட்டணங்கள் | 1,718,651 | 921,243 |
| தபால், தொலைநகல் | 1,504,372 | 911,268 |
| தொலைபேசிக் கட்டணங்கள் | 1,069,521 | 1,118,724 |
| பாதுகாப்புக் கட்டணங்கள் | 3,894,395 | 2,166,244 |
| நன்கொடைகள் | 709,415 | 392,950 |
| உரிமக் கட்டணம் - வாகனங்கள் | 132,341 | 124,934 |
| உரிமக் கட்டணம் - மருந்துகள் | 7,539,777 | 7,749,877 |
| உரிமக் கட்டணம் - ஏனையவை | 344,628 | 354,568 |
| அச்சிடல், காகிதாதிகள் | 11,356,947 | 10,589,662 |
| அலுவலகச் செலவு | 2,528,546 | 2,203,723 |
| கணக்காய்வுக் கட்டணம் | 2,300,000 | 1,955,400 |
| வாடகைக் கட்டணம் | 30,775,599 | 41,796,482 |
| விளம்பரங்கள் | 5,616,165 | 5,869,241 |
| சந்தா - பருவகால இதழ்கள் | 144,920 | 123,420 |
| சட்ட, விசாரணைச் செலவுகள் | 520,000 | - |
| தொழில்சார் கட்டணங்கள் | 5,230,802 | 324,129 |
| பொழுதுபோக்கு | 2,906,796 | 2,377,011 |
| வருடாந்த சந்தா | 173,000 | 74,635 |
| முத்திரைக் கட்டணம் | 55,975 | 62,600 |
| சேதமடைந்த மற்றும் பயன்படுத்தாத பொருள் செலவு | 4,651,566 | 956,432 |
| காகிதாதிகள் சீராக்கம் - இருப்பெடுப்பு | 2,414 | - |
| | **418,617,627** | **396,275,773** |

# 31.12.2024 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கைகளுக்கான குறிப்புக்கள்

## குறிப்பு - 5

| விற்பனை மற்றும் விநியோகச் செலவுகள் | 2024 | 2023 |
|---|---|---|
| ஊக்குவிப்புக் கழிவுகள் | 78,005,017 | 132,015,605 |
| விற்பனை மேம்பாட்டுச் செலவுகள் | 4,397,045 | 4,093,499 |
| நிராகரிக்கப்பட்ட முடிவுப்பொருட்களின் கிரயம் | 2,521,736 | - |
| ஐயக்கடன் | 4,806,807 | 800,926,792 |
| முடிவுறுத்தப்பட்ட பொருட்கள் -சீராக்கம் இருப்பெடுப்பு | (2,793,859) | - |
| | **86,936,746** | **937,035,896** |

## குறிப்பு - 6

| ஏனைய தொழிற்பாட்டுச் செலவுகள் | 2024 | 2023 |
|---|---|---|
| வடிவமைப்பு, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 12,670,936 | 22,112,506 |
| இருப்பெடுப்பு சீராக்கம் - வ.ஆ.ம.அ.திணைக்களம் | 426,163 | 6,459 |
| கையுதிர்ப்பு நட்டம் | 429,134 | 167,416 |
| | **13,526,232** | **22,286,381** |

## குறிப்பு - 7

| நிதிச்செலவு | 2024 | 2023 |
|---|---|---|
| (i) நிதிப்பிரமாணம் 3(2)(iii) | நாட்டின் ஆரம்ப அடிப்படை மருந்து தேவைகளை மேவுகை செய்கின்ற 05 உற்பத்திச் தொழிற்சாலைகளை உருவாக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்ட லோட்டஸ் பாமா செயற்திட்டத்திற்காக முழுமையான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்படாது இருந்ததுடன் 2021 முதல் மீளாய்வாண்டு வரை பெறுகை நடவடிக்கைகள் மற்றும் ஊழியர் சம்பளம் மற்றும் உரிய காணிகளைக் கொள்வனவு செய்வதற்கு முறையே ரூபா 55.58 மில்லியன், ரூபா 322.41 மில்லியன் ஆக கூட்டுமொத்தமாக ரூபா 377.99 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. |
| (ii) நிதிப்பிரமாணம் 110 | இழப்பு நட்டப் பதிவேடு பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. |
| (இ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் ஏஜ ஆம் அத்தியாயத்தின் 2.10 ஆம் பந்தி | பதிற் கடமை மற்றும் தகுதி காண் நியமனங்களை உள்ளடக்கிய சகல நியமனங்களும், சம்பள அதிகரிப்பு மாற்றங்கள், ஊழியரை விலக்குதல், கேட்டு விலகுதல் மற்றும் ஓய்வு பெறுதல், மீண்டும் சேவையில் ஈடுபடுத்துதல் மற்றும் மரணமடைதல் தொடர்பான முழுமையான விபரங்கள் அந்தந்த சந்தர்ப்பங்களின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிக்கையிட வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஈ) 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் 6/97 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆவது பந்தி | பதிற் கடமைக் காலம் 03 மாதம் ஆகக் கூடிய எல்லையின் கீழ் ஆக இருக்க வேண்டியிருந்த போதிலும் பிரதிப் பொது முகாமையாளர் மருந்துப் பட்டோலை மற்றும் ஆராய்ச்சி பதவிகளுக்காக தொடர்ச்சியாக 09 வருடங்களுக்கு மேற்பட்ட காலம் பதிற்கடமை அடிப்படையில் உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டு ரூபா 1,541,368 பதிற்கடமைப் படி செலுத்தப்பட்டிருந்தது. அதற்கு மேலதிகமாக 2022 திசெம்பர் 31 ஆந் திகதி முதல் பிரதிப் பொது முகாமையாளர் மனிதவளம் மற்றும் பிரதி பொது முகாமையாளர் சந்தைப்படுத்தல் என்ற 02 பதவிகளுக்காக பதிற்கடமை அடிப்படையில் இரண்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். |
| (உ) 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய இலக்கம் 02/2010 என்ற முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் vi ஆம் பந்தி | ஒழுங்குபடுத்தப்பட்ட ஆலோசனைகளுக்குப் புறம்பாக அமையப் படி மற்றும் கூட்டிணைந்த படிகளாக மேலதிகமாகச் செலுத்தப்பட்ட ரூபா 1,689,108 தொகையை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



| | | |
|---|---|---|
| (ஊ) 2015 மே 15 ஆம் திகதிய இலக்கம் மு.அ 01/2015/01 என்ற நிதி அமைச்சு சுற்றறிக்கையின் 3 ஆம் பந்தி (அ) மற்றும் 2023 மார்ச் 14 ஆம் திகதிய சுகாதார அமைச்சின் சிரேஸ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்) இன் கடிதம் | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் ஊழியர்கள் ஓய்வு பெற்றுச் செல்லும் போது உரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக முறையான பதிலீட்டுத் திட்டம் ஒன்று தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (எ) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1 மற்றும் 4.2.2 | | ஆகக் குறைந்தது 03 வருட காலத்திற்காக எதிர்பார்க்கப்பட்ட பெறுகைத் திட்டமும் ஒவ்வொரு பெறுகைகளும் ஆரம்பத்தில் இருந்து முடிவடையும் வரையும் ஒவ்வொரு பெறுகை செயற்பாடுகளின் படிமுறைகள் கால ஒழுங்கு முறையை விபரிக்கின்ற பெறுகைக் கால அட்டவணையும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஏ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற பொது முயற்சிகள் சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான செயற்பாட்டுக் கைநூலின் 5.3 ஆம் பந்தி | | 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் வரிக்குப் பின் இலாபம் ஆகக் குறைந்தது முப்பது சதவீதம் திரண்ட நிதியத்தில் செலவு வைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதும் 2023 ஆம் ஆண்டுக்குரிய வரிக்குப் பின் இலாபத்தில் 30 சதவீதத்திற்குரிய பங்கு ரூபா 455,566,592 ஆக இருந்த போதிலும் ரூபா 300,000,000 மாத்திரம் ஒன்றிணைந்த நிதியத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது. |
| (ஐ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையில் வெளியிடப்பட்ட பொதுமுயற்சிகளுக்கான நிர்வாகம் தொடர்பான வழிகாட்டி | | |
| (i) 2.6 ஆம் பந்தி | | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் உயர் முகாமைத்துவ மட்டத்தில் அங்கத்தவருக்கு தகமைகள் பூர்த்தி செய்யப்பட்ட பணிப்பாளர் சபை செயலாளர் ஒருவர் இருக்க வேண்டியிருந்த போதிலும் தகைமையுடன் பணிப்பாளர் சபை செயலாளரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) 3.2 ஆம் பந்தி | | ஐந்தொகைத் திகதியின் பின்னர் 05 மாதங்களுக்குப் பின்னர் மற்றும் வருடாந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன் வருடாந்த செயலாற்றல் மீளாய்வுக் கூட்டம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் 2023 ஆம் ஆண்டிற்காக மேற்கூறப்பட்ட கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (iii) 3.2 ஆம் பந்தியின் இணைப்பு 01 இன் 2 ஆம் பகுதி (அ) | | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் நிதி மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்பட வேண்டியிருந்த போதிலும் மனித வளப் பிரிவின் ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் நிதி மதிப்பீட்டுப் பெறுமதி குறிப்பிடப்படவில்லை. |
| (IV) 4.3 ஆம் பந்தி | | ஆகக் குறைந்தது 03 மாதங்களுக்கு ஒருதடவை வீதம் இடர் குழுக்கூட்டம் நடாத்த வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டில் 02 கூட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. |

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



| | | |
|---|---|---|
| (v) 2015 யூன் 04 ஆம் திகதிய BP/30/15 மற்றும் 2022 செப்தெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் BP/62/22 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானம் | | கூட்டுத்தாபனத்தின் ஊழியர்களுக்காக செலுத்தப்படுகின்ற துவிச்சக்கர வண்டிக் கடன் ரூபா 20,000 முதல் ரூபா 75,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதும் அதற்காக பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. |
| (X) கூட்டுத்தாபனம் மற்றும் ஏனைய மருந்து உற்பத்தியாளர்களுக்கு இடையிலான கூட்டு முயற்சிக்கான உடன்படிக்கை | | |
| (i) 5.2.4 ஆம் பிரிவு | | முதலீட்டாளர்களால் உடன்படிக்கை செய்து 03 மாதங்களுக்குள் தமது உற்பத்திக் கூடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்க வேண்டியிருந்த போதிலும் 07 முதலீட்டாளர்கள் தொடர்பாக உரிய தகவல்கள் பரீட்சிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 3.16 ஆம் பிரிவு | | மெடிகொம் கூட்டுமுயற்சியினால் 16 வகையான மருந்துகள் உற்பத்தி செய்யப்பட்டு அரச மருந்தாக்க கூட்டுத்தாபனத்திற்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டில் எந்தவொரு மருந்தும் வழங்கப்பட்டிருக்கவில்லை. |

2.2.3 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(எ) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க கூட்டுத்தாபனத்தின் அதிகாரங்கள், கடமைகள், மற்றும் செயற்பாடுகளுக்கு இணக்கமற்ற வகையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என.

2.2.4 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 12(ஏ) பிரிவில் குறிப்பிட்ட தேவைப்பாடுகளுக்கு இணங்க பின்வரும் அவதானிப்புக்கள் தவிர கூட்டுத்தாபனத்தின் வளங்கள் சிக்கனமாக, வினைத்திறனாக மற்றும் பயனுறுதியாக கால எல்லைக்குள் உரிய சட்டங்களுக்கு இணக்கமாக கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என.

(அ) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைகளுக்குரிய அது சார்ந்த சகல செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்தக் கிரயம் மதிப்பீடு இல்லையாயின் பொறியியலாளர் மதிப்பீடு பெறுகை நிறுவனத்தால் தயாரிக்க வேண்டியிருந்த போதிலும் 4.3.2 ஆம் பிரிவின் பிரகாரம் அந்த மொத்தக் கிரய மதிப்பீடு திணைக்கள பெறுகைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தின் தரக் கட்டுப்பாட்டு ஆய்வுகூடத்தில் கூரை அமைத்தல் மற்றும் ஸ்தாபித்தல் பெறுகைகள் தொடர்பாக மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்று ஸ்தாபிக்கப்படாது இருந்ததுடன் பின்வரும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.1.1(இ) இன் பிரகாரம் பெறுகைகளுக்கு தேவையான நிதி ஏற்பாடு செய்யப்பட்டமைக்கான உறுதியான கடப்பாடு இன்றி பெறுகை செயற்பாடுகள் ஆரம்பிக்க முடியாதிருந்த போதிலும் மேற்கூறப்பட்ட பெறுகைக்குத் தேவையான ரூபா 5 மில்லியன் நிதியில் ரூபா 3 மில்லியன் 2024 இன் வருடாந்த பாதீட்டின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த போதும் மிகுதி ரூபா 2 மில்லியன் நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக ஒப்பந்ததாரருக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்ட திகதியான 2024.02.02 ஆம் திகதி வரை நிதிப் பிரிவின் அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

## கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



(ii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் ஒப்பந்ததாரரரால் ஒப்பந்த உடன்படிக்கை மீறப்படுமாயின் பெறுகை நிறுவனத்தை பாதுகாப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட ஒப்பந்தத் தொகையில் நூற்றுக்கு ஐந்து சதவீத தொகையொன்று செயலாற்றல் காப்புறுதி ஒப்பந்தத்தின் வேலை பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட திகதி முடிவடைந்து மேலும் 28 நாட்க ளுக்கு செல்லுபடியாகும் வகையில் ஒப்பந்தகாரரிடம் இருந்து பெறவேண்டியிருந்த போதிலும் செயலாற்றல் காப்புறுதி பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 3.12.2 ஆம் பிரிவின் பிரகாரம் முன்னைய தகைமைகளை பரீட்சிப்பதன் கீழ் அதற்கு சமமான கடந்தகால செயலாற்றல் தொடர்பான தகவல்கள் கேள்விதாரரிடம் இருந்து பெறவேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த தகவல்கள் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர்களிடம் இருந்து பெறப்படாது இருந்ததுடன் அந்த தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்ட வொரு மருந்தும் வழங்கப்பட்டிருக்கவில்லை.திகதியான 2022.12.24 ஆம் திகதி முதல் ஒரு வருட காலத்திற்கான வங்கிக் கணக்கு விபரங்கள் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(iv) பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9.1 ஆம் பிரிவின் பிரகாரம் ரூபா 250,000 இனை விஞ்சுகின்ற வேலை ஒப்பந்தங்களுக்காக பெறுகை நிறுவனத்தால் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரருக்கு முறையான மீள் கையளித்தல் கடிதம் விநியோகிப்பதற்கும், கம்பனி முறையான ஒப்பந்த உடன்படிக்கை ஒன்றை இருதரப்பினாலும் கையொப்பம் இடவேண்டி இருந்தமையும் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் நிறுவனத்தால் ஒப்பந்தத்த்திற்காக முறையான ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) கூட்டுத்தாபனத்தின் வியாபாரக் கடன்பட்டோர் மருத்துவ வழங்கல் கணக்கில் உள்ளடங்கப்பட்ட 2018 முதல் 2024 ஆம் ஆண்டு வரை மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள கூட்டுமுயற்சி மருந்துகளுக்குரிய பட்டியல்களுக்காக மருந்து விலை முரண்களின் அடிப்படையிலும், குறித்துரைத்த கால எல்லையில் மருந்துகள் வழங்கப்படாமையின் காரணமாக தாமதக் கட்டணமும் ஆக மருத்துவ வழங்கல் பிரிவினால் கூட்டுத்தாபனத்திலிருந்து அறவிடப்பட்ட ரூபா 1,106,420,551 தொகை கூட்டுமுயற்சிகளில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கூட்டுமுயற்சிகளில் இருந்து கொள்வனவின் அடிப்படையில் ஏற்படுகின்ற கடன்கொடுத்ததோர் மீதி உடன்படிக்கையின் பிரகாரம் 60 நாட்களுக்குள் தீர்த்து வைக்க வேண்டியிருந்த போதிலும் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,399,405,216 ஆன கூட்டுமுயற்சிகளுக்காக செலுத்த வேண்டிய மீதியில் 60 நாட்களை விஞ்சிய ரூபா 1,661,541,201 மீதி ஒன்று காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

(இ) 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறையல்லாச் சொத்துக்களில் உள்ளடக்கப்பட்ட கிரயம் ரூபா 119,158,776 ஆன 135 விடயங்கள் பௌதீக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) நடைமுறை வேலைக் கணக்கில் ரூபா 73,582,498 மீதியில் 07 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட ரூபா 27,550,136 தொடர்பாக பரீட்சிக்கும் போது அது 2018 முதல் இது வரை நிர்மாணிக்கப்படாத நான்கு மாடி நிர்வாக கட்டிடத்திற்காக செலவிடப்பட்ட சிக்கனமற்ற செலவினமாக இருந்தமை வெளிப்படுத்தப்பட்டது.

(உ) மருந்து மூலப்பொருள் பரிமாற்ற முறையின் கீழ் கடன் அடிப்படையில் கூட்டுத்தானபத்தில் இருந்து கூட்டுமுயற்சிகளுக்கு 2023 மார்ச் 03 ஆந் திகதி ரூபா 13,557,223 பெறுமதியான மூலப்பொருள் இருப்பு ஒன்று விநியோகிக்கப்பட்டிருந்த போதிலும் உரிய தொகையை இரண்டு வருடத்திற்கு மேற்பட்ட காலமாக அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தாபனத்தால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு வழங்கப்பட்ட மருந்துகளுக்காக மீளாய்வாண்டில் 16 சந்தர்ப்பங்களின் போது பொது திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களத்தில் இருந்து கிடைக்கப்பெற்ற ரூபா 25,780.89 மில்லியனுக்குரிய வழங்கல் பட்டியல்களுடன் இணக்கம் செய்து சரியாக இனங்காணாமல் கடன்பட்டோர் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



(எ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் அபிவிருத்தி செய்யப்பட்ட மருந்துகள், சந்தையில் அதிக கேள்வியுடன் உள்ள 08 மருந்து வகைகள், வணிக ரீதியான உற்பத்தியாக தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கீகாரத்திற்காக 2023 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதனுடன் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் உரிய பிரகாரம் சமர்ப்பிக்கப்படாமையினால் 1½ வருடங்களுக்கும் அதிககமான காலத்தில் இருந்து அந்த வணிக ரீதியான உற்பத்திகளுக்காக அங்கீகாரம் கிடைக்கவில்லை.

(ஏ) Flucloxacillin Capsules BP 500 அப மற்றும் Mebendazole Tablets USP 100 அப என்ற மருந்து வகைகளில் பதிவுச் சான்றிதழ் முறையே 2024 திசெம்பர் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் காலாவதியாகி இருந்தமையும் கூட்டுத்தாபனத்தால் குறித்துரைத்த திகதிகளில் அந்த சான்றிதழ்களை மீண்டும் புதுப்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்காமையால் முறையே 2025 சனவரி 29 ஆம் திகதி மற்றும் 2025 பெப்ரவரி 01 ஆந் திகதிகளில் மீண்டும் தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் பதிவினைப் புதுப்பிப்பித்தல் காரணமாக மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து கோரப்பட்ட போதும் உரிய மருந்துக் கட்டளைகளுக்காக மருந்து வழங்குவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிரயம் ரூபா 26,177,276 ஆன மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் மருத்துவ வழங்கல் பிரிவின் களஞ்சியத்தில் எஞ்சியிருந்தது.

(ஐ) Clopidogrel Tablets USP 75 mg (500 Pack Size) மருந்து புதிய மருந்து ஒன்றாக கூட்டுத்தாபத்தில் உற்பத்தி செய்வதற்காக 2020 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த உற்பத்தி சூத்திரத்தில் காணப்படுகின்ற நலிவுகளின் காரணமாக உற்பத்தி தோல்வியடைந்திருந்தது. உற்பத்தி சூத்திரத்தை அபிவிருத்தி செய்து அந்த மருந்தை கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்து மருத்துவ வழங்கல் பிரிவின் தேவைகளுக்காக வழங்கப்பட்டிருக்குமாயின் 10 சதவீத இலாபத்தை அடைந்து கொள்வதற்கான சந்தர்ப்பம் காணப்பட்ட போதிலும் கூட்டுத்தாபனம் அவ்வாறான நடவடிக்கை எடுக்காமல் கூட்டுமுயற்சி ஊடாக 06 சதவீத இலாபத்துடன் 1,700 பொதிகளை மாத்திரம் வழங்கியிருந்தது.

(ஒ) 2023 ஆம் ஆண்டின் போது பெனிசிலீன் வலையத்தை விரிவுபடுத்தல், மறுசீரமைப்பு மற்றும் மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உலக வங்கி உதவியின் கீழ் ரூபா 438,146,336 கிடைக்கப்பெற்றதுடன் கூட்டுத்தாபனமும் அதற்காக ரூபா 24,895,256 கிரயத்தை செலவிட்டிருந்தது. இதன் போது அதிவேக கூட்டுக்குளிகை நிரப்பும் இயந்திரம் மற்றும் ஏனைய மருந்து இயந்திர உபகரணங்களை பென்சிலீன் வலயத்திற்கு கொள்வனவு செய்வதன் மூலம் இயந்திரக் கூடத்தில் உற்பத்தி இயலளவை அதிகரிப்பதற்கும், Co-Amoxcillin கூட்டுக்குளிகைகள் போன்ற புதிய ஈரப்பதன் உற்பத்திக்காக புதிய குறைந்த பிரதேசம் ஒன்றை அபிவிருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது பென்சிலீன் வலயத்தில் தற்போது உற்பத்தி செய்யப்படுகின்ற பென்சிலீன் கூட்டுக்குளிகைகளில் ஐந்து வகைகளில் 261 மில்லியன் உற்பத்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 191 மில்லியன் மாத்திரைகள் மாத்திரம் உற்பத்தி செய்வதற்கு முடியுமாக இருந்ததுடன் 2019 ஆம் ஆண்டின் போது 275 மில்லியன் கூட்டுக்குளிகைகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பென்சிலீன் வலயத்தை அபிவிருத்தி செய்யப்பட்ட போதிலும் கவனத்தில் கூட்டுக்குளிகைகள் கூடிய செயல் முன்னேற்றதைப் பெற்றுக் கொள்வதற்கு முடியாதிருந்தது.

(ஓ) அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்கு மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து Tramadol Hydrochloride Capsule 50mg மருந்தில் 7.5 மில்லியன் மாத்திரைகளைக் கொள்வனவு செய்வதற்காக 2023 செப்தெம்பர் 06 ஆந் திகதி 2024/SPM/N/R/P/00029 என்ற கட்டளை வழங்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2024 சனவரி 06 மற்றும் 2024 மே 06 என்ற திகதிகளில் முறையே மருந்து மாத்திரைகள் 04 மில்லியன் மற்றும் 3.5 மில்லியன் வீதம் குறித்துரைத்த கால அட்டவணையில் வழங்க வேண்டியிருந்த போதிலும் 2024 ஆம் ஆண்டில் உரிய கட்டளைகளுக்காக மருந்து மாத்திரைகள் 5.256 மில்லியன் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன் தாமதமாகி மருந்துகள் வழங்கியதன் காரணமாக 5 பட்டியல்களுக்காக மருத்துவ வழங்கல் பிரிவிற்கு ரூபா 1.298 மில்லியன் தாமதக் கட்டணமும் செலுத்த வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் கூட்டுத்தாபனத்தின் விற்பனைத் திட்டத்தின் பிரகாரம் மருந்து மருந்தில் 7.5 மில்லியன் அலகுகள் விற்பனை செய்வதன் மூலம் ரூபா 118.57 மில்லியன் விற்பனை வருமானம் ஒன்றை பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்பட்ட போதும் மீளாய்வாண்டின் போது ரூபா 60.175 மில்லியன் விற்பனை வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(ஔ) மீளாய்வாண்டின் உற்பத்தித் திட்டத்தின் பிரகாரம் Metformin BP 500 mg மருந்தில் 84 மில்லியன் அலகுகளை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் 9.28 மில்லியன் அலகுகள் மாத்திரம் உற்பத்தி செய்த தனியார் சந்தைக்கு விநியோகிக்கப்பட்டிருந்தது. இந்த மருந்து கூட்டுத்தாபனத்தில் உற்பத்தி செய்வதன் மூலம் 12 சதவீதம் இலாபம் உழைப்பதற்கு முடியுமாக இருந்த போதிலும் மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2024/SPM/N/R/P/00015 என்ற கட்டளையின் கீழ் கிடைக்கப் பெற்ற ரூபா 50 மில்லியன் கட்டளை சேன்டிஸ் எக்டிவ் கூட்டு முயற்சிக்கு வழங்கி 06 சதவீத இலாபம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. மேலும் 250 மில்லியன் மருந்து அலகுகளை வழங்குவதற்காக மருத்துவ வழங்கல் பிரிவின் இலக்கம் 2024/SPM/N/R/P/00015 என்ற மருந்துக் கட்டளை கூட்டுத்தாபத்தின் கூட்டு முயற்சியான வெலோஜன் லங்கா கம்பனிக்கும் மற்றும் சான்டிஸ் அக்டிவ் கம்பனிக்கும் வழங்கப்பட்டதுடன் செலோஜன் லங்கா கம்பனி குறித்துரைத்த கால அட்டவணையில் மருந்துகளை வழங்காமையின் காரணமாக ரூபா 12,311,005 தண்டப்பணம் செலுத்துவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டிருந்தது. எனினும் உரிய தண்டப் பணத்தை செலோஜன் லங்கா கம்பனியில் இருந்து அறவிடுவதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(க) மீளாய்வாண்டில் விற்பனைத் திட்டம், உற்பத்தித் திட்டம் மற்றும் பெறுகைத் திட்டங்களில் உயர்ந்த சந்தை கேள்வி உள்ள Rosuvastatin IP 10 mg மருந்து உற்பத்திக்கு, விற்பனை செய்வதற்கு மற்றும் மூலப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு திட்டமிடப்பட்டிருக்கவில்லை. 2023 மார்ச் 21 ஆந் திகதி கிடைக்கப்பெற்ற ரூபா 12,991,560 கிரயமான 75 KG மருந்து மூலப்பொருட்கள் 2024 யூன் மாதம் வரை உற்பத்திக்கு பயன்படுத்தப்படாது இருந்ததுடன் நிறுவனத்தில் காணப்படுகின்ற உற்பத்தி வசதிகள் மற்றும் அமுல்படுத்த முடியுமான உற்பத்தி கால அட்டவணையை கருத்தில் கொண்டு அதற்கு இணையாக மூலப் பொருட்களை கொள்வனவு செய்யாமையின் காரணமாக செலவிடப்பட்ட கிரயத்திற்காக உரிய நலன்கள் உரிய காலப்பகுதியில் கூட்டுத்தாபனத்திற்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் மூலப்பொருட்களின் தரத் தன்மை தொடர்பாக ஒரு வருடத்திற்குப் பின்னர் அதாவது 2024 யூன் 24 அந் திகதி பரீட்சிக்கப்பட்டு அந்த மூலப் பொருள் இருப்பு IP மாதிரி மற்றும் மாதிரிகளுடன் இணங்காது இருந்தமை கூட்டுத்தாபனத்தின் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் உரிய இருப்புக்களைமீள அனுப்பி அதற்குப் பதிலாக வழங்குனரிடம் இருந்து தகுதியான மூலப் பொருட்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கா) Aspirin AR Tablet 75 mg மருந்தில் தொழில்நுட்ப வழு காணப்பட்ட போதும் அது தொடர்பாக கவனத்தில் கொள்ளாமல் 2022 மற்றும் 2023 ஆம் ஆண்டுகளின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,786,398 கிரயமான Aspirin AR மருந்து மூலப்பொருட்கள் 641 கிலோ கிராம் குறைவான பயன்பாட்டுடன் களஞ்சியத்தில் காணப்பட்டது.

(கி) 2020 ஆம் ஆண்டின் COVID-19 தொற்றுநோய்க்கு பயன்படுத்தும் எதிர்பார்ப்பில் கொள்வனவு செய்து 2025 மார்ச் 31 ஆந் திகதியில் காலாவதியாவதற்கு இருந்த ரூபா 6,698,610 கிரயமான Chloroquine Phosphate BP மூலப்பொருள் 600 கிலோ கிராம் மீளாய்வாண்டின் போதும் விளைவற்றுக் களஞ்சியத்தில் காணப்பட்டிருந்த போதும் அந்த மூலப்பொருட்களை வழங்குனருக்கு மீள் ஏற்றுமதி செய்வதற்கோ அல்லது ஏனைய தரப்பினருக்கு விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கீ) மீளாய்வாண்டிற்காக உற்பத்தித் திட்டத்தின் பிரகாரம் பாதீடு செய்யப்பட்ட உற்பத்தி மருந்து அலகுகள் 4,020 மில்லியன் ஆக இருந்ததுடன் உள்ளபடியான உற்பத்தி அலகுகள் 3,146.54 மில்லியன் ஆனமையால் பாதகமான முரண் மருந்துகளின் அலகுகள் 874.3 மில்லியன் ஆகக் காணப்பட்டது. இது கடந்த ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மருந்து அலகுகள் 381.08 மில்லியன் ஆல் மருந்து உற்பத்தி குறைவாகும்.

(கு) 2018 முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலப் பகுதியில் புதிதாக 29 மருந்து வகைகள் மாத்திரம் அறிமுகப்படுத்த போதிலும் அதிக கேள்வி உள்ள சில மருந்துகள் தவிர புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட மருந்துகளை தொடர்ச்சியாக உற்பத்தி செய்வதற்கும், மேம்படுத்துவதற்கும் போதியளவான கவனம் செலுத்தாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்தின் உற்பத்திக் கலவைக்காக அந்த அறிமுகப்படுத்தலின் மூலம் போதியளவான பங்களிப்பு வழங்கப்பட்டிருக்கவில்லை.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை



(கூ) மீளாய்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சில மருந்துகளில் காணப்பட்ட சிறிய பகுதிகள் உடையக் கூடிய இயலுமையை அதிகமாக இருந்தமை, மருந்து மாத்திரைகளின் நிறைகளில் உள்ள முரண்கள், சீரற்ற நிலைகள் மற்றும் மருந்து மாத்திரைகள் உடைவதற்கு வசதியீனமான காரணங்களின் அடிப்படையில் 14 சந்தர்ப்பங்களின் போது உற்பத்திகள் இடைநிறுத்தப்பட்டு மேலதிக கிரயம் ஒன்றைச் செலவிட்டு மீண்டும் உற்பத்தி செய்யப்பட்டிருந்தது. அது சாதாரண உற்பத்தி செயற்பாடுகளுக்கு புறம்பான செயற்பாடாக இருந்த போதும் ஒவ்வொரு வருடமும் உற்பத்தி செயற்பாடுகளில் ஏற்படுகின்ற இந்த சிக்கலான நிலைமையை குறைத்துக் கொள்வதற்கு பொருத்தமான கட்டுப்பாட்டுத் திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

கெ) மருத்துவ வழங்கல் பிரிவிற்கு மருந்துகளை வழங்கும் போது பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் தொடர்பாக மருத்துவ வழங்கல் பிரிவின் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி இலக்கம் MSD/SB11/SPMC/ORD/PO/2017 என்ற கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கூட்டுத்தாபனத்தால் கூட்டுமுயற்சிகளுடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கைகளை அந்த நிபந்தனைகளை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் மருத்து வழங்கல் பிரிவிற்கு பகிர்ந்தளிக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரையில் உரிய மருந்துகளின் ஆயுட்காலம் ஆகக் குறைந்தது 85 சதவீதம் மாத்திரமாக அளவாகக் காணப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமுயற்சி உடன்படிக்கைகளில் 75 சதவீதமாக இருக்க வேண்டியமை காண்பிக்கப்பட்டமையால் மருந்து தரத்திற்குப் புறம்பான சந்தர்ப்பங்களின் போது மருந்து நியமத்திற்கு புறம்பான சந்தர்ப்பத்தின் போது அந்த தொகுதிகளுக்கு உரிய மொத்த பட்டியல் பெறுமதிக்கு சமமான பெறுமதி மற்றும் அந்த மருந்துகள் உரிய பிரகாரம் அழிவடையச் செய்வதற்காக பட்டியல் பெறுமதியில் 25 சதவீத நிர்வாகக் கட்டணம் அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் கூட்டுமுயற்சி உடன்படிக்கைகளில் அவ்வாறான நிபந்தனை உள்ளடக்கப்படாது இருந்தமையும், தாமதமாகி வழங்கப்படுமாயின் அதற்காக தண்டப்பணம் அறவிட வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும் அது தொடர்பாக நிபந்தனைகள் கூட்டுமுயற்சி உடன்படிக்கையில் உள்ளடக்கப்படாமையின் காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு மாத்திரம் உரிய பொறுப்புக்கள் மற்றும் நட்டங்களை ஏற்க வேண்டி இருந்தது.

(கே) உத்தேசிக்கப்பட்ட லோட்டஸ் பாமா புதிய உற்பத்திக் கூடம் நாட்டில் அடிப்படை மருந்துத் தேவைகளை மேவுகை செய்கின்ற உற்பத்தி தொழிற்சாலைகள் 05 ஐ ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்ததுடன் 03 வருடங்களுக்கு பின்னர் அதில் முதலாவது கட்டமாக முன்னுரிமை வழியினைப் பெற்று பொதுவான மருந்து உற்பத்திகளுக்கான தொழிற்சாலைகளை ஸ்தாபிப்பதற்காக ஐக்கிய அமெரிக்க USD 13.1 மில்லியனுக்கு சமமான ரூபா 4,349.2 மில்லியன் செலவினம் ஒன்று மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. 2022 ஒக்தோபர் 20 ஆந் திகதிய இலக்கம் BP/44/22 என்ற பணிப்பாளர் சபைப் பத்திரம் மற்றும் ஒக்தோபர் 07 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த செயற்திட்டத்தின் கீழ் எதிர்பார்க்கப்பட்ட 03 உற்பத்திக் கூடங்களை நிர்மாணிப்பதற்கு 20 ஏக்கர் பரப்பளவு போதியளவாக இருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் ரூபா 322.4 மில்லியன் செலவில் 65 ஏக்கர் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. மேலும் 2024 பெப்ரவரி 02 ஆந் திகதி கூடிய அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழுவினால் செயற்திட்டத்திற்குரிய ஒவ்வொரு துறைகளைகளையும் மேவுகை செய்யும் வகையில் சாத்தியவள ஆய்வு மேற்கொள்ள வேண்டியிருந்தமை காண்பிக்கப்பட்ட போதிலும் அதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. 2022 முதல் 2026 வரையான ஐந்து வருட திட்டத்தின் பிரகாரம் செயற்திட்டம் 03 வருடங்களில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதிலும் கணக்காய்வுத் திகதியான 2025 மே 27 வரையிலும் 03 வருடங்களும் 05 மாதங்களும் கடந்திருந்த போதிலும் பௌதீக செயல்முன்னேற்றம் பூச்சியமாகக் காணப்பட்டது.

கை) சதுர அடி 18,439 பரப்பளவை உடைய கூட்டுத்தாபனத்திற்கு உரிய புளத்சிங்களவில் அமைந்துள்ள நான்கு மாடிக் கட்டிடத்தில் 3,762 சதுர அடி அளவான தரைமாடி மாத்திரம் கூட்டுத்தாபனத்தின் களஞ்சிய நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் 10,837 சதுர அடி பரப்பளவை உடைய ஏனைய 03 மாடிகளும் உச்ச பயன்பாடு இன்றி விளைவற்றுக் காணப்பட்டது. மேலும் கட்டிடத்தில் பொதுப் பரிசோதனை ஆய்வு கூடம் மற்றும் பயிற்சிப் பாடசாலை ஸ்தாபிக்கும் நோக்கில் பெறப்பட்ட 30 கேட்போர் கூடக் கதிரைகள் மற்றும் 10 மண்டபக் கதிரைகள் என்பன 05 வருட காலம் முதல் பயன்படுத்தப்படாது இருந்ததுடன் அந்த பொருட்கள் அழிவடைந்து செல்லும் நிலையில் காணப்பட்டது.

(கொ) கூட்டுத்தாபனம் தற்போது பயன்படுத்துகின்ற குளிரூட்டி முறைமையில் போதியளவான தன்மை தொடர்பாக 2019 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட விரிவான வலுசக்தி கணக்காய்வின் பரிந்துரையின் படி தயாரிக்கப்பட்ட குளிரூட்டி கேள்வி தேவையினை பூர்த்தி செய்யும் செயற்திறன் குளிரூட்டி முறைமை ஸ்தாபிக்கும் முன்மொழிவிற்கு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சபை அங்கீகாரம் வழங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அது அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(கோ) மீளாய்வாண்டில் கூட்டுத்தாபனத்தின் ஒட்டுமொத்த விற்பனை மதிப்பீடு ரூபா 29,250.25 மில்லியன் ஆக இருந்ததுடன் உள்ளபடியான விற்பனை வருமானம் ரூபா 28,202.8 மில்லியன் ஆகக் காணப்பட்டது. 2019 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரையான காலத்தில் கூட்டுமுயற்சி உற்பத்திகளில் காணப்படுகின்ற பங்களிப்பு அதிகரித்துச் செல்லுதலின் விளைவாக ஒட்டுமொத்த விற்பனை அதிகரித்திருந்த போதிலும் கூட்டுதாபனத்தின் உற்பத்தியில் இருந்து கூட்டுத்தாபனத்தின் விற்பனை வருமானத்திற்காகக் காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு வீழ்ச்சியடைந்திருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் கூட்டுமுயற்சிகளில் ஒட்டுமொத்த வருமானத்திற்கு காண்பிக்கப்படுகின்ற பங்களிப்பு ரூபா 20,149.08 மில்லியன். அதாவது 71.4 சதவீதமும், கூட்டுத்தாபனத்தின் பங்களிப்பு ரூபா 8,053 மில்லியனும் அதாவது 28.6 சதவீதம் ஆகக் காணப்பட்டது.

(கௌ) 2016 ஆம் ஆண்டின் போது Paracetamol என்ற வியாபார பெயரின் கீழ் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டதுடன் அந்த மருந்தில் மீளாய்வாண்டில் 720,000 பொதி அலகுகள் விற்பனை செய்யப்பட்டு ரூபா 178,200,000 உழைப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. மருந்து பட்டோலை தேவையற்ற உயர்ந்த சந்தை கோரிக்கை காணப்படுகின்ற இந்த மருந்தின் வியாபாரப் பெயரை மேம்படுத்துவதற்காகவும் மேம்படுத்தல் செலவினம் செய்யப்பட்டிருந்த போதிலும் திட்டமிடப்பட்ட பிரகாரம் உற்பத்தி மேற்கொள்ளப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் விற்பனை செய்யப்பட்ட அளவு Pacidol பொதிகள் 114,150 அலகுகளாக இருந்ததுடன் அதில் உழைக்கப்பட்ட வருமானம் ரூபா 30,513,176 மாத்திரம் ஆக இருந்தது.

(ச) Ciprofloxacin Tablets USP 500mg மருந்தில் 2024 சனவரி முதல் ஒக்தோபர் வரை உள்நாட்டு சந்தை விநியோகிப்பாளர்களினால் மருந்து அலகுகள் 32.8 மில்லியன் கோரப்பட்டிருந்தது. 2024 ஒக்தோபர் 23 ஆந் திகதி வரை மருந்து அலகுகள் 2.36 மில்லியன் ஆன மிகவும் குறைந்த அளவு வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டிற்காக கூட்டுத்தாபனத்தின் விற்பனைத் திட்டத்தின் பிரகாரம் Ciprofloxacin USP 250mg மற்றும் 500mg மருந்துகளில் முறையே 13.5 மில்லியன் மற்றும் 13.2 மில்லியன் ஆக விற்பனை செய்வதற்காக திட்டம் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் Ciprofloxacin Tablets 250mg மருந்தில் எந்த ஒரு அலகும் உற்பத்தி செய்வதற்கு உற்பத்தி பிரிவு தவறி இருந்தது. உள்நாட்டு சந்தையின் விநியோகிப்பாளர்களிடம் இருந்து ஆகக் கூடிய கேள்வி உள்ள Ciprofloxacin Tablets HCL USP அப மற்றும் Ciprofloxacin Tablets USP 250mg and 500mg மருந்தை உற்பத்தி செய்வதற்கு Ciprofloxacin HCL USP மருந்து மூலப் பொருட்கள் அதிக அளவில் களஞ்சியத்தில் காணப்பட்ட போதிலும் உற்பத்திப் பிரிவிற்கு அந்த மருந்துகளை உரிய காலத்தில் உற்பத்தி செய்வதற்கு முடியாமையினால் கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக் கொள்வதற்கு இருந்த ஆகக் கூடிய வருமானம் இழக்கப்பட்டிருந்தது.

(சா) 2025 ஏப்ரல் 30 ஆந் திகதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 449 ஆக இருந்ததுடன், உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 334 ஆனமையால் வெற்றிடமான ஊழியர் எண்ணிக்கை 115 ஆகக் காணப்பட்டது. அதன் பிரகாரம் மனிதவளம் மற்றும் நிதிப் பிரிவுகளில் பிரதான 02 பதவிகளை உள்ளடக்கிய 10 பதவிகளும், நிறைவேற்று அல்லாத தரத்தில் 82 பதவிகளும் மற்றும் சிற்றூழியர் பதவியில் 23 வெற்றிடங்களும் காணப்பட்டது.

(சி) ஆட்சேர்ப்பு நடைமுறை 2013 மார்ச் 28 ஆந் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களம் அங்கீகரித்து இருந்ததுடன் அந்த அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் அவ்வப்போது அங்கீகரிக்கப்பட்ட திருத்தங்கள் மற்றும் புதிய பதவிகளை உள்ளடக்கிய ஆட்சேர்ப்பு திட்டம் ஒன்று அங்கீகரிக்கப்பட்டமையால் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் சிக்கலான நிலைமை ஏற்பட்டிருந்ததுடன் ஒரே தொகுதிகளுக்குரிய பதவிகளுக்காக பல்வேறு தகைமைகளில் ஆட்சேர்ப்பதற்கு இதன் கீழ் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

# கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

(சீ) 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி முதல் 2024 திசெம்பர் 01 வரையான காலத்தில் 06 சந்தர்ப்பங்களின் போது பத்திரிகை அறிவித்தல் மூலம் பிரதிப் பொது முகாமையாளர் (மருந்து பட்டோலை மற்றும் ஆராய்ச்சி பரிசோதனை) பதவிக்காக உத்தியோகத்தர் ஒருவரை சேர்ப்பதற்கு விண்ணப்பம் கோரப்பட்டிருந்த போதிலும் தகைமையுள்ள உத்தியோகத்தரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அந்த பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2016 ஆம் ஆண்டு முதல் முகாமையாளர் ஒருவர் நியமிக்கப்பட்டிருந்தார்.

(சு) கூட்டுத்தாபனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் பணிப்பாளர் சபை செயலாளர் பதவி ஒன்று காணப்படாதிருந்துடன் கனிஸ்ட முகாமைத்துவ மட்டத்தில் 02 பிரத்தியேக செயலாளர் பதவிகள் மாத்திரம் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் பணிப்பாளர் பத்திரம் மற்றும் பணிப்பாளர் சபைக் கூட்டங்களுக்கு உரிய ஏதாவது நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற பணிகளும் பிரத்தியேக செயலாளருக்கு எழுத்து மூலம் கையளிக்கப்பட்டிருந்தது.

(சூ) மீளாய்வாண்டில் நடைபெற்ற தரக் கட்டுப்பாட்டு உத்தியோகத்தர் பதவிகள் 02 இற்காக ஆட்சேர்க்கும் நேர்முகப் பரீட்சையில் இருந்து உள்ளக விண்ணப்பதாரராக ஒரு பதவிக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த உத்தியோகத்தருக்கு உரிய நேர்முகப் பரீட்சையின் போது செயலாற்றல் தொடர்பாக 25 புள்ளிகள் வழங்கி ஏனைய உள்ளக விண்ணபதாரர்களுக்கு 05, 07 புள்ளிகள் ஆன குறைந்த புள்ளிகள் வழங்கியமை மற்றும் செயலாற்றல் தொடர்பான நேர்முகப் பரீட்சை சபையின் சகல அங்கத்தவர்களும் ஒன்றிணைந்து புள்ளி வழங்கியமை போன்ற விடயங்கள் காரணமாக அந்த நேர்முகப் பரீட்சை சபை இலக்கிடப்பட்ட விண்ணப்பதாரரரை சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் சுயாதீனம் மற்றும் பக்கசார்பற்ற நடவடிக்கை எடுத்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்படவில்லை.

**ஓப்பம்: ஜீ.எச்.டீ. தர்மபால**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)**

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

**2.2.2**

**(அ) 2015 இன் 05 ஆம் இலக்க தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைச் சட்டத்தின்**

**(i) 64(1) ஆம் பிரிவு**

மீளாய்வாண்டில் பதிவினைப் புதுப்பிக்க வேண்டிய 08 மருந்துகளுக்குரிய ஆவணங்கள் ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபைக்கு உரிய கால எல்லையில் சமர்ப்பிக்காமையின் காரணமாக அந்த மருந்துகளுக்கான பதிவினைப் புதுப்பிப்பதற்கு 30 நாட்களுக்கும் 60 நாட்களுக்கும் இடையிலான வீச்சிலான காலதாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது. தற்போது அவ்வாறான தாமதத்தை தடுக்கும் வகையில் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கின்றது.

**(ii) 64(2) ஆம் பிரிவு**

அதில் 07 மருந்துகளின் பதிவினைப் புதுப்பிப்பதற்காக உரிய கட்டணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையால் அந்த மருந்துகளுக்காக பதிவு புதுப்பித்தல் தாமதம் அடைந்திருந்தது.

தற்போது அவ்வாறான தாமதத்தை தடுக்கும் வகையில் முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்கின்றது.

**(ஆ)**

**(i)**
கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது. அவ்வாறு அது தொடர்பாக சாத்திய வள ஆய்வு மேற்கொள்வதற்கு அமைச்சின் ஆலோசனைக் குழுவின் மூலம் குழு ஒன்று நியமிக்கப்பட்டதுடன் இவ்வாறு சாத்தியவள ஆய்வு மேற்கொள்வதற்கு நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரை மற்றும் ஆலோசனையின் பிரகாரம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

**(ii) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 110**

2025 ஆம் ஆண்டிற்கு உரிய நிறுவனம் தொடர்பான இழப்பு நட்டப் பதிவேடு ஒன்றை பேணிச் செல்வதற்கு தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது 2025 ஆம் ஆண்டிற்காக ஒழுங்கான முறையில் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**(இ) VI அத்தியாயத்தின் 2.10 ஆம் பந்தி**

இதன் பின்னர் வழங்கப்படுகின்ற வழங்கப்படுகின்ற சகல நியமனங்கள் தொடர்பாகவும் திணைக்களத் தலைவரின் மூலம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

**(ஈ) 1997 பெப்ரவரி 03 ஆந் திகதிய இலக்கம் 6/97 என்ற அரச நிர்வாக சுற்றறிக்கையின் 2 ஆம் பந்தி**

| பதவி | பத்திரிகை அறிவித்தல் பிரசுரிக்கப்பட்ட திகதி | கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்ப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் |
|---|---|---|---|
| பிரதி பொது முகாமையாளர் - மனித வளம் | 2017.07.02 | 11 | 2017.08.15 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தி ஒப்பந்த அடிப்படையில் உத்தியோகத்தர் ஒருவர் 2017.09.20 ஆந் திகதி சேர்க்கப்பட்டிருந்தார். |
| பிரதி பொது முகாமையாளர் - மனித வளம் | 2018.09.23 | 09 | 2019.06.27 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதும் ஆட்சேர்ப்பதற்கு பொருத்தமான விண்ணப்பதாரர் காணப்படவில்லை. |
| பிரதி பொது முகாமையாளர் - மனித வளம் | 2019.09.08 | 07 | தகைமையுடன் உள்ள விண்ணப்பங்கள் காணப்படவில்லை. |
| பிரதி பொது முகாமையாளர் - மனித வளம் | 2020.09.20 | 29 | 2021.12.01 நேர்முகப் பரீட்சை நடாத்தி உத்தியோகத்தர் ஒருவர் 2022.01.18 ஆந் திகதி சேர்க்கப்பட்டதுடன் அவர் 2022.12.01 ஆந் திகதி சேவையில் இருந்து கேட்டு விலகி இருந்தார். |
| பிரதி பொது முகாமையாளர் - மனித வளம் | 2024.12.01 | 15 | 2025.03.18 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போது ஆட்சேர்ப்பதற்கு தகுதியான விண்ணப்பதாரர் காணப்படவில்லை. |
| பிரதி பொது முகாமையாளர் - நிதி | 2025.03.16 | | 2024.02.14 ஆம் திகதி முதல் இந்த பதவி வெற்றிடமாக உள்ளதுடன் இந்த பதவிக்காக ஆட்சேர்ப்பதற்கு பணிப்பாளர் சபை மற்றும் பிரதம குழு ஒன்றின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. 2025.03.16 ஆந் திகதி கோரப்பட்ட விண்ணப்பம் பொது முகாமையாளர் அலுவலகத்திற்கு கிடைத்துள்ளது. |
| பிரதிப் பொது முகாமையாளர் - மருந்து பட்டோலை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 2018.10.04<br>2019.02.24<br>2019.09.08<br>2021.12.12 | 01<br>05<br>03<br>07 | தகைமையுடன் உள்ள விண்ணப்பங்கள் காணப்படவில்லை. |

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

| | | | |
|---|---|---|---|
| பிரதிப் பொது முகாமையாளர் - மருந்து பட்டோலை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 2020.09.20 | 12 | 2021.12.01 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போது விண்ணப்பதாரர் நேர்முகப் பரீட்சைக்கு வருகைதரவில்லை. |
| பிரதிப் பொது முகாமையாளர் - மருந்து பட்டோலை, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 2024.12.01 | 08 | தகைமையுடன் உள்ள விண்ணப்பங்கள் காணப்படவில்லை. |
| பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு | 2019.05.26 | 02 | தகைமையுடன் உள்ள விண்ணப்பங்கள் காணப்படவில்லை. |
| பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு | 2019.09.08 | 06 | தகைமையுடன் உள்ள விண்ணப்பங்கள் காணப்படவில்லை. |
| பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு | 2020.09.20 | 12 | 2021.12.01 நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதும் விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு வருகை தரவில்லை. |
| பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு | 2021.12.12 | 10 | 2022.03.29 ஆந் திகதி நேர்முகப் பரீட்சை நடாத்தப்பட்ட போதும் ஆட்சேர்ப்பதற்கு தகுதியான விண்ணப்பதாரர் காணப்படவில்லை. |
| பிரதிப் பொது முகாமையாளர் - தரக் கட்டுப்பாடு | 2024.12.01 | 09 | தகைமையுடன் உள்ள விண்ணப்பங்கள் காணப்படவில்லை. |

**(உ) 2021 நவம்பர் 16 ஆந் திகதிய அரசாங்கத்திற்குச் சொந்தமான முயற்சிகள் (SOEs) இற்கான செயற்பாட்டுக் கைநூல் 3.4(ஓ) மற்றும் 2020 ஒக்தோபர் 26 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் ஏஐ ஆம் பந்தி**

தற்போது ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் மனித வள முகாமைத்துவ கல்வி ஆய்வுப் பிரிவின் ஆலோசனையைப் பெற்றுக் கொள்வதற்காக எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

(ஊ) சில உத்தியோகத்தர்களிடம் இருந்து தற்போது அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் மிகுதி உத்தியோகத்தர்களினால் இது தொடர்பாக எழுத்து மூல முறைப்பாடு அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டமையால் அது தொடர்பாக வழங்கப்படுகின்ற பதிலின் அடிப்படையில் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம்.

**(எ) அரசாங்கத்தின் பெறுகைகள் வழிகாட்டியின் 4.2.1 மற்றும் 4..2.2 வழிகாட்டி**

தற்போது மேற்கொள்ளப்படுகின்ற பெறுகைகளுக்காக பெறுகைத் திட்டம் மற்றும் பெறுகைக் கால அட்டவணை தயாரிக்கப்படுகின்றது.

**(ஏ) 5.3 ஆம் பிரிவு**

நிறுவனத்திற்கு தேவையான நிதியம் முகாமைத்துவம் செய்து ஆகக் கூடிய அளவில் திறைசேரியில் இருந்து பெறக் கூடிய அளவு திரண்ட நிதியத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

**(ஐ)**
2021 நவம்பர் 16 ஆந் திகதி இலக்கம் 01/2021 என்ற சுற்றறிக்கையின் வெளியிடப்பட்ட பொது முயற்சிகளுக்கான நிறுவன நிர்வாகம் தொடர்பான வழிகாட்டி

**i. 2.6 ஆம் பந்தி**

இந்த பதவியில் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்குத் தேவையான மாதிரிகள் தயாரித்து கேள்வி கோருவதற்காக பெறுகை சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்டுள்ளது.

**ii. 3.2 ஆம் பந்தி**

2023 ஆம் ஆண்டுக்காக நடாத்தப்பட வேண்டிய வருடாந்த செயலாற்றுல் மீளாய்வுக் கூட்டத்தை நடாத்துவதற்கு முடியாமையினால் 2024 இல் எழுந்த பல்வேறு நிலமைகள் மற்றும் 2024 செப்தெம்பர் முதல் பணிப்பாளர் சபை ஒன்று காணப்படாமை போன்றவை காரணமாக இருந்தது. 2024 ஆம் ஆண்டுக்குரிய இந்தக் கூட்டம் 2025 மார்ச் 25 ஆந் திகதி நடாத்துவதற்கான நடவடிக்கை தயார் செய்யப்பட்ட போதும் பொதுத் திறைசேரியின் அங்கத்தவர்களுக்கு பங்குபற்றுவதற்கு முடியாமையின் அடிப்படையில் அதனை வேறொரு திகதிக்கு காலம் பிற்போடப்பட்டிருந்தது. எதிர்காலத்தில் இந்தக் கூட்டங்களை குறித்துரைத்த பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

**iii. 3.2 ஆம் பந்தி**

எதிர்காலத்தில் செயல்நடவடிக்கைத் திட்டத்திற்காக ஒவ்வொரு செயற்பாடுகளுக்காகவும் நிதிமதிப்பீட்டுப் பெறுமதியை குறிப்பிடுவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**iv. 4.3 ஆம் பந்தி**

மீளாய்வாண்டில் இடர் குழுக் கூட்டங்கள் 02 நடாத்தப்பட்டதுடன் இறுதிக் காலாண்டில் இடர் குழுக் கூட்டம் நடாத்துவதற்கு முடியாதிருந்தது. அதாவது உரிய காலத்தில் பணிப்பாளர் சபை நியமிக்கப்படாமையால் ஆகும்.

**(ஒ) 2015 யூன் 04 ஆந் திகதிய இலக்கம் BP/30/15 மற்றும் 2022 செப்தெம்பர் 22 ஆம் திகதிய இலக்கம் BP/62/22 என்ற பணிப்பாளர் சபைத் தீர்மானம்**

இது தொடர்பாக எழுத்து மூல அங்கீகாரம் கோரி பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக இன்னும் உரிய பதில் ஒன்று கிடைத்திருக்கவில்லை. அவ்வாறே இந்த அங்கீகாரம் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தை சந்தித்து கலந்துரையாடப்பட்டதுடன் எதிர்காலத்தில் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது. இது தொடர்பாக தொழிற்சங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

**(ஓ)**

i. கூட்டுமுயற்சிகள் ஏற்படுத்திய முதலீட்டாளர்களின் உற்பத்திக் கூடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக தொடர்பாக எங்களால் அவதானிக்கப்படுகிறது எங்களால் அவதானிக்கப்படுகின்றது. உதாரணமாக Green Through நிறுவனத்தால் அவர்களின் உற்பத்திக் கூடம் நிர்மாணிக்கும் நடவடிக்கைகளை பார்ப்பதற்காக வருமாறு அறிவிக்கப்பட்டதுடன் எங்களால் நிர்மாண நடவடிக்கைகள் அவதானிக்கப்பட்டது.

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

**ii. கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.**

Medicom நிறுவனத்தின் விலைக் குழு அங்கீகரித்த உற்பத்தி செயற்பாடுகளில் 2022 ஆம் ஆண்டில் வழங்கப்படவில்லை. அதனால் மருத்துவ வழங்கல் பிரிவிற்கு தேவையான மருந்துகள் உரிய பிரகாரம் வழங்குவதற்கு முடியாமையின் அடிப்படையில் Medicom நிறுவனத்தின் வழங்கல் செயலாற்றல் மட்டம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுகின்றமையால் அவர்களிடம் இருந்து மருந்துகள் கொள்வனவு செய்யப்படவில்லை.

**2.2.4**

(அ) இந்த செயற்திறன் தொடர்பாக சிறிய விளக்கமளித்தல்கள் பின்வருமாறு.
ஆசிய அபிவிருத்தி வங்கி (ABD) மற்றும் SEA மூலம் தீர்மானிக்கப்பட்ட செயற்திட்டமாக தரக் கட்டுப்பாட்டு ஆய்வு கூடத்திற்கு இலவசமாகக் கையளிக்கப்படுகின்ற நவீன இலச்சினங்களை உடைய மற்றும் உயர் செயற்திறனுடைய யுஊ முறைமை ஸ்தாபிக்கும் செயற்திட்டத்திற்கு இணங்க அதற்கு அனுசரணையாக மற்றும் அதன் துணைப்பிரிவுகளாக SPMC நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு உப செயற்திட்டங்கள் அடிப்படையாகக் கொண்டு இந்த பெறுகை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இந்த மத்திய மயப்படுத்தப்பட்ட வளிப்பதனாக்கி முறைமை தற்போது காணப்படுகின்ற நவீன பிரிவினை உள்ளடக்கி அதற்கு US$ 100,000.00 (இலங்கை ரூபா 35,000,000.00) அளவான பெறுமதியான வளிப்பதனாக்கி முறைமையாக இருந்ததுடன் அதில் சகல தரப்பினரும் அன்னியோன்னிய இணக்கப்பாடு மற்றும் அனுபவத்தின் அடிப்படையாகக் கொண்டு முழுமையாக இலவசமாக வழங்கப்பட்ட நன்கொடை ஆகும்.

மேற்கூறப்பட்ட பிரதான செயற்திட்டத்திற்கு உரிய SPMC நிறுவனம் மூலம் மேற்கொள்வதற்கு மிகவும் சிறிய தேவைகள் சிலவற்றை நிறைவேற்றுவதிலே தேவையாக இருந்தது. அதாவது

01) சகல நடவடிக்கைகளுக்காகவும் தேவையான ஒத்துழைப்பை வழங்குதல்
02) கூரையினைக் அகற்றி (Ducting) இற்காக இடம் வழங்குதல்.
03) ஈடு கொடுக்கின்ற புதிய கூரையினைப் பொருத்துதல்.
04) Ducting இற்கு தேவையான பொருட்களை வழங்குதல் மற்றும் இணைப்பு நடவடிக்கைகள்.
05) தேவையான பிரகாரம் மின்சாரம் மற்றும் ஏனைய வசதிகளை வழங்குதல்.

அதன் பிரகாரம் ஆரம்ப செயற்திட்டத்திற்கு மேலதிகமாக மேற்கொள்ளப்படுகின்ற உப செயற்திட்டங்களின் ஒரு விடயப் பரப்பாகக் கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், ஒவ்வொரு சேவையும் வழங்கப்பட்டது. அதன் பிரகாரம் இதன் போது மாற்றமான சேவைகளுக்காக மொத்தக் கிரயம் மதிப்பீடு ஒன்று தயாரித்தல் குறுங்கால ரீதியில் மேற்கொள்ளுல் நடைமுறையில் இலகுவான பணியாக இருக்கவில்லை.

அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இவ்வாறான சேவை ஒன்றைப் பெற்றுக் கொள்ளும் போது மொத்தக் கிரய மதிப்பீடு ஒன்றைத் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

i. மேற்கூறப்பட்ட விளக்கமளித்தல்களின் பிரகாரம் இந்த உப செயற்திட்டங்கள் அவசர நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டமையால் நிதிப் பற்றாக்குறைக்காக நிதிப் பிரிவின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் ஒப்பந்தம் கையளித்தல் அதற்கு இணையாக மேற்கொள்ளப்பட்டது.

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

ii. இந்த நடவடிக்கைகளுக்காக கையளித்தல் கடிதம் 2024.02.02 ஆந் திகதி அனுப்பப்பட்டதுடன் முழுமையான செயற்திட்டம் 2024.02.08 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இதனை மிகவும் அவசர நடவடிக்கையாக மேற்கொண்டமையால் செயலாற்றல் காப்புறுதியை பெற்றுக் கொள்ளல் கைவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது செயலாற்றல் காப்புறதியை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

iii. முன்னைய தகைமைகளாக நாரம்மல மற்றும் பதுளை பிரதேசங்களில் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்கள் பற்றிய விபரங்கள் கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. (File Folio – 22/52 – 22/53)

இந்த கேள்வி கோருதல் மிகவும் அவசர மற்றும் அத்தியாவசிய நடவடிக்கையாக இருந்தமையால் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட இரண்டு கேள்விகளுக்கு இடையே ஒரு வருட வங்கிக் கணக்கு அறிக்கையை கவனத்தில் கொண்டு இந்தக் கேள்வி கையளிக்கப்பட்டிருந்தது.

iv. இந்த முழுமையான செயற்திட்டம் 2024.02.08 ஆந் திகதிக்கு முன்னர் பூர்த்தி செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இது மிகவும் அவசர நடவடிக்கையாக மேற்கொள்ளப்பட்டமையால் முறையான ஒப்பந்த உடன்படிக்கையை தயாரித்து கையொப்பம் இடுவதற்கு போதியளவான காலம் காணப்படவில்லை.
அதன் பிரகாரம் எதிர்காலத்தில் இவ்வாறான சேவைகளைப் பெற்றுக் கொள்ளும் போது ஒப்பந்த உடன்படிக்கையினை தயாரித்து கையொப்பம் இடுவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கின்றோம்.

**2.3 ஏனைய விடயங்கள்**

(அ) இது தொடர்பாக உரிய கூட்டுமுயற்சி மூலம் அறவிடப்பட்டதாகக் காண்பித்து எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. விசேடமாக மருத்துவ வழங்கல் பிரிவில் இருந்து அறவிடப்பட்ட இந்த அறவிடல்களை மீண்டும் பரீட்சித்து உரிய அளவிடல்களின் அளவு கூடிய விரைவில் எழுத்து மூலம் அறிவித்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. அவ்வாறே 2025 ஆம் ஆண்டிற்காக உரிய அறவிடல்கள் இது தற்போது அறவிடப்பட்டுள்ளது.

(ஆ) பொதுத் திறைசேரியில் இருந்து நிதியினை விடுவிக்கின்ற அளவின் பிரகாரம் நிறுவனத்தின் தேவையின் அடிப்படையில் உரிய நிதி முகாமைத்துவம் செய்யக் கூடிய ஆகக் கூடிய வகையில் உரிய செலுத்துதல்கள் கூட்டு முயற்சிகளுக்கு இடையே பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் திறைசேரியில் இருந்து நிதி கிடைக்கின்ற முறையின் பிரகாரம் நிறுவனத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளுக்குத் தேவையான நிதியினை முகாமைத்துவம் செய்து உரிய செலுத்த வேண்டிய மீதிகளை ஆகக் கூடிய அளவில் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

(இ) 2024 ஆம் ஆண்டில் நிலையான சொத்து மெய்மையாய்வின் போது பௌதீக ரீதியில் காணப்படாத நிலையான சொத்துக்கள் அவ்வாறு காணப்படாது இருக்குமாயின் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டி இருந்ததுடன் சில வேளைகளில் நிலையான சொத்துக்களின் இலக்கம் கழன்று இருந்தமை மற்றும் நிலையான சொத்துக்கள் உரியவாறு மாற்றுதல் நாளதுவரையாக்கப்படாமையால் ஏற்பட்ட வசதியீனத்தால் பௌதீக மெய்மையாய்விற்கு உட்படுத்தப்படவில்லை சொத்துக்களை அடையாளம் காணும் இலக்கம் கழன்று செல்லாத வகையில் புதிய திட்டம் ஒன்றைப் பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டதுடன் எதிர்காலத்தில் இந்தப் பிரச்சனைகளைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஈ) நடைமுறை வேலைக் கணக்கில் உள்ளடக்கப்பட்ட நிர்வாகக் கட்டடத்திற்காக தற்போது வரையில் ரூபா 27,550,136 செலவிடப்பட்டதுடன் இந்த நிர்வாகக் கட்டிடம் நிர்மாணித்தல் தொடர்பாக தற்போது வரை உயர் முகாமைத்துவம் மூலம் குறித்துரைத்த தீர்மானம் எடுக்கப்படாது இருந்தமையால் எதிர்காலத்தில் நிர்வாகக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு இடமளிக்கப்பட்டதுடன் நிர்வாகக் கட்டிடம் நடைமுறைக் வேலைக் கணக்கில் பேணிச் செல்லப்பட வேண்டி இருந்தது.

# 2024 இன் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பாக தலைவரின் கருத்துரை

(ஊ) ரூபா.13,557,223 பெறுமதியான மூலப்பொருள் இருப்பு ஒன்று கூட்டுத்தாபனத்தினால் கூட்டுமுயற்சிகளுக்கு கடன் அடிப்படையில் 2023 மார்ச் மாதம் 3ம் திகதி மருந்தாக்க மூலப்பொருட்கள் பரிமாற்று திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட போதிலும், குறித்த தொகையை அறவிடுவதற்கு இரண்டு வருடங்களுக்கு மேலாக நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) 2024 ஆம் ஆண்டில் மருத்து வழங்கல் பிரிவிற்காக பொதுத் திறைசேரியில் இருந்து கிடைத்த ரூபா 25,780,890,000.00 வழங்கல் கட்டளைகளுக்குரிய பட்டியல்கள் தீர்த்து வைத்தல் சரியாகக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதாவது 2024 ஆம் ஆண்டிற்காக 96 சதவீத பட்டியல்கள் தீர்த்து வைத்தல் இனங்காணப்பட்டதுடன் மிகுதி சிறு அளவு மாத்திரம் பட்டியல் தீர்த்து வைக்கப்படவில்லை. 2024 ஆம் ஆண்டிற்குரிய கடன்பட்டோர் காலப்; பகுப்பாய்வு தயாரிக்கக் கூடியதாக இருந்ததுடன் 2024 ஆம் ஆண்டின் இறுதி மீதிக்கான காலப் பகுப்பாய்வு 2023 ஆம் ஆண்டிற்காக ரூபா 19,452,851,018.67 பட்டியல் பெறுமதிகளுக்கு உரிய பட்டியல் இன்னும் தீர்த்து வைக்க முடியாதிருந்தமையால் காலப்பகுப்பாய்வு மேற்கொள்ள முடியாதிருந்தது. இந்த பட்டியல்களை தீர்த்து வைப்பதற்கு தொடர்ச்சியாக மருத்து வழங்கல் பிரிவுடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது.

(எ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திப் பிரிவினால் அபிவிருத்தி செய்து வணிக ரீதியான உற்பத்திகளுக்காக 2023 ஆம் ஆண்டின் போது தேசிய ஔடதங்கள் ஒழுங்குபடுத்தல் அதிகார சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அனுப்பப்பட்ட 12 மருந்துகளில் 04 இற்கான அங்கீகாரம் 2024 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்தது. அந்த மருந்துகளின் பெயர்

1. Celecoxib Capsule 200 mg
2. Montelukast Tablets 5 mg
3. Montelukast Tablets 10 mg
4. Methyl Prednisolone Tablets 4 mg

